REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 மே 15 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 115 | Wednesday 15, May, 2024 | 24 பக்கங்கள் | 50/-

## கையடக்க தொலைபேசியூடாக மின்சாரம் தாக்கிய சிறுமி பலி

கையடக்கத் தொலைபேசியைப் பார்த்துக்கொண்டிருந்த முன்பள்ளிச் சிறுமி ஒருவர், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இச்சம்பவம் பயாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதிவாகியுள்ளது.

மக்கொன, முங்ஹேன, லக்தினு வீடமைப்புத் திட்டத்திலுள்ள மூன்றரை வயதுடைய விஹிகி நெதாஷா என்ற முன்பள்ளிச் சிறுமியே இவ்வாறு

06

## முப்படையினர், பொலிஸாருக்கு அரச காணிகள் வழங்கும் திட்டம்

### ஜனாதிபதியினால் விசேட குழு நியமனம்

படைவீரர்களுக்கான காணி வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் நேற்று (14) நியமிக்கப்பட்டுள்ள இக்குழுவின் தலைவராக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க செயல்படவுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், காணி ஆணையாளர் நாயகம், ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பிரதிநிதி ஆகியோரும் இந்தக் குழுவில் அங்கத்தவர்களாக இடம்பெற்றுள்ளனர்.

கடமைகளின் போது உயிரிழந்தவர்கள், காணாமல் போனோர் மற்றும் இயலாமைக்குட்பட்டோர், இளைப்பாறிய அத்துடன் தற்போது பணியில் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் முப்படையினர், இலங்கை பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் இராணுவத்தினருக்கு

06

## G.C.E O/L முடிந்தவுடன் உயர் தர வகுப்புக்கள்



கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் நிறைவடைந்தவுடன் உயர்தர வகுப்புகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பரீட்சைகள் நிறைவடைந்து பெறுபேறுகளை வெளியிடுவதற்கு ஆகக் குறைந்தது மூன்று மாதங்கள் செல்வதுண்டு. இக்கால கட்டத்தில் மாணவர்கள் பாடசாலை கல்வியிலிருந்து தூரமாகின்றனர். இதனால், உயர்கல்வி கற்கும் ஆர்வம் குறைவதற்கு இது காரணமாக அமைகிறது.

இவ்விடயத்தை கருத்திற்கொண்டு மாணவர்களின் நேரத்தை பயனுள்ளவாறு முகாமைத்துவம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாதாரண பரீட்சை பூர்த்தியானதுடன் உயர்

06

## நாட்டின் பொருளாதார நிலைமைக்கு ஆறு அம்ச விடயங்கள் முன்வைப்பு



நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை அடிப்படையாகக் கொண்டு 06 அம்ச விடயங்களை, பாத்ஃபைண்டர் மன்றத்தின் ஸ்தாபகரான மிலிந்த மொரகொட முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த ஆறு அம்ச விடயங்களை தெரிவித்தார். அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அரை மனதுடன் முன்வைத்த பொருளாதார மறுசீரமைப்புகள் முக்கிய பங்காற்றுவதே கசப்பான உண்மை. பொருளாதார சீர்திருத்தம் மற்றும் தனியார்மயமாக்கல் என்பன, வெற்றிகரமான அபிவிருத்தி திட்டத்தின் ஒருங்கிணைந்த விடயங்களென்ற உண்மையை சகல அரசியல் கட்சிகளும் சமூகங்களும்

06

## பல்கலைக்கழக கட்டமைப்பு பாரிய நெருக்கடியில்

# மாணவர் நலன் கருதி கடமைக்கு திரும்பவும்

### பல்கலை கல்விசாரா ஊழியர்களுக்கு UGC தலைவர் அழைப்பு விடுப்பு

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக பல்கலைக்கழக கட்டமைப்பு பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாக தெரிவித்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, மாணவர்களின் நலன் கருதி கல்விசாரா ஊழியர் அனைவரையும் கடமைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று (14) விசேட ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திய ஆணைக்குழுவின் தலைவர்

06

**பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள கல்விசாரா ஊழியர்களால், கொவிட் 19 காலத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு மேலும் ஒருவருடகால கல்வி பாதிப்பு ஏற்படும் எனவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டு**



## பாரம்பரிய பெருந்தோட்ட தொழிற்துறைக்கு பதில்

## புதிய விவசாய வர்த்தகத்துறை நாட்டுக்கு மிக அவசியம் - ஜனாதிபதி



பாரம்பரிய பெருந்தோட்டக் கைத்தொழிலுக்குப் பதிலாக புதிய விவசாய வர்த்தகத் துறையை உருவாக்கி, நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு செல்வதற்கு செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதிய சட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கிடையில் உள்ள தடைகள் நீக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, பெருந்தோட்டத்துறையில் புதிய தொழில்நுட்ப முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதுருகிரிய தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் புதிய கல்வி மற்றும் நிர்வாக கட்டடத்தை நேற்று (14) காலை திறந்து வைத்து

06

## நாட்டில் பாடசாலை மாணவர்களுக்காக

## 'சிசு சரிய' சேவைக்கு மேலும் 500 பஸ் வண்டிகள் இணைப்பு

### 2025 இல் நாடு முழுவதும் 2,000 பஸ்கள் சேவையில்



பாடசாலை மாணவர்களுக்கான சிசு சரிய பஸ்சேவைக்கு 2025 ஆம் ஆண்டு 500 பஸ்களை இணைத்து 'சிசு சரிய' பஸ்களின் எண்ணிக்கையை 2 000 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல் நடத்தியிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (14) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்

06

## ஜனாதிபதி பதவி; ரணிலுக்கு நிகரான தலைவர் எவரும் இல்லை

### வஜிர அபேவர்த்தன MP



ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைக்கு நிகரான தலைவர் எவரும் தற்போது இல்லையென, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இன்னும் 10 – 12 வருடங்கள் நாட்டை அவர் நிர்வகித்தால், இலங்கை மக்கள் உலகில் பலம் வாய்ந்தவர்களாக மேம்படுவார்களென்றும் அவர்

06

### பலஸ்தீனத்துக்கு சர்வதேச தலையீடு கோருவோர்

## சுயாதீன விசாரணையில் கவனம் செலுத்த வேண்டும்

*லோரன்ஸ் செல்வநாயகம்*



பலஸ்தீனம் தொடர்பில் சர்வதேச தலையீட்டைக் கோருபவர்கள், நாட்டில் 15 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற யுத்தம் தொடர்பான சுயாதீன விசாரணை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பி, எம்.ஏ. சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பலஸ்தீனத்தின் தற்போதைய நிலவரம் தொடர்பான

06

## பாராளுமன்றம் கலைக்கப்படும்: சில சதிகாரர்கள் போலி பிரசாரம்



பாராளுமன்றம் இந்தவாரம் கலைக்கப்படுமென சில சதிகாரர்களால் போலிப் பிரசாரத்தினால் பங்குச் சந்தை நேற்றைய தினம் 125 அலகுகளால் வீழ்ச்சியடைந்துள்ளதாக பங்குச் சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன

06



## 05

### இஸ்ரேலின் இனப் படுகொலையை கண்டிக்க அரசு முன் வரவேண்டும்

அடக்குமுறைகளை ஆதரிக்க முடியாது



## 03

### அடுத்த 05 வருடங்களில் மிகவும் ஆபத்தான நாடாகும் பிரிட்டன்

பிரதமர் ரிஷி சுனக் எச்சரிக்கை

## வாடகை வீடுகள், அறைகளில் தங்கியிருந்து குற்றச்செயல்கள்

### 1,78,613 பேர் மீது பொலிஸார் சந்தேகம்



நாடளாவிய ரீதியில் வாடகை வீடுகளில் தற்காலிகமாகத் தங்கியுள்ள 1,78,613 பேர் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களா? என்பதை ஆராய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரைக்கமைய, இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

06

## பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க புதிய சட்டமூலங்கள்

### சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே எம்.பி சபையில் சமர்ப்பிப்பு

*லோரன்ஸ் செல்வநாயகம்*



பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் இரண்டு புதிய சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தனிநபர் பிரேரணைகளாக இச்சட்டமூலங்களை சபையில் சமர்ப்பித்தார்.

அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் 30 வீதத்துக்குக் குறையாத வகையில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை

06

## இணுவில் ஐஸ் போதை உற்பத்தி ஆய்வுகூடம் அதிரடி சுற்றிவளைப்பு

### வீட்டிலிருந்த 04 பேர் தப்பியோட்டம்

*யாழ். விசேட நிருபர்)*



யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப் பொருள் உற்பத்தி நிலையமொன்றை பொலிஸார் சுற்றிவளைத்து, போதைப் பொருள் உற்பத்திப்

06

## கீழ் வளிமண்டலத்தில் தளம்பல்; அடுத்த சில நாட்களில் கடும் மழை



நாட்டைச் சூழவுள்ள பகுதிகளில், கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலையால், அடுத்த சில நாட்களில் மழை வீழ்ச்சி அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் பல இடங்களில் பி.ப. 01 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மத்திய, சப்ரகமுவ, கிழக்கு, தென் மற்றும் ஊவா மாகாணங்களில்

06

## இன்புளூவன்சா B: குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கு எச்சரிக்கை

### டொக்டர் தீபால் பெரேரா

நாட்டில் காய்ச்சல், இருமல், தொண்டைப் புண், மூக்கு வழிதல் அல்லது மூக்கடைப்பு, தசை அல்லது உடல் வலி, தலைவலி, சோர்வு போன்ற அறிகுறிகள் குறித்து, எச்சரிக்கையாக இருக்குமாறு சுகாதார நிபுணர்கள் பொதுமக்களை வலியுறுத்துகின்றனர்.

குழந்தைகள் மத்தியில் இது அதிகமாகக் காணப்படுவதால், பிள்ளைகளை உன்னிப்பாக அவதானிக்குமாறு பெற்றோர்களை அறிவுறுத்துவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். "வழக்கமாக நவம்பர் முதல்

06

## கல்விக்கு வயது தடையில்லை எண்பது வயதில் O/L பரீட்சை



எண்பது வயதில் க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதிய முதியவர், கல்விக்கு வயது ஒரு தடையல்ல என்பதை நிரூபித்துள்ளார். இம்முதியவர் பரீட்சை எழுதிய சம்பவம் பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

பாணந்துறை, கிரிபெரிய பகுதியைச் சேர்ந்த நிமல் சில்வா என்ற நபரே இம்முறை க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதியுள்ளார். இராணுவத்திலிருந்து

06

# நகர்வலம்



## 500 டிப்ளோமாதாரி ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனம் வழங்க தீர்மானம்

### சபையில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த



**லோரன்ஸ் செல்வநாயகம்**

500 டிப்ளோமாதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அந்த நியமனம் வழங்கப்படும் என்றும் கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

500 டிப்ளோமாதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை தற்போது இடம்பெற்று வருகின்றது. அந்த வகையில் 100 பேரை தேசிய பாடசாலைகளுக்கும் ஏனைய 400 பேரை கிராமிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கும் என 500 ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பி ரோஹிணி கவிரத்ன எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

ரோஹிணி கவிரத்ன எம்பி தமது கேள்வியின் போது இம்முறை ஆங்கில பாடத்தின் கேள்விகள் வழமையான முறைமைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மத்திய மாகாணத்தில் பயிற்றுவிக்கப்பட்ட 5000 ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடம் காணப்படுகிறது.

அதேபோன்று, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில பாடசாலைகளில் இராணுவத்தினரே ஆங்கில பாடத்தை கற்பிக்கின்றார்கள்.அது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மேற்கண்டவாறு பதிலளித்தார்.

## ஜனாதிபதி தலைமையிலான இன்றைய அரசு நாட்டை கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுள்ளது

### ஹம்பாந்தோட்டையில் அமைச்சர் மனுஷ நாணயக்கார

நாட்டின் பொருளாதார சவாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கம் அரசியல் சவாலாக எடுத்துக் கொள்ளாமல், நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஏற்றுக்கொண்டதென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலை விளையாட்டரங்கில் கடந்த (10) ஆரம்பமான 'ஜயகமு ஸ்ரீலங்கா மக்கள் நடமாடும் சேவையின் பதினான்காவது கட்டத்தின் அங்குரார்பண நிகழ்வில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர்; சிலரால் தாங்கள் இடதுபுறம் அல்லது வலதுபுறம் அல்லது எங்கு செல்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியாது, அவ்வாறு நிகழும் போது வழியைக் கண்டுபிடிக்க நமக்கு ஒரு திசை காட்டி தேவை. நாம் காணாமல் போகும் போது, ஒரு திசைகாட்டி நமக்கு சரியான வழியை காட்டுகிறது. இடதுசாரிகளையும், வல துசாரிகளையும் குழப்பிவிடாமல் நாட்டைக் கட்டியெழுப்பும், நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை நாங்கள் செயற்படுத்தி வருகின்றோம்.



நாடு வீழ்ந்த இடத்தில் இருந்து கட்டியெழுப்பும் சவாலை ஏற்றுக் கொண்டோம்.இந்த நாட்டை மீட்க வேண்டும். எனவேதான், நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். இப்போது வடக்கு தெற்கை கண்டுகொள்ளாமல் குழம்பிப்போய் இருப்பவர்கள் பேசும் போது ரணில் கூறுவது சரிதான் என்று சொல்கிறார்கள். நாட்டை அதலபாதாளத்திலிருந்து மீட்டவர் ரணில் என இன்று அனைவராலும் சொல்லப்படுகிறது .

நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் இலங்கையை மீட்டெடுக்கும் தலைவன் இதற்குத் தேவை. இரண்டே வருடங்களில் அதி தீவிர சிகிச்சைப்பிரிவிலிருந்து ஓர் நல்ல நிலைமைக்கு வந்துவிட்டோம். வலிமையுடனும் ஆற்றலுடனும் எழுந்து நின்று முன்னோக்கி ஓடும் அளவிற்கு இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

அதனால்தான் படித்த தலைமை தேவை. நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் பேசுவது சரியாகப் போகாது. வேலை செய்ய வேண்டும். 'ஜயகமு ஸ்ரீலங்கா' மக்கள் நடமாடும் சேவையானது இங்கு பொருட்களுடன் வந்து மக்களுக்கு நிவாரணம் மற்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்குகிறது. இரண்டு வருடங்களுக்கு முன் நாட்டில் இவ்வாறான நிலை இல்லை.

அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியின் பலன்களை மக்களுக்கு வழங்க முடியவில்லை. இன்று அந்த பலன்களை கிராமம் கிராமமாக மாவட்டம்தோறும் மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளோம். இரண்டு வருடங்களில் இதுவே உண்மையான மாற்றம்.

இந்த நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்க IMF க்கு சென்று நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இந்த வேலையை செய்யாவிட்டாலும் நட்பு நாட்டிலிருந்து பணம் வாங்கிக்கொண்டு செய்யலாம் என்று சிலர் நினைக்கிறார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மனித பாவனைக்கு உதவாத 2 இலட்சம் கிலோ அரிசி மீட்பு

### நுகர்வோர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் நுகர்வோர் அதிகார சபை பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய கிரிஇப்பேவ தனியார் அரிசி ஆலைக்கு கொண்டு சென்று இறக்கிக்கொண்டிருந்த மனித பாவனைக்குதவாத அரிசி தொகையினை நுகர்வோர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் சுற்றிவளைத்து கைப்பற்றியுள்ளனர்.

இந்த அரிசி தொகை 2 இலட்சம் கிலோ நிறையை கொண்டது எனவும் அதிகார சபையினர் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட அரிசி தொகையினை பொரளையில் அமைந்துள்ள வைத்திய பரிசோதனை நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதன் பின்னர் மேலதிக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்தது.



கைப்பற்றப்பட்ட அரிசி தொகையை குறித்த அரிசி ஆலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன் அரிசி ஆலை உரிமையாளர் நீதி மன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

## தென் மாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் நிவர்த்திக்கப்படும்

### மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

தென் மாகாண பாடசாலைகளில் நிலவும் 3230 ஆசிரியர் வெற்றிடங்களை அடுத்த இரண்டு மாதத்துக்குள் பூரணப்படுத்தப்படும். நியமனம் பெறும் ஆசிரியர்கள் யாருடைய பின்னாலும் செல்ல வேண்டி அவசியம் ஏற்படாது. அனைவருக்கும் அவரவர் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதி பாடசாலைகளிலியே நியமனம் வழங்கப்படுமென தென் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

வெலிகம நகரசபை மண்டபத்தில் (10) முதற் கட்டமாக 900 பேருக்கு ஆசிரியர் நியமனம் பத்திரம் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்; நான் வடமேல் மாகாண ஆளுநராக பொறுப்பேற்றபோது ஒன்பது மாகாணங்களில் வடமேல் மாகாணம் 8ஆவது இடத்தில் இருந்தது. எனினும் வடமேல் மாகாண பாடசாலைகளின்

அதிபர்களை சந்தித்து அவர்களுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதன் விளைவாக 4வது இடத்துக்கு வடமேல் மாகாணம் முன்னேறியது.

தென் மாகாணம் க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேற்றின் படி முன்னிலையில் உள்ளது. எனினும் க.பொ.த. உயர்தர பெறுபேற்றின் படி 8ஆவது இடத்திலேயே உள்ளது. இதனை உயர்த்த வேண்டிய தேவை தற்போதுள்ளது.

தென் மாகாணத்தில் இன்னும் ஓரிரு மாதத்துக்குள் 30000 வரை ஆசிரியர் அதிகமாவார்கள். தென் மாகாணத்தில் தேசிய பாடசாலைகள் 70 உள்ளன. தென் மாகாண சபைக்கு கீழ் 1033 பாடசாலைகள் உள்ளன.

எதிர்காலத்தில் பாடசாலைகளில் நிலவும் சகல குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்படும். தொழிநுட்டபம் காரணமாக தென் மாகாணத்தில் ஆசிரியர் நியமனங்கள் வழங்க தொடர்ந்து தாமதமாகியிருந்தது. ஒவ்வொரு தாய் தந்தையருக்கும் தமது பிள்ளைகளின் மீது நம்பிக்கையுண்டு.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்க விசேட திட்டமொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தயாரித்திருந்தார். அது இல்லாமல் போய் விட்டது. எமது நாட்டில் பிரதானமானது கல்வி தான். கடந்த காலங்களில் பட்டதாரிகள் மிகவும் கவலையுடன் இருந்தனர் என்றும் ஆளுனர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

## கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தின நிகழ்வு

### முக்கிய பிரமுகர்கள் பங்கேற்பு

**(அஷ்ரப் ஏ சமத்)**

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம் அண்மையில் கொழும்பு 07 இல் அமைந்துள்ள லக்ஷ்மன் கதிர்காமர் மண்டபத்தில் முன்னணியின் தேசியத் தலைவர் ஷாம் நவாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் Artificial Intelligence, Disinformation deep fake and Democracy எனும் தலைப்பில் அதிதிகளின் பேச்சுக்கள் இடம் பெற்றன. இங்கு கலாநிதி ரங்கன கலன்சூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி, எம்.எம். சுஹைர், ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், சிரேஷ்ட சட்டத்தரணி என்.எம். சஹீட் ஆகியோர் உரையாற்றினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், முஜிபுர் ரஹ்மான், லிபியா, பலஸ்தீன் நாட்டு தூதுவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அமைச்சர், சபாநாயகர், ஆளுநர் போன்ற பதவிகளை வகித்த மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ பாக்கீர் மாக்காரின் காலத்தில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணி ஸ்தாபிக்கப்பட்டது. இவ் முன்னணி அரசியல் வேறுபாடுகளின்றி நாடளாவிய ரீதியில் கிளைகள் விஸ்தரிக்கப்பட்டு இன்றும் விரிவாக இயங்கி வருகின்றன.

இவ் இயக்கம் முஸ்லிம் வாலிபர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கான சிறந்த தலைமைத்துவ பயிற்சிகள், அவ்வப்போது நாட்டில் நடைபெறும் பிரச்சினைகள், முஸ்லிம் இளைஞர்கள் யுவதிகள் மற்றும் சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அரசியல் மட்டத்திற்கு கொண்டு செல்லுதல், அவற்றுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ளல், தேசிய நல்லிணக்க விடயங்களை கலந்தாலோசித்தல், பிராந்திய ரீதியில் அரசியல் தலைமைகளை நாடி அவற்றுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற விடயங்களை செயற்படுத்தும் ஓர் இயக்கமாகும். கடந்த 76 வருடங்களை பூர்த்தி செய்துள்ள இவ் இயக்கம் வருடா வருடம் தேசிய ரீதியில் இளம் தலைவர்களையும் உருவாக்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.











சவூதி அரேபியாவில் இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிய பீ.எம். அம்சா சேவைக் காலம் முடிந்து நாடு திரும்பவுள்ளார். அவர் தூதுவராக பணியாற்றிய காலத்தில் இலங்கை சமூகத்திற்கு ஆற்றிய சேவைக்காக ஜாமிஆ நளீமிய்யா பழைய மாணவர் அமைப்பான ராபிததுந் நளீமிய்யீன் ரியாத் கிளையினர் அன்னாரை (13) தூதரக வளாகத்தில் சந்தித்து, அன்னாரின் சேவையைப் பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர். அஷ்ஷெய்க் அஸீம் (நளீமி) தலைமையிலான ரியாதிலுள்ள ராபிதா அங்கத்தவர்கள் தூதுவர் அம்சாவுடன் கூட்டாக எடுத்துக்கொண்ட படம்.

## கரட் துண்டு தொண்டையில் சிக்கி குழந்தை உயிரிழப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

சமையலுக்காக வெட்டப்பட்ட கரட் துண்டொன்றை தற்செயலாக விழுங்கியதால் தொண்டையில் சிக்கி சுமார் ஒன்றரை வயது மதிக்கத்தக்க சிறு குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் கடந்த (13) நொச்சியாகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாலியவெவ பகுதியில் இடம்பெற்றுள்ளது. குறித்த குழந்தையின் தாயால் சமையலுக்காக துண்டுகளாக வெட்டப்பட்டு வைக்கப்பட்ட கரட் துண்டையே குழந்தை எடுத்து உட்கொண்டதாலேயே அவை தொண்டையில் சிக்கி குழந்தையின் மரணம் சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரட் துண்டு தொண்டையில் சிக்கியதையடுத்து உடனடியாக குறித்த குழந்தை நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் குழந்தை உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## தமிழ்ச்சங்கத்தில் இன்று தமிழக ஆய்வாளர் உரை

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் இன்று (15) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் தமிழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர் சங்கரன் கோவில் அருணகிரி தமிழ் மொழியில் சீர்திருத்தங்கள் என்ற பொருளில் உரைநிகழ்த்துவார்.



வியாங்கொடை சியன தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் எஸ். கேசவன் நிகழ்வுக்கு தலைமை தாங்குவார்.

# பலஸ்தீன் – இஸ்ரேல் மோதல்கள்; தீர்வுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

காஸாவின் இன்றைய நிலை மிக மோசமாக காணப்படும் நிலையில், உலக சமாதானத்தை கருத்திற்கொண்டு இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சகல நாடுகளும், தலைவர்களும் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பலஸ்தீனம் இஸ்ரேல் யுத்தத்திற்கு பின்னணியில் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. எனினும், பிரச்சினைக்கு யுத்தம் தீர்வாக அமையாது என்பதை உறுதியாக குறிப்பிட முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பலஸ்தீன விவகாரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில், உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ;



பலஸ்தீன் இஸ்ரேல் முரண்பாட்டுக்கு தீர்வு காண உலக நாடுகள் மற்றும் அமைப்புக்கள் தலையிட வேண்டும். பலஸ்தீனர்களுக்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன்.

யுத்தத்தால் பலஸ்தீன மக்கள் மிக மோசமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். பலஸ்தீன விவகாரத்தில் அவதானம் செலுத்தியதற்கு இந்த உயரிய சபைக்கு நன்றி தெரிவிக்கிறேன். இலங்கை பலஸ்தீன ஒத்துழைப்பு சங்கத்தின் தலைமைப் பதவியிலிருந்து பலஸ்தீனர்களின் உரிமைகளுக்காக நாம் குரல் கொடுத்தோம். அன்று முதல் இன்று வரை பலஸ்தீனர்களின் நலனுக்காகவே செயற்படுகிறோம்.

நாடு என்ற ரீதியில் பிளவுபடாத கொள்கையில் இருந்தாலும், உலக சமாதானத்தை கருத்திற்கொண்டு இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சகல நாடுகளும் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும். சுமார் 70 வருடகாலமாக தொடரும் பலஸ்தீன இஸ்ரேல் பிரச்சினையை, பூகோள அரசியல் தொடர்பில் தெளிவுள்ளவர்கள் நன்கு அறிவார்கள்.

பலஸ்தீனத்தை 1988 ஆம் ஆண்டு தனி இராச்சியமாக உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டோம். அன்றிலிருந்து இன்று வரை பலஸ்தீனத்துக்கு தனித்த சுயாட்சி வேண்டும் என்பதை பகிரங்கமாக வலியுறுத்தி வருகிறோம்.

அரச தலைவர் என்ற ரீதியில் அக்காலப்பகுதியில் ஐக்கிய நாடுகள் கூட்டத்தில் உரையாற்றுகையில் பலஸ்தீனத்தின் சுதந்திரம் மற்றும் சுயாதீனம் தொடர்பில் குரல் கொடுத்துள்ளேன். உலக நாடுகளின் தலைவர்களிடமும் கோரிக்கை விடுத்து, இராஜதந்திர மட்டத்திலும் நடவடிக்கைகளை முன்னெடுத்தேன்.

2017 இல், பலஸ்தீனத்துக்கும், இஸ்ரேலுக்கும் விஜயம் மேற்கொண்டு அமைதி மற்றும் சமாதானத்துக்காக இரு நாட்டு தலைவர்களிடமும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன் காஸாவின் இன்றைய நிலை அவலமானது. 30 வருடகால யுத்தத்தை எதிர்கொண்ட எமக்கு காஸாவின் இன்றைய அவல நிலையை விளங்கிக் கொள்ள முடியும். யுத்தத்தால் பெரியவர்கள் மாத்திரமல்ல பச்சிளம் குழந்தைகளும் நாளாந்தம்

06

# முன்பள்ளிகளை முறைப்படுத்த அடுத்த மாதத்தில் விசேட திட்டம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நாடளாவிய ரீதியில் செயற்படும் 18,000 முன்பள்ளி பாடசாலைகளை முறைப்படுத்தி, ஆசிரியர்களுக்கு முறையான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதற்கான முக்கியமான வேலைத்திட்டம் அடுத்த மாதத்தில் ஆரம்பமாகும் என்றும் நாடளாவிய ரீதியிலுள்ள 26 திறந்த பல்கலைக்கழக கிளைகளின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்பள்ளிகள் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான தகைமைகள் தொடர்பில் எதிர்க்கட்சி எம்பி ஹேஷா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

18, 800 முன்பள்ளி பாடசாலைகள் நாட்டில் இயங்குகின்றன. கல்வி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையின் படி ஒன்பது மாகாணங்களிலும் இது தொடர்பான ஒன்பது அதிகார சபைகள் காணப்படுகின்றன. இவ்வதிகார சபையின் உறுப்பினர்களை தெரிவுக்குழுவுக்கு அழைத்தோம். இவர்களுடனான கலந்துரையாடலில், யுனிசெப் நிறுவனத்தின் அறிக்கையை அடிப்படையாக வைத்து விடயங்கள் முன்வைக்கப்பட்டன. இதன்படி தற்போது முன்பள்ளிகளில் கல்வி கற்கும் பிள்ளைகளில் 20 வீதமானோர் பாடசாலைகளில் இணைக்கப்படுவதில்லை.

கல்வியமைச்சு தற்போது முதல் கட்ட பயிலுநர்களை தெரிவு செய்துள்ளது. மாகாணங்களிலுமிருந்து பயிற்சி அளிக்கப்பட்ட 550 பேருக்கு ஆரம்ப அடிப்படை பயிற்சிகளை பெற்றுக் கொடுத்துள்ளோம். கல்வி அமைச்சின் பணிப்பாளர் ஒருவரும் இந்நடவடிக்கைகளில் தொடர்புபடுகின்றார்.

உரிய புத்தகங்களை அச்சிடும் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

06

# அடுத்த 05 வருடங்களில் பிரிட்டன் மிகவும் ஆபத்தான நாடாகும்

## பிரதமர் ரிஷி சுனக் எச்சரிக்கை



அடுத்த ஐந்து ஆண்டுகளில் மிகவும் ஆபத்தான நாடாக பிரிட்டன் மாறுமென, பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக் எச்சரிக்கை விடுத்துள்ளார். எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு ஆதரவு திரட்டும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட கூட்டமொன்றில் இதனை தெரிவித்தார். இந்நிலையை தன்னால் மட்டுமே தடுக்க முடியுமெனவும் பிரதமர் ரிஷிசுனாக் தெரிவித்துள்ளார்.

உலகை அச்சுறுத்தலாக மாற்றக்கூடியதாக நம்பப்படும் 07 காரணிகளையும் அவர் இதன்போது வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதம், சட்டவிரோத குடியேற்றம், செயற்கை நுண்ணறிவுடன் (AI) புதிய தொழில்நுட்பம், அணு ஆயுத ஆபத்து அதிகரிப்பு, தீவிரவாதிகளை பலப்படுத்தும் போக்கு, விளாடிமிர் புடினின் நேட்டோ இலக்கு மற்றும் போர்ச் சூழல் போன்ற காரணிகளை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த சில ஆண்டுகளில் பிரிட்டனின் ஜனநாயகம், பொருளாதாரம் மற்றும் சமூகம் ஆகியவை அமைதியற்று காணப்படுமெனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதிலிருந்து விடுபட எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை அடுத்த தேர்தலில் முடிவு செய்ய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விலையை கட்டுப்படுத்த ஹெஜின் உடன்படிக்கைக்கு திட்டம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



சர்வதேச சந்தையில் இடம்பெறும் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக எதிர்கொள்ள நேரும் நிலையை கட்டுப்படுத்தும் வகையில், எதிர்காலத்தில் ஹெஜின் உடன்படிக்கை கொடுக்கல் வாங்கல்களுக்கு பிரவேசிக்க உள்ளதாக எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மின்சார ஹெஜின் கொடுக்கல் வாங்கல்களில் பிரவேசிக்கவில்லை என்பதையும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், தயாசிறி ஜயசேக்கர எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தயாசிறி ஜயசேக்கர எம்பி தமது கேள்வியின் போது,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்களை நாடுவதற்கான காரணங்கள் யாவை? எதிர்காலத்திலும் நட்டங்கள் ஏற்படக்கூடிய எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் அவர் வினவினார். இற்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 02ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 06

### குறள் தரும் சிந்தனை

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு

உலகத்தில் இன்பம் உற்று வாழ்கின்றவர் அடையும் சிறப்பு, அன்பு உடையவராகிப் பொருந்தி வாழும் வாழ்கையின் பயன் என்று கூறுவர்.

## தொழிற்சங்க நடவடிக்கைகள் பொருளாதாரத்தை பாதிக்கும்

நாட்டின் பல்வேறு துறைகளையும் சேர்ந்த அரச ஊழியர்கள் சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து அண்மைக் காலமாக தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா அரசாங்க ஊழியர்கள் சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து சில வாரங்களுக்கு முன்னர் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்தனர். அவர்களது கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இருந்தும் கூட தொழிற்சங்க நடவடிக்கைகள் இன்னும் முடிவுக்கு வந்ததாக இல்லை.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் தம் கோரிக்கைகளின் நிமித்தம் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நேற்றுமுன்தினம் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, அரசாங்க நிறைவேற்று உத்தியோகத்தர்கள், சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து இன்று முதல் சட்டபடி வேலை இயக்கத்தை ஆரம்பிக்க இருப்பதாக ஏற்கனவே அறிவித்து இருக்கின்றனர்.

இவை இவ்வாறிருக்க, கிராம உத்தியோகத்தர்களும் பல கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் கிராம உத்தியோகத்தர்களின் சேவை ஒவ்வொருவருக்கும் மிக அவசியமான ஒன்று என்பதை மறந்து விடலாகாது.

அதேநேரம் அரசாங்க வைத்தியசாலைகளில் கடமை புரியும் சுகாதார மருத்துவ சேவை சார்ந்த உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் கண்டி மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன் விளைவாக வைத்தியசாலைகளின் வழமையான சேவைகள் பாதிக்கப்பட்டதோடு, அப்பாவி நோயாளர்களும் பலவிதமான அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

இவ்வாறு கடந்த சில வாரங்களாக இந்நாட்டின் அரசாங்க ஊழியர்கள் அடிக்கடி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி மீட்சி பெற்றுவரும் நாடொன்றுக்கு இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரோக்கியமானவை அல்ல.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அந்த வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான பொருளாதார வேலைத்திட்டங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விரிவான அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வேலைத்திட்டங்களின் பயனாக நாடு குறுகிய காலப்பகுதிக்குள் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற்று முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அதன் பயனாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார அசௌகரியங்களும் நெருக்கடிகளும் பெரும்பாலும் நீங்கியுள்ளன. என்றாலும் அந்த நெருக்கடியின் தாக்கங்கங்கள் காணப்படவே செய்கின்றன. இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து முழுமையாக மீட்சி பெறுவதற்கு நிலைபேறான பொருளாதார முன்னேற்றம் இன்றியமையாததாகும்.

அந்த வகையில் நாட்டில் நிலைபேறான பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வேலைத்திட்டங்கள் வெற்றி அளிப்பதற்கும் இந்த வேலைத்திட்டங்கள் சிறப்பாக முன்னெடுக்கப்படுவதற்கும் நாட்டின் அனைத்து குடிமக்களும் முழுமையான பங்களிப்பை நல்குவது அவசியம். அவர்களில் அரசாங்க ஊழியர்களும் அடங்குகின்றனர்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்றுவரும் தேசத்தில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிக்க வேண்டிய முக்கிய பொறுப்பை கொண்டவர்களாக அரச ஊழியர்கள் விளங்குகின்றனர்.

இருந்தும் கூட அரசாங்க ஊழியர்களில் சிலர் தங்களது பொறுப்பை உணராதவர்களாக செயற்படுவதாகக் கூறப்படுகிறது. ஏனெனில் கடும் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாடு முழுமையாக மீட்சி பெற்றிராத சூழலில் அடையாள வேலைநிறுத்தம், சட்டப்படி வேலை இயக்கம் உள்ளிட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது பொருளாதார முன்னேற்றத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கங்களை ஏற்படுத்தவே செய்யும்.

நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு அமைய அரச ஊழியர்களது கோரிக்கைகள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அதற்கேற்ப நாடு பெற்றுக்கொள்ளும் பொருளாதார முன்னேற்றங்களுக்கு அமைய அதன் பிரதிபலன்கள் நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பிரதிபலன்களை இந்நாட்டின் குடிமகன் என்ற வகையில் அரச ஊழியர்களும் அனுபவிக்கவே செய்கின்றனர். அதற்கு மேலதிகமாக அரச ஊழியர்கள் என்ற அடிப்படையில் சம்பள உயர்வு உள்ளிட்ட ஏனைய நிவாரணங்களும் பெற்றுக் கொடுக்கப்படவே செய்கின்றன.

நிலைமை இவ்வாறு இருக்கையில், பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி நம்பிக்கை தரும் வகையில் மீட்சி பெற்று முன்னேற்றப்பாதையில் பயணிக்க ஆரம்பித்துள்ள நாட்டில் அடிக்கடி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது நாட்டுக்கு நல்லதல்ல. அந்த நடவடிக்கைகள் பொருளாதார நெருக்கடி பலமடையக்கூட துணைபுரியலாம்.

ஆகவே அரச ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகள், எதிர்பார்ப்புக்களுக்கு பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள் மூலம் தீர்வு பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். அதுவே நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதாக அமையும். இதைவிடுத்து தொழிற்சங்க நடவடிக்கைகள் பொருளாதாரத்தைப் பாதிக்கவே வழிவகுக்கக் கூடியதாக அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் நூல்கள் சிட்னியில் வெளியீடு

## 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' உட்பட மூன்று நூல்கள்

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் நடைபெற உள்ளன.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. *Allan G Ezzy Community Centre,(Near Woolworths) 1 Newport St, Pemulwuy, NSW* என்ற முகவரியில் இம் மண்டபம் அமைந்துள்ளது.

எதிர்வரும் ஜூன், வெள்ளிக்கிழமை 7 ஆம் திகதி மாலை 18.30 முதல் 21.00 வரை இவ்வெளியீட்டு நிகழ்வு நடைபெறவுள்ளது.




இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு ஆற்றுவார்.

'பாலஸ்தீனம் எரியும் தேசம்' நூல் அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்துவார். அதன் பின்னர் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' நூலின் அறிமுகவுரையை டொக்டர் ஹாரூன் காசிம் ஆற்றுவார்.

'இல ங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் ஆற்றுவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் சிறப்புரை நிகழ்த்த உள்ளார். அத்துடன் கலாநிதி திருமதி சந்திரிக்கா சுப்ரமணியன், திருநந்தகுமார் சிறப்புரை ஆற்றுவர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சிட்னியில் நடைபெறும் இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவருடனான சந்திப்பும், நூல்கள் வெளியீடும் நடைபெற உள்ளன.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெறும் நூல் வெளியீடு, இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.



# ஊடகத்துறை முன்னாள் பிரதியமைச்சர் ஷேகு இஸ்ஸதீன் வெற்றிவிழா கொண்டாட்டம், ஞாபக முத்திரை வெளியீடு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தவிசாளரும், முன்னாள் ஊடகத்துறை பிரதியமைச்சருமான சட்டத்தரணி ஷேகு இஸ்ஸதீன் அவர்களின் 80ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட வெற்றிவிழாக் கொண்டாட்டமும் 'வரலாறாகும் வேதாந்தி' என்ற பாராட்டு நிகழ்வும், அவரின் நினைவாக வெளியிடப்பட்ட விசேட முத்திரை வெளியீடும் அக்கரைப்பற்று கடற்கரை மென்கொ கார்டன் வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (12) சட்டத்தரணி ஜமால்தீன் சர்ஜூன் தலைமையில் நடைபெற்றன.



நிகழ்வில் தலைமையுரையாற்றிய சட்டத்தரணி சர்ஜூன் தனதுரையில்," அரசியல் கலாசாரத்திற்கு அப்பால் தற்போதைய இளைஞர் சந்ததியினர் ஷேகு இஸ்ஸதீன் அவர்களின் வாழ்வியலை அறிந்திருக்க வேண்டும் என்பதனாலாகும். இளைஞர்கள் கல்வியை கற்று சமூகத்தில் நற்பிரஜைகளாக வர வேண்டும் அவர்களுக்கான வழிகாட்டியாக நான் இருக்க வேண்டும் என்ற கனவோடு பயணித்தவர் அவர். கல்வி கற்கும் சமூகத்தை நேசிக்கும் ஒரு தலைவராக இவரை நாம் காண்கிறோம். அவரது சிந்தனையில் விளைவுதான் நாமும் கல்வியலாளராக இருக்கின்றோம்" என்று குறிப்பிட்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் செயலாளர் என்.ரீ.ஹஸன் அலி உரையாற்றுகையில்,

"மறைந்த எமது தலைவர் மர்ஹூம் அஷ்ரப், முன்னாள் பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் ஆகியோரோடு நாங்கள் எல்லோரும் ஒரு கட்சியில் இருக்கும் போது தென்கிழக்கு அலகு பற்றி அதிகமாக பேசி இருக்கின்றோம். அந்த நேரத்தில் சேகு இஸ்ஸதீன் இது தொடர்பில் அதிகமாக பேசியுள்ளார். எதிர்காலத்தில் இந்தப் பிராந்தியம் அடையவுள்ள நன்மை தீமைகளையும், அதிகாரப் பரவலாக்கல் மூலம் ஏற்படப்போகும் பிரிவினைகளை பற்றியும் அவர் சூசகமாக அப்போது தெரிவித்தார். அவர் அரசியலில் தற்போது இருக்கும் முஸ்லிம் தலைவர்களுக்கு அரசியல் வழிகாட்டியாக இருந்தார். இவரின் பாசறையில் வளர்ந்தவர்கள்தான் தற்போது முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களாக இருக்கின்றார்கள்" என்றார்.

இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் எப்.எம் உதவிப்பணிப்பாளர் ஏ.எம்.தாஜ் உரையாற்றுகையில், "சேகு இஸ்ஸதீன் அவர்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு அதன் சின்னமான மரத்தை தெரிவு செய்து தேர்தல் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தவராவார். மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்களோடு இக்கட்சியின் வளர்ச்சியிலும், எதிர்கால முஸ்லிம் சமூகம் தொடர்பிலும் மிகவும் அவதானத்துடன் செயற்பட்டார். அற்ப அரசியல் இலாபங்களுக்காக இக்கட்சியையும் இச்சமூகத்தையும் பெரும்பான்மை அரசியல் தலைவர்களிடம் அடைமானம் வைக்க முடியாது என்று பல இடங்களில் வலியுறுத்திக் கூறினார்.

20 ஆம் திருத்தத்துக்கு நாங்கள் எதிர்ப்பு என்று சொல்லி பாராளுமன்றத்திற்குள் சென்ற எம்.பிக்கள் இரண்டு மணித்தியாலத்திற்குள் தங்களது எண்ணம் மாறி அதன் பிறகு அதற்கு ஆதரவாக வாக்களித்தமையான சம்பவத்தைப் பார்க்கும் போது, இரண்டரை வருடத்திற்குள் என்ன மாற்றங்கள் எல்லாம் வரும் என்பதை அன்றே சேகு இஸ்ஸதீன் அவர்கள் தெளிவாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்ததை இங்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

அதேபோல், 1997ஆம் ஆண்டு அக்கரைப்பற்று பிரதான வீதியில் இடம்பெற்ற கூட்டத்தின் போது, சேகு இஸ்ஸதீன் அவர்கள் ஒரு தீர்க்கதரிசனமான விடயத்தைச் சொன்னார். ஒலுவிலில் தேசிய துறைமுகம் அமைக்கப்படுவதால் இச்சமூகத்தில் ஏற்படப்போகும் விளைவுகள் பற்றி உரையாற்றினார். தற்போது சமகாலத்தில் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசத்தை கடல் காவுகொள்வதைப் பார்க்கின்றோம். இதனை அவர் அன்று தெரிவித்தார். நாம் இன்று அது தொடர்பில் கண்ணீர் வடிக்கின்றோம்.

ஒலுவிலில் தேசிய துறைமுகம் அமைக்கின்ற தீர்மானத்தை கைவிடுங்கள் என்று அந்த நேரத்தில் தலைவர் அஷ்ரப் அவர்களோடு இஸ்ஸதீன் சேர் மிகவும் ஆணித்தரமாக விளக்கினார். இது அமையுமாக இருந்தால் ஒலுவில் பிரதேசம் பல இழப்புக்களை இழக்க நேரிடும். இப்பிரதேசம் பெரும்பான்மை மயமாகும். மீன்பிடித் தொழில் அடியோடு அழிக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் இல்லாமல் செய்யப்படும். இங்கு வழங்கப்படும் தொழில்வாய்ப்புக்களின் வீதம் முஸ்லிம்களுக்கு எட்டு வீதம்தான் வழங்கப்படும். ஆகையால் மருதமுனை தொடக்கம் பொத்துவில் வரையிலுள்ள ஏதாவதொரு ஊரில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தால் எமக்குப் போதும் என்று தெரிவித்தார்.

ஆனால் தலைவர் அஷ்ரப்பைச் சார்ந்தவர்கள் அதனைத் தெரிந்து கொள்ளவில்லை. ஒலுவில் பிரதேச மக்களுக்கு இதனை தெளிவுபடுத்தும் வகையில் கூட்டங்களை போட்டு அறிவுரை வழங்கினோம். ஆனால் அந்த மக்கள் எங்களுக்கு கல் எறிந்தார்கள், எங்களை விரட்டினார்கள். தற்போது என்ன நடந்துள்ளது? அந்தப் பிரதேசத்தில் இருந்த காணிகள் இழக்கப்பட்டுள்ளன. மீன்பிடித் தொழில் இழந்துள்ளது. இப்போது அந்த மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள். அது மாத்திரமின்றி, இந்த தேசிய துறைமுகம் தற்போது மீன்பிடித் துறைமுகமாக மாற்றப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே சமூகத்தைப் பற்றி சிந்தித்து இந்த சமூகம் எதிர்காலத்தில் அரசியல் ரீதியாக அடையவுள்ள விளைவுகளையும் தூர நோக்கு சிந்தனையுடன் தெரிவித்தவர்தான் சேகு இஸ்ஸதீன்" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அல் ஹாபீழ் என்.எம்.அப்துல்லா, முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் என்.ரீ.ஹஸன் அலி, மு.கா அதி உயர்பீட உறுப்பினர் ஏ.எல்.தவம், தென்றல் உதவிப்பணிப்பாளர் ஏ.எம்.தாஜ், சேகு இஸ்ஸதீன் அவர்களின் பாரியார் நாதிரா சேகு இஸ்ஸதீன் மற்றும் கல்வியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.





அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்...

# கஹகொல்ல அல் பதுரியா முஸ்லிம் ம. வியின் வருடாந்த பரிசளிப்புவிழா

கஹகொல்ல, தியத்தலாவை அல் பதுரியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான சாதனைகளுக்கு மகுடம் சூட்டும் மாபெரும் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வும், தியத்தலாவ ஜனாஸா சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை சுற்றுவட்டார வேலி கட்டுமானப் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவும் அண்மையில் அதிபர்.எம். நஸீர் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது ஜே.ஜே நலன்புரி அமைப்பின் தலைவர் டொக்டர் அனீப் ஜே.பி,தொழிலதிபர் லயன்ஸ் நூறுல்லாஹ் ஜே.பி,அல்பதுரியா ஜும் ஆ பெரியபள்ளிவாயல் தலைவர் தேசமான்ய எம்.ஏ. எம்.ஹசனார் ஜே.பி, ஜனாசா சங்க உறுப்பினர்கள் மற்றும் பள்ளிவாசல் சம்மேளன உறுப்பினர்கள் மற்றும் அதிதிகளை மாணவர்கள் பாண்ட் வாத்தியம் இசைத்து வரவேற்று அழைத்துச் சென்றனர். அதன் பின்னர் விழா ஆரம்பமானது.

பரிசில்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் போன்றவை ஐந்தாம் தரம்





புலமைப் பரிசில், க.பொ.த (சா/த), (உ/த) மற்றும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் கற்பித்த ஆசான்களுக்கும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்விழாவில் பாடசாலை சுற்று வட்டாரத்துக்கான மதிலுக்கான அடிக்கல் நடப்பட்டது.

எம்.ஏ.எம்.ஹசனார்...
(ஊவா சுழற்சி நிருபர்)

# அமைச்சரவை முடிவுகள்

**பெறுபேறுகளை அடிப்படையாக கொண்ட முகாமைத்துவம்**

கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம் நிரல் அமைச்சுடன் இணைந்து உயர்ந்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு செய்யப்படும் அமைச்சுகள் 10 உம் , அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்களில் 'அமைச்சு ரீதியான பெறுபேறு சட்டகம்' தயாரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அமைச்சின் படிநிலைப் பொறுப்புக்களுடன் இணங்கியொழுகி , குறித்த நிறுவனங்களின் விடயதானங்களில் அபிவிருத்தி இலக்குகளை சமகாலத்துடன் வெற்றிகரமாக அடைந்து கொள்ளல் மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளல் குறித்த அமைச்சின் பெறுபேறுச் சட்டகத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. அத்துடன், மக்களுடைய தேவைகளை துரிதமாக நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகளின் உற்பத்தித் திறனை அளவிடக்கூடிய பெறுபேறுகளுக்கான நிறுவனக் கட்டமைப்புகள் இதன் மூலம் உருவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. குறித்த பணிகளின் செயலாற்றுகையை கண்காணிப்பு தேசிய நடவடிக்கை மையத்துக்கு ஒப்படைப்பதற்கும் , நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**சேமிப்பு வங்கியின் ஊழியர்களுக்கு சுயமாக ஓய்வுபெறும் பொறிமுறை**

2019 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியின் முழுமையான உரித்துடன் கூடிய நிர்வாகக் கம்பனியாக உருவாக்கப்பட்டுள்ள இலங்கை சேமிப்பு வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஒப்படைப்பதற்கும், அதன் ஊழியர்களை உள்வாங்குவதற்கும் தற்போது தேசிய சேமிப்பு வங்கியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய , இலங்கை சேமிப்பு வங்கியின் ஊழியர்களை நிலைப்படுத்தல் செயன்முறை தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் , அதன் மாற்று வழிமுறையாக சுயமாக ஓய்வு பெறுகின்ற முறையை அறிமுகப்படுத்துவதற்கும் , சுயமாக ஓய்வு பெறுகின்ற ஊழியர்களுக்காக சந்தைக் காரணிகளை கருத்தில் கொண்டு கொடுப்பனவைச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அங்கு சுயமாக ஓய்வு பெறும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்காக நிதி , பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**உயர்தர தொழில் பாடவிதான மாணவர்களுக்கு NVQ 4**

க.பொ.த (சா/தரம்) பரீட்சையில் தேர்ச்சி பெற்ற/தேர்ச்சி பெறாதமையைக் கருத்தில் கொள்ளாமல் உயர்தர தொழிற்கல்விப் பாடவிதானத்தை பயில்வதற்காக மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதுடன், தற்போது அனைத்துக் கல்வி வலயத்தையும் உள்ளடக்கியவாறு 604 பாடசாலைகளில் பாடவிதானங்கள் நடைமுறைப்படுத்தப்படும். குறித்த பாடவிதானத்தின் கீழ் 12 ஆம் தரத்தில் மென்திறன் அபிவிருத்தி செய்யப்படும் பொதுவான பாடவிதானங்கள் பயில வேண்டியதுடன், 13 ஆவது தரத்தில் தேசிய தொழில் தகைமை 4 ஆம் மட்டம் NVQ 4 பாடநெறியை 06 மாதங்கள் பயில்வதற்கும், 06 மாதங்கள் தொழிலிடத்துப் பயிற்சியில் ஈடுபடுவதற்கும் மாணவர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படும். குறித்த மாணவர்களுக்கு NVQ 4 மட்டத்தில் பாடநெறி நடாத்துவதற்காக 07 அமைச்சுக்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 17 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தற்போது கல்வி அமைச்சுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு வந்துள்ளன.

அதற்கிணங்க, அனைத்து அமைச்சுக்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் தொழிற்பயிற்சி நிறுவனங்களால் உயர்தர தொழிற்கல்விப் பாடவிதானத்தை பயில்கின்ற மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குதல் கட்டாய பணியாக மாற்றுவதற்கும், குறித்த நிறுவனங்களில் NVQ 4 பாடநெறிகளுக்கு வருடாந்தம் மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்ளும் போது தொழிற்கல்வி பாடவிதான மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கி பயிற்சிக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**மின் பாவனையாளர்களுக்காக சுழற்சி சக்தி வசதி**



மின்சக்தி தேவைகள் காணப்படுகின்ற இடங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக மின்சார விநியோகம் மற்றும் மின் கடத்தித் தொகுதிகளுடன் கூடிய மின்சக்தி தொகுதியை கூட்டாகப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கும் அணுகல் வசதி,சுழற்சி சக்தி வசதிகள் (Power Wheeling Facility) என அழைக்கப்படும். கட்டண விதிப்பின் கீழ் தற்போது காணப்படுகின்ற மின் தொகுதியைப் பயன்படுத்தி தமக்குரிய வேறு இடத்தில் கானப்படுகின்ற மின் விநியோகமொன்றை வலுசக்தி செலவை பயனுள்ளவாறு குறைத்துப் பயன்படுத்துவதற்கு சுழற்சி சக்திவசதிகளின் கீழ் மின் பாவனையாளர்களுக்கு வசதியளிக்கப்படும். குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் புதிய மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்களுக்கு மாத்திரம் சுழற்சி சக்தி வசதியை நடைமுறைப்படுத்துவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**1,000 பேரை தேசிய மாணவர் படையணியின் பதவி நிலைக்கு நியமித்தல்**

1985 ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க மனிதவலுப் பயன்பாடு மற்றும் துணை இராணுவ சட்டத்தின் ஏ பிரிவின் கீழ் துணை இராணுவ நிறுவனமாக தேசிய மாணவர் படையணி பாதுகாப்பு அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் முறையாக குறித்த படையணியின் அதிகாரிகள் மற்றும்



மாணவர் படையினராக இணைக்கப்படுகின்றனர். கல்வித் துறையில் மாணவர் படை நடவடிக்கைகளை மேலும் ஊக்குவிப்பதற்காக பதவிநிலை அதிகாரிகளாக இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை மற்றும் இலங்கை அதிபர் சேவை போன்ற சேவைகளுக்குரிய அதிகாரிகளை தேசிய மாணவர் படையணியில் இணைத்துக் கொள்வதற்காக அடிப்படை பயிற்சி பாடநெறியை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தகைமை வாய்ந்த அதிகாரிகள் 1,000 பேருக்கு முறையாக தெரிவு செய்யப்பட்ட 03 பிரிவின் கீழ் பயிற்சியளிக்கப்பட்ட பதவிநிலை அதிகாரிகளாக நியமிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**தொழில்நுட்ப ஊக்குவிப்பு சட்டமூலம்**

டிஜிட்டல் அபிவிருத்திக்குத் தேவையான நிறுவன மீள்கட்டமைப்புகளை மேற்கொள்வதற்காக மற்றும் 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான கருத்தாக்கப் பத்திரத்தை தயாரிப்பதற்காக 2023.12.18 அன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய டிஜிட்டல் அபிவிருத்திக்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு கருத்தாக்கப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது

2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத்தை இரத்து செய்து தொழில்நுட்ப ஊக்குவிப்பு சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும், தயாரிக்கப்பட்ட கருத்தாக்கப் பத்திரத்தின் அடிப்படையில், சட்டமூலத்தை தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தை துரிதப்படுத்தல்**

துரிதமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய துறைகளை 2024 ஆம் ஆண்டின் 50 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ் ஒரு சில அமைச்சர்களுக்கு 212.59 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்முன்மொழிவுகளில் 13கருத்திட்டங்கள் ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும். கடந்த சில வருடங்களில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவிகளின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு சில அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் கடன் மீள்கட்டமைப்பு வேலைத்திட்டம்முடிவடையும் வரைக்கும் இடை நிறுத்தப்பட்டுள்ளது. பல்வேறு தரப்பினர்கள் கோரிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர்.அதற்குத் தீர்வாக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்களில் எதிர்பார்க்கின்ற எஞ்சிய நிதி கிராமிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அத்தியவசிய அபிவிருத்தி பணிகள் மற்றும் இடைநிறுத்தப்பட்டுள்ள கிராமிய அபிவிருத்தி பணிகளை பூர்த்தி செய்து பயன்படுத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு முன்மொழிவை சமர்ப்பிப்பதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**இராணுவத்தினரின் வதிவிடத்துக்காக அரச காணிகள் வழங்கல்**

கடமைகளின் போதுஉயிர் நீத்தவர்கள், காணாமல் போனோர் மற்றும் இயலாமைக்குட்பட்டோர், இளைப்பாறிய அத்துடன் தற்போது பணியில் கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் முப்படையினர் இலங்கை பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் இராணுவத்தினருக்கு வதிவிடத்துக்காக அரச காணிகள் வழங்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய பொறிமுறை தொடர்பாக காணி ஆணையாளர் நாயக்கத்தினால் அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அவ்வப்போது சுற்றறிக்கை ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன. இராணுவத்தினருக்கு காணிகளை வழங்கும்போது தற்போது கடைப்பிடிக்கப்படுகின்ற பொறிமுறையால் மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் உள்ளடங்கிய தற்போதுள்ள பொறிமுறையை திருத்தம் செய்வதற்காக தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**பொருளாதார நிலைமாற்ற சட்டமூலம்**

2024.03.25 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் பொருளாதார நிலைமாற்ற சட்டமூலத்தின் அடிப்படை சட்டமூலத்துக்கு கொள்கை ரீதியான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், சட்ட மாஅதிபரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் உள்ளடங்கிய முறையான சட்டமூலத்தை துரிதமாக தயாரித்து சமர்ப்பிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்கும் கௌரவ ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ரஷ்ய போர்க் களத்தில் உயிருடன் இருப்போர் அழைத்துவரப்படுவர்

இலங்கையரை ரஷ்யாவுக்கு அனுப்பும் மனிதக் கடத்தல் மோசடியில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டுள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இவர்களால் அங்கு அனுப்பப்பட்டு ரஷ்ய யுத்த களத்தில் உயிரிழந்த இலங்கையரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இன்னும் உயிருடன் இருப்பவர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.



ரஷ்ய யுத்தகளத்தில் போராடும் இலங்கையர் தொடர்பில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் திங்கட்கிழமை (13) முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், எவ்வளவு அறிவுரைகள், எச்சரிக்கைகள் வழங்கினாலும் முகநூலில் வெளியாகும் போலியான விளம்பரங்களுக்கு ஏமாறும் ஒரு தரப்பினர் இன்றும் நாட்டில் உள்ளனர். ரஷ்யாவின் சென் பீற்றர் நகரத்தில் காணி வழங்கப்படுவதாகவும், குடும்பத்தாருக்கு விசா மற்றும் 10 இலட்சம் ரூபா வழங்கப்படுவதாகவும் முநூலில் விளம்பரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

போலியான வாக்குறுதிகளை நம்பி இலங்கையர் ரஷ்யாவுக்கு சென்று நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். ஆகவே, போலியான விளம்பரங்களுக்கு ஏமாற வேண்டாம் என்று நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன் என்றும் தெரிவித்தார். மனித கடத்தல் மோசடியில் ஈடுபட்டுள்ள ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக, கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.ரஷ்ய யுத்தக் களத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மிகுதியாக உள்ளவர்களை நாட்டுக்கு அழைத்து வர இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# தென்னாபிரிக்காவின் கோரிக்கைக்கு இலங்கை அரசு ஆதரவளிக்க வேண்டும்



இஸ்ரேல் பிரதமரை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த வேண்டுமென்ற தென்னாபிரிக்காவின் கோரிக்கைக்கு அரசாங்கம் ஆதரவளிக்க வேண்டுமென, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம் பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பாலஸ்தீனின் தற்போதைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சபையில் சமர்ப்பித்து, உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

பாலஸ்தீன் ஆக்கிரமிப்புக்கான எதிர்ப்பு உலகில் பல நாடுகளிலும் தற்போது இடம்பெற்று வருகின்றன. மாணவர்கள் உள்ளிட்ட பொது மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதை காணமுடிகிறது.

அன்று யூதர்கள் கொல்லப்பட்ட அதே வழியில், இஸ்ரேல் அரசாங்கம் பாலஸ்தீனர்களை கொலை செய்வதற்கான நடவடிக்கைகளை கட்டவிழ்த்துள்ளது. இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இஸ்ரேல் தொடர்பில் ஒட்டுமொத்த உலகமும் பேசமுடியாது திராணியற்றுள்ளன. எந்த பலஸ்தீனியரும் அந்த பிரதேசத்தில் இருக்கக்கூடாது என்ற சித்தாந்தத்திலேயே இஸ்ரேல் செயற்படுகிறது. ஹமாஸ் போராளிகள் பணயக்கைதிகளாக பிடித்துவைத்திருக்கும் அனைவரையும் விடுவித்தால், யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதாக இஸ்ரேல் பிரதமர் தெரிவித்ததற்கிணங்க, கட்டார், எகிப்து, அதில் தலையிட்டு ஹமாஸுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டது. இதற்கமைய அந்த நிபந்தனையை ஹமாஸ் ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும், இஸ்ரேல் பிரதமர் யுத்த நிறுத்தத்தை நிராகரித்தார். இப்பின்னணியில் இஸ்ரேல் அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமென்ற தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கு ஆதரவளிப்பதாக எகிப்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# பலஸ்தீனத்துக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம்

இஸ்ரேலுடனான மோதலில் பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீனர்களுக்கான ஆதரவை வெளிப்படுத்தும் நோக்குடனான போராட்டமொன்று கொழும்பில் நேற்று 14 நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் எம்.பி. சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் சுதந்திர பலஸ்தீனத்தை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக குரல் கொடுக்க இதில் அழைப்பும் விடுக்கப்பட்டது

# இஸ்ரேலின் இனப்படுகொலையை கண்டிக்க அரசு முன்வர வேண்டும்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

இஸ்ரேலின் இனப்படுகொலையை கண்டிப்பதற்கு அரசாங்கம் இப்போதாவது முன்வர வேண்டுமென,பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம். பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பலஸ்தீனத்தில் இடம்பெற்று வரும் இனப்படுகொலைகளை தடுப்பதற்கு இன்னும் எவராலும் முடியாமற் போயுள்ளது. இது மனித இனத்துக்கே இழுக்காகும். இந்த செயற்பாடுகளை கண்டிப்பதற்கு அரசாங்கம் இப்போதாவது முன் வர வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பலஸ்தீனின் தற்போதைய நிலை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்து உரையாற்றிய அவர் இன்று பலஸ்தீனர்கள் எதிர்கொள்ளும் நிலையை, நமது முன்னோர்கள் பல நூற்றாண்டுகளாக ஏகாதிபத்திய காலனித்துவக் கொள்கைகளால் சந்தித்தனர். ஒடுக்குமுறைக்கும் வன்முறைக்கும் முகங்கொடுத்து பல துயரங்களை சந்தித்தமையை எமது வரலாற்றின் ஊடாக காண முடிகிறது. 1950 காலகட்டம் ஜவஹர்லால் நேரு, மார்ஷல் டிட்டோ, ஜெனரல் நாசர் உட்பட நம் நாட்டு தலைவர்களும் அணிசேரா முகாமின் தலைவர்களும் காலனித்துவம் மற்றும் நிறவெறிக்கு எதிராக வலுவாக முன்னின்று செயற்பட்ட யுகமாகும்.



ஆனால், சமீப காலமாக, உலகின் வல்லரசுகள், தங்கள் செல்வம் மற்றும் அதிகாரத்தின் காரணமாக, சர்வதேச அளவில் அந்த ஒற்றுமையை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படுகின்றன.

இறுதித் தருணம் வரை தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சியை காப்பாற்றிய சக்திகள், அதேபாணியில் இன்றும் பலஸ்தீன மண்ணில் நடக்கும் அநீதி, அடக்குமுறைகளை மூடி மறைத்து, உலகின் மக்கள் ஆணைக்கு எதிராக சென்று, பிரிவினைவாத, மனிதாபிமானமற்ற ஆட்சிக்கு அடைக்கலம் கொடுக்க முயல்கின்றன.

ஆறு மாதங்களுக்கும் மேலாக பலஸ்தீன மண்ணில் நடத்தப்பட்டு வரும் இனப்படுகொலைகள் மற்றும் பேரழிவை உலகின் பலம் வாய்ந்த ஊடகங்களும், நமது நாட்டின் சில ஊடகங்களும் மூடி மறைத்து வந்தாலும், சமூக ஊடகங்கள் வாயிலாக பலஸ்தீனத்தின் யதார்த்தம் அம்பலமாகிறது.

உலகின் பிரதான பல்கலைகழக மாணவர் தலைமுறையினர் தமது உயிரையும் எதிர்காலத்தையும் அர்ப்பணித்து சுதந்திரம், ஜனநாயகம், நியாயம் மற்றும் நீதிக்காக முன்னின்று போராடும் தறுவாயில் இந்த முன்மொழிவு தொடர்பில் நாம் எமது பாராளுமன்றத்தில் இது தொடர்பில் கலந்துரையாடுகிறோம்.

# "உனக்கு வந்தால் இரத்தம் எனக்கு வந்தால் சட்னியா"

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்கள் துயரங்களை அனுபவித்தபோது பாற்சோறு கொடுத்து சிங்கக் கொடி ஏந்தி கொண்டாடியவர்கள், இப்போது பலஸ்தீனம் தொடர்பில் நீலிக் கண்ணீர் வடிப்பது விந்தையானது. எனினும் இஸ்ரேல் பலஸ்தீன ஆயுத மோதலில் இருதரப்பிலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. பெறுமதியான உயிர்கள் கொல்லப்படுவதை நாம் வன்மையாக கண்டிப்பதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்விடயம் நகைச்சுவை நடிகர் வடிவேலு கூறுவதைப் போன்று “உனக்கு வந்தால் இரத்தம், எனக்கு வந்தால் தக்காளிச் சட்னியா?” என்பது போன்றே உள்ளதாகவும் இராஜங்க அமைச்சர் தெரிவித்தார்.

சொந்த நாட்டுக்குள் சொந்த சமூகம் அழிக்கப்பட்ட போது கொண்டாடினர். 2009 மே மாதத்தில் வடக்கில் ஒரு முள்ளிவாய்க்கால் என்றால், கிழக்கில் பல முள்ளிவாய்க்கல்களை கூற முடியும். வீரமுனை படுகொலை, மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு படுகொலை, சவுக்கடி படுகொலை, கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நூற்றுக்கணக்கானவர்களை கைது செய்த சம்பவம், ஏன் வீரமுனை தொடக்கம் திருகோணமலை வரை நூற்றுக்கணக்கான முள்ளிவாய்க்கால்கள் இருந்துள்ளன. இதன்போது கவலைப்படாதவர்கள் இப்போது பாலஸ்தீன விடயத்தில் முதலைக் கண்ணீர் வடித்து குரலெழுப்புவது வேடிக்கையானது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாலஸ்தீனத்தின் இன்றைய நிலவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில், உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



முஹம்மது இப்ராலெவ்வை முஹம்மது சிராஜ் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். மாவட்ட நீதவான் ஏ,பீற்றர்போள்ஸ் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

271/2 அம்பாரை வீதி பட்டியடிப்பிட்டி அக்கரைப்பற்று 06 இல், வசிக்கும் இவர், சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்ததிலிருந்து சிறப்புடன் மக்கள் பணியாற்றி வருகிறார்.

# ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய கௌரவிப்பு விழா

பேருளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அஷ் செய்க் முஸ்தபா வலியுல்லாஹ்கேட்போர்கூடத்தில் கௌரவிப்பு விழா தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறவை யொட்டி களுத்துறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும் பேருளை தேர்தல் தொகுதியில் உள்ள தமிழ் மொழிமூல பாடசாலைகளின் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்த கௌரவிப்பு விழா பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய அஷ் செய்க் முஸ்தபா வலியுல் லாஹ் கேட்போர்கூடத்தில் 19.05.2024 ஆம் திகதி காலை 9 மணிக்கு தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை சமூக சேவையாளர் எம். பாஸி ஸுபைர் மேற்கொண்டு வருகிறார்.

## நாட்டின் பொருளாதார நிலைமைக்கு...

புரிந்துகொள்வது மிகவும் அவசியமானதாகும் மிலிந்த மொரகொட முன்வைத்துள்ள ஆரம்ச விடயங்களும் பின்வருமாறு,

1. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரேயொரு தீர்வாக துரித பொருளாதார வளர்ச்சி அவசியமாகும். ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் மூலம் இதை அடைய முடியும். இவ்வாறான வழிமுறைகள் பல நாடுகளில் துரித அபிவிருத்திக்கும் ஏழ்மை நிலையை போக்கவும் உதவின.

2. போட்டித்தன்மை, உலகளாவிய தொடர்பு, தனியார்மயமாக்கல் உள்ளிட்டவற்றின் அடிப்படையில் சிறந்த கொள்கைகளை முன்வைத்து சிறந்த பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு நாட்டை ஆளும் அரசியல் சந்தேகத்துக்கிடமின்றி அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே இலங்கையில் சிறந்த பொருளாதார மாற்றம் ஏற்படும்.

3. இலங்கை தனது பொருளாதார சரிவிலிருந்து மீண்டெழ வேண்டுமானால் அடுத்த 10 வருடங்களுக்கு வருடாந்த வளர்ச்சி வீதம் 5% க்கும் அதிகமாக இருக்க வேண்டும்.

4. தற்போதைய கணிப்புகளுக்கமைய பொருளாதார நிலைமை எதிர்வரும் 2032ஆம் ஆண்டுவரை வருடாந்தம் சுமார் 3% க்கும் அதிகமான வளர்ச்சியை எட்டுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. மேலும் 2032ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) கடன் விகிதம் 95% ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னரும் கூட இலங்கைக்கு அதன் கடனை செலுத்தும் நிலைமை கேள்விக்குறியாகலாம். இதன் விளைவாக மீண்டும் மறுசீரமைப்பு மற்றும் சிக்கன நிலைமை தேவைப்படும்.

5. பொருளாதார சீர்திருத்தம் மற்றும் தனியார்மயமாக்கல் ஆகிய விடயங்கள் எந்தவொரு வெற்றிகரமான அபிவிருத்தி திட்டத்தின் ஒருங்கிணைந்த விடயங்களென்ற உண்மையை அனைத்து அரசியல் கட்சிகளும் சமூகமும் புரிந்துகொள்வது மிகவும் அவசியமானதாகும். இந்நிலையில் அனைத்து அரசியல் கட்சிகளும் இந்த விடயங்களை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்க வேண்டியது அவசியமாகும்.

6. அனைத்து கட்சிகளும் தமது முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டுமென்பதுடன், அவர்கள் எவ்வாறு நிதி உதவியளிக்கவுள்ளார்கள் என்பதை விளக்க வேண்டும். அரசியல் கட்சிகள் தமது தேர்தல் பிரசாரங்களின் போது அனைவரையும் கவரும் வகையில் வாக்குறுதிகளை முன்வைத்து, பதவியேற்ற பின்னர் மக்களை தவறாக வழிநடத்தும் யுகம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

## புதிய விவசாய வர்த்தகத்துறை...

உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். இங்கு உரையாற்றிய அவர்:

பெருந்தோட்டத்துறைக்குத் தேவையான புதிய திறன்களைக் கொண்ட பட்டதாரிகளை உருவாக்கவும் இளைஞர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் தேசிய தோட்ட முகாமைத்துவ நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி கூடங்கள், விரிவுரை மண்டபங்கள், கணினி ஆய்வகங்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களுக்கான தொழில் ஆலோசனை மையங்களை இங்கு நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. AI மற்றும் GIS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான மையமும் இங்கு நிறுவப்பட உள்ளது.

இப்புதிய கல்வி மற்றும் நிர்வாக கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 750 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையை அண்டியுள்ள நாடுகளின் சனத்தொகை பல பில்லியன்களால் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் உள்ள நடுத்தர மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் விவசாயத்தை உருவாக்குவதன் மூலம், இலங்கையின் ஏற்றுமதி விவசாயத் தொழிலை உயர்த்த முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றுவதற்கான சட்ட வரைபுக்கு நேற்று (13) அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

"1978ஆம் ஆண்டு முதல் பெருந்தோட்டக் கைத்தொழிலுக்கான பயிற்சி நிறுவனம் ஒன்று தேவைப்பட்டது. அன்று எம்.டி.எச். ஜெயவர்தனவின் இருப்பிடமாக விளங்கிய இப்பகுதியில், இவ்வாறான பயிற்சி நிறுவனத்தை நிறுவுவதற்குத் தேவையான காணி வழங்கப்பட்டது. அப்போது இந்தப் பகுதி நகரமயமாக்கப்படவில்லை. 2016 ஆம் ஆண்டு பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சராக நவீன் திசாநாயக்க இந்நிறுவனத்தை நிறுவுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து நிர்மாணப் பணிகளை ஆரம்பித்தார். பின்னர் நியமிக்கப்பட்ட பெருந்தோட்ட அமைச்சர்கள் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த நிறுவனத்தை அபிவிருத்தி செய்யும் போது, ஒரு வளாகத்தை தோட்டப் பகுதிக்கு மாற்றுவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். கண்டி, மாத்தளை மாவட்டங்களைப் போன்று அனைத்து முக்கிய பயிர்களும் பயிரிடப்படும் மாவட்டத்தில் ஒரு வளாகத்தை திறப்பது மிகவும் முக்கியமானது. இந்தத் தொழிற்துறையில் பணிபுரிந்த எனது நண்பர்கள் பயிற்சிக்காக நுவரெலியா செல்ல வேண்டியிருந்தது.

நமது விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் இத்தகைய நிறுவனங்கள் மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும். வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரம் இன்று மீண்டும் கட்டியெழுப்பப்படுகிறது. விவசாயத்தின் மூலம் இந்த நிலையை அடைய வாய்ப்பு கிடைத்தது.

நான் நாட்டைப் பொறுப்பேற்றபோது, விவசாய உற்பத்தி தடைப்பட்டிருந்தது. மேலும், ஐரோப்பிய பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால், நமது ஆடைத் தொழிலுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் இருக்கவில்லை. எனவே முதலில் இந்த நாட்டில் நெற்பயிர்ச் செய்கையை அபிவிருத்தி செய்ய பாடுபட்டோம். 2022, 2023 இல் சிறுபோகம் மற்றும் 2023 இல், பெரும்போகம் வெற்றியளித்ததால், இத்திட்டத்தைத் தொடர எங்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. அதன்படி, விவசாயத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டது என்றே கூற வேண்டும் என்றார். பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்த ஜனாதிபதி அங்கு வைக்கப்பட்டிருந்த சிறப்பு விருந்தினர் புத்தகத்தில் நினைவுக் குறிப்பு ஒன்றையும் பதிவிட்டார்.இந்நிகழ்வில் கலந்து கொண்டமைக்காக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றும் வழங்கப்பட்டது.

## ஜனாதிபதி பதவிக்கு ரணிலுக்கு...

குறிப்பிட்டார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்:

இத்தருணத்தில் நாட்டு மக்கள் மிகவும் கவனமாக சிந்தித்து தீர்மானங்களை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

தேசிய கொள்கைகளின் கட்டமைப்புக்குள் தெளிவான பயணத்தை ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். சகல கட்சிகளையும் மக்கள் கடந்த 03 அல்லது நான்கு வருடங்களில் மக்கள் நிராகரித்துள்ளனர்.

அரசியல் கட்சிகள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப் படவில்லை.நிலையான தேசிய கொள்கைக் கட்டமைப்பைத் தொடர முடியாததால், நாட்டில் ஒரு பாரதூரமான அவல நிலை ஏற்பட்டுள்ளது. 2048 ஆம் ஆண்டு வரை, நிலையான தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் நாடு முன்னெடுக்கப் பட்டால் எதிர்கால சந்ததியினர் நன்றாக பயன்களை அனுபவித்திருப்பர். வீழ்ச்சியடைந்துள்ள இந்நாட்டை, இன்னும் ஒரு மாதத்திற்குள் ஜனாதிபதி வழமைக்கு கொண்டுவருவார் என்றும் தெரிவித்தார்.

## சுயாதீன விசாரணையில்...

சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுமந்திரன் எம்.பி அது தொடர்பில் சபையில் மேலும் உரையாற்றுகையில்: பாலஸ்தீனத்தின் இன்றைய நிலைமை மிகவும் பாரதூரமானது. இந்நிலையை எவரும் சாதாரணமாக கருதக் கூடாது. இந்த நிலையில் பாராளுமன்றத்தில் இருதலைப்பட்சமாக செயற்படுபவர்களும் உள்ளனர். அவர்களின் செயற்பாடு நயவஞ்சகமானது. மனித உரிமைகள், சர்வதேச மனித உரிமை சட்டங்கள், இனப்படுகொலை உள்ளிட்ட சர்வதேச குற்றங்கள் தொடர்பில் அவர்கள் பேசுகின்றனர். ஒரு நாட்டுக்குள் இடம்பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் குறிப்பிட்டு, பலஸ்தீன நிலைமை குறித்து பேசுகின்றனர்.

பலஸ்தீனத்தில் அதிகளவான மக்கள் கொலை செய்யப்பட்டு குவிக்கப்படுகின்றனர். இவர்களின் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் சிறுவர்களும் பெண்களுமாவர் . இந்த யுத்தத்தை பொறுத்தவரையில் அது ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையேயான மோதலாகும். இலங்கையிலும் இதுபோன்ற நிலைமை ஏற்பட்டது. அதனை உள்விவகாரம் என்றும், சர்வதேச குற்றச் செயல் அல்ல என்றும் கூறியவர்கள், பலஸ்தீன சம்பவத்தை உள்விவகாரம் என்று கூறுவதில்லை.

மே, மாதத்தில் முள்ளிவாய்க்காலில் பெருமளவான மக்கள் உயிரிழந்ததை நினைவு கூரும் வாரமாக இந்த வாரம் காணப்படுகிறது. யுத்தம் நடைபெற்ற வலயத்திற்குள் 4 இலட்சம் மக்கள் சிக்கியிருந்தனர். அவர்கள் உண்ண உணவின்றி கஞ்சியையே அருந்தினர். அதனை நினைவு கூரும் வகையில் அங்கு கஞ்சி பரிமாறப்படுவது வழக்கமாகும்

எமது மக்கள் இறுதிகட்ட யுத்த காலத்தில் கஞ்சியைக் கூட பெற்றுக்கொள்ள முடியாது இருந்ததுள்ளனர். இதனை நினைவுகூர இடமளிக்காமை அரசாங்கத்தின் மோசமான நிலைமையையே எடுத்துக்காட்டுகிறது. இவ்விடயத்தில் சம்பூரில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்ட முறையை பார்த்தோம். குறித்த பெண் ஆண் பொலிஸாரால் இழுத்துச் செல்லப்படுகிறார். கஞ்சி அருந்தியதாகவே அவரை இழுத்துச் செல்கின்றனர். கஞ்சி விவகாரத்தில் பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாக தடையுத்தரவுகளையும் பெற்றுக்கொள்கின்றனர். இந்த நேரத்தில் பலஸ்தீனத்தில் இறக்கும் மக்கள் தொடர்பில் பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால், இங்கே உள்நாட்டிலேயே இறந்தவர்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என கேட்க விரும்புகிறோம். பலஸ்தீனத்தின் மீது அக்கறை கொண்டுள்ளீர்கள். அந்த அக்கறை எமது மக்கள் மீது காணப்படவில்லையே என்று கேட்க விரும்புகிறேன். இது இரட்டை வேடத்தையே காட்டுகிறது.

## இணுவில் ஐஸ் போதை உற்பத்தி

பொருட்கள் உள்ளிட்டவற்றை கைப்பற்றினர். யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் கைதான சந்தேகநபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், இணுவில் பகுதியில் வீடொன்றில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி செய்யப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இத்தகவலின்படி சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், வீட்டைச் சுற்றிவளைத்தனர். இதன் போது வீட்டிலிருந்த நபர்கள் தப்பியோடியுள்ளனர். வீட்டினுள் சென்ற பொலிஸார் சோதனை நடத்திய போது , வீட்டின் அறை ஒன்றில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கான ஆய்வு கூடங்கள் போன்று காணப்பட்டுள்ளன .

அத்துடன் சில மாதிரிகளை மேலதிக ஆய்வுகளுக்காக சேகரித்தும் சென்றனர். இதன் ஆரம்ப கட்ட தகவலின்படி, இரசாயன பதார்த்தங்களை பிரித்தெடுத்து, ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கும் கட்டமைப்பு காணப்படுவதாக சந்தேகிக்கப்படுகிறது. இரசாயனவியல் தொடர்பிலான அறிவுள்ள நபர்கள் மூலமாகவேதான் இவற்றை செய்ய முடியும் என தெரிவித்துள்ளனர். தற்போது வீட்டுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. இரசாயன பகுப்பாய் பிரிவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தப்பிச் சென்றவர்களையும் ,வீட்டில் வசித்து வந்தவர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்

அதேவேளை வீட்டில் வசித்து வந்த, பிரதான சந்தேகநபர் யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் இயங்கிய வன்முறை கும்ப லுடன் ஈடுபட்டு குற்றங்கள் பலவற்றுடன் தொடர்புபட்டவர் என்று தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இதனால், தற்போது வன்முறை சம்பவங்களிலிருந்து விலகி வாழ்வதாக நீதிமன்ற வழக்குகளில் இந்நபர் தெரிவித்துள்ளார். போதைப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டு வந்துள்ளமை பொலிஸ் தரப்பில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## இன்புளுவன்சா B: குழந்தைகள்,...

பெப்ரவரி வரை மற்றும் ஏப்ரல் முதல் ஜுலை வரை காய்ச்சலின் இரண்டு உச்சநிலைகள் உள்ளன. இந்நேரத்தில், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் மத்தியிலும் தொற்றுக்கள் கணிசமாக அதிகரித்துள்ளன.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் தொற்றாளர் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளன.

தற்போதைய நிலவரப்படி, இன்புளுவன்சா A முதன்மையானதாக காணப்படுகிறது. இருப்பினும், இன்புளுவன்சா B யும் பரவலாக உள்ளது. இது தொடர்பான அறிகுறிகள் தொடர்ந்தால், உடனடி மருத்துவ உதவியை நாடுவதே சிறந்தது.

இன்புளுவன்சா போன்ற நோய்களால் கர்ப்பிணித் தாய்மார்கள், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள், 60 வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் நாட்பட்ட நோயாளர்கள் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, கொழும்பு, ராகமை, களுபோவில, நீர்கொழும்பு வைத்தியசாலைகள், லேடி ரிட்ஜ்வே சிறுவர்களுக்கான வைத்தியசாலை மற்றும் தொற்று நோய் வைத்தியசாலை உட்பட 20 வைத்தியசாலைகளில் இன்புளுவன்சா போன்ற நோய் கண்காணிப்பை அதிகரிக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல்**

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டுமானப் பணிகளுக்காக**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் கி.மீ.1500 வீதி அபிவிருத்தி வேலைத்திட்டதின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

I. **RDA/SP/1500km/WP/DL/98** - கைஸராம மாவத்தையை மேம்படுத்துதல் - கம்பஹா நிறைவேற்றுப் பொறியியல் பிரிவு

II. **RDA/SP/1500km/WP/DL/99** - மாஹேன வீதியை மேம்படுத்துதல் - கம்பஹா நிறைவேற்றுப் பொறியியல் பிரிவு

**வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக பொருட்களை வழங்கல்**

2. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா நிறைவேற்று பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி வேலைத்திட்டதின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

I. **RDA/SP/1500km/WP/DL/100** - உக்கல்பட ஆரம்ப பள்ளியின் நுழைவுச் வீதியை மேம்படுத்துவதற்காக Grade 30 Readymix Concrete வழங்கல் - கம்பஹா நிறைவேற்றுப் பொறியியல் பிரிவு

II. **RDA/SP/1500km/WP/DL/101** - கிரிகத்த நாம்பிட வீதியை மேம்படுத்துவதற்காக Grade 30 Readymix Concrete வழங்கல் - கம்பஹா நிறைவேற்றுப் பொறியியல் பிரிவு

III. **RDA/SP/1500km/WP/DL/102** - களனிய வெதமுல்ல பொது சேவை ஓய்வூதியாளர் விடுதிக்கு செல்லும் வீதியை மேம்படுத்துவதற்காக Grade 30 Readymix Concrete வழங்கல் - கம்பஹா நிறைவேற்றுப் பொறியியல் பிரிவு

3. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.
தொ.பே 033-2221020 / 033-2226752


## கீழ் வளிமண்டலத்தில் தளம்பல்...

சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. கிழக்கு மற்றும் தென் மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களில் சில இடங்களில் காலை வேளையிலும் மழை எதிர்பார்க்கப்படுகிறது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

## 'சிசு சரிய' சேவைக்கு மேலும்...

மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார். தற்போது, பாடசாலை மாணவர்களின் பருவச் சீட்டு மற்றும் மாணவர்களுக்காக பாரிய நிதியை மானியமாக செலவிட்டு வருகிறது. தற்போது நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதிக்காக 1,500 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 2024 ஆம் ஆண்டுக்கென 2,000 மில்லியன் ரூபாவை இதற்காக திறைசேரி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். பெருமளவிலான பாடசாலைகள் சிசு சரிய பஸ்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாகவும், இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## பெண்களின் பிரதிநிதித்துவத்தை...

உள்வாங்கும் வகையில், பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கான பிரேரணையாக இச்சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஒரு அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் தேசியப் பட்டியலில் 50 வீதத்துக்குக் குறையாத பெண் உறுப்பினர்களை உள்ளடக்கும் வகையில் மேற்படி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 22ஆவது அரசியலமைப்புத் திருத்தமாக இது கருதப்படவுள்ளது.

## வாடகை வீடுகள், அறைகளில்...

இதன்படி, 37,183 குடும்பங்களைச் சேர்ந்த 1,12,963 நபர்கள் வாடகை வீடுகளிலும் 10,755 குடும்பங்களைச் சேர்ந்த 34,133 நபர்கள் வாடகை அறைகளிலும் தங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு தங்கியிருந்து குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர் நலன் கருதி...

சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இவ்வாறு அழைப்பு விடுத்தார். இதுபற்றி அவர் தெரிவித்ததாவது: கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளன. இதனால், பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் தற்போது இணையத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் சுமார் 3,500 மாணவர்கள் விடுதிகளை விட்டு வெளியேறியுள்ளனர். 'கொவிட்' தொற்றால் 2022 இல் திட்டமிடப்பட்ட உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற முடியாதிருந்தது. இதனால், 2023 ஆண்டில் தோற்றி பல்கலைக்ழகத்துக்கு தெரிவான இம்மாணவர்கள் முதலாவது ஆண்டில் கல்வி கற்பதாகவும், 2023ஆம் ஆண்டுக்கான தேர்வு இவ்வாண்டு (2024) நடத்தப்பட்டு முடிவுகள் இம்மாதம் வெளியிடப்படுமென்றும் அவர் கூறினார். கல்விசாரா ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக பல்கலைக்கழக அனுமதிக்கான மாணவர்கள், தமது கையேடுகளை தயாரிப்பதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்
### (15.05.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
அவசியமான காரியங்களை அதிக முயற்சியோடு செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சிலருக்கு இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**ரிஷபம்:**
உங்கள் முயற்சிகளில் முன்னேற்றம் தென்பட்டாலும் தடை தாமதங்கள் ஏற்படுவதை தவிர்க்க இயலாது. உத்தியோகத்தர்கள் தங்கள் பதிவேடுகளை பாதுகாப்பாக வைத்து கொள்வது அவசியம்.

**மிதுனம்:**
தடைகள் இருந்தாலும் உங்கள் சாமர்த்தியத்தால் அதனை வென்று விடுவீர்கள். சிலருக்கு புதிய பதவி, சம்பள உயர்வு, விரும்பிய விட மாற்றம் கிடைக்க நேரலாம்.

**கடகம்:**
தேவையற்ற பிரச்சனைகள் தோண்டி வரும். வழக்கமான பொறுமையால் அதை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் சிலருக்கு விரும்பிய இடம் மாற்றம் கிடைக்கலாம்.

**சிம்மம்:**
எதிர்பார்த்த பண வரவு தாமதமாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்கு வெளியூர் மாற்றம், பதவி உயர்வு கிடைக்கலாம்.

**கன்னி:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பணிச்சுமை அதிகரிக்கும்.

**துலாம்:**
புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து விடுவதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, விரும்பிய இட மாற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:**
உற்சாகத்தோடு பணிகளில் ஈடுபட்டு பல காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தர்கள் அவசர வேலை ஒன்றை சிறப்பாக செய்து உயர் அதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

**தனுசு:**
செய்யும் காரியங்களில் சிறு சிறு தொல்லைகள் ஏற்படலாம். அவற்றை உங்கள் திறமையால் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தர்கள் பணிகளில் கவனமாக இருந்து மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

**மகரம்:**
திட்டமிட்ட காரியங்களில் தீவிர முயற்சியுடன் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகத்தில் சிலருக்கு விரும்பிய இட மாற்றம், சம்பள உயர்வு கிடைக்கக்கூடும்.

**கும்பம்:**
நண்பர்களின் உதவியுடன் முன்னேற்றம் காண்பீர்கள். உத்தியோகத்தர்கள் பணியில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும் .

**மீனம்:**
எதையும் சிந்தித்து முடிவெடுங்கள். உத்தியோகத்தர்கள் தங்கள் பணிகளில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோப பார்வைக்கு இலக்காக நேரிடும்.

## பலஸ்தீன் - இஸ்ரேல்... (03ஆம் பக்கத் தொடர்)

மரணிக்கின்றனர். பலர் படுகாயமடைந்துள்ளார்கள். தாக்குதலின் இடிபாடுகளுக்கு மத்தியில் சிக்குண்டுள்ளவர்களை மீட்டெடுக்கும் காணொளிகள் சர்வதேச ஊடகங்களில் வெளியாகியுள்ளன. இவ்வாறான நிலையை கண்டு அனைவரும் கண்ணீர் சிந்துவர்.

தெற்கு காஸாவில் உள்ளவர்களுக்கு கடந்த வாரம் உணவு மற்றும் நீர் கிடைக்கவில்லை. 3 இலட்சத்து 60 ஆயிரம் பலஸ்தீனர்களை இஸ்ரேல் இராணுவத்தினர் தெற்கு காஸா எல்லை பகுதியிலிருந்து வெளியேற்றியுள்ளார்கள். குறுகிய காலத்துக்குள் சுமார் 50 இலட்சம் பலஸ்தீனர்கள் அகதிகளாகியுள்ளார்கள் என ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட்டுள்ளது. இதனூடாக பலஸ்தீனத்தின் கொடூரமான நிலையை விளங்கிக் கொள்ள முடியும். பலஸ்தீனர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறேன்.

## முன்பள்ளிகளை முறைப்படுத்த... (03ஆம் பக்கத் தொடர்)

எதிர்வரும் ஜுனில், இரண்டாம் தவணை பாடசாலைகள் ஆரம்பமாகும் போது இவர்களுக்கு பயிற்சிகள் வழங்குவோம். அவ்வாறானவர்கள் கல்வி பொது தராதர உயர்தரம் மற்றும் சாதாரண தரத்தில் சித்தியடையாமல் இருந்தால் அவர்கள் ஆரம்பத்தில் பவுண்டேஷன் கோர்ஸ் செய்து அதன் பின்னர் டிப்ளோமோ பட்டப்படிப்பு என மேற்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் திறந்த பல்கலைக்கழகத்தின் 26 கிளைகள் காணப்படுகின்றன. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவர் கொழும்புக்கு வர வேண்டிய அவசியம் கிடையாது. அங்கு கற்க முடியும். நாட்டில் உள்ள 34,000 முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களில் 6,000 பேரே டிப்ளோமா பெற்றவர்கள் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

## முப்படையினர், பொலிஸாருக்கு...

வதிவிடத்துக்காக அரச காணிகள் வழங்கப்படவுள்ளன. படை வீரர்களுக்கு காணி வழங்கும் இந்த வேலைத்திட்டம் இதற்கு முன்னர் பல தடவைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது வெற்றிகரமாகவும் துரிதமாகவும் நடைமுறைப்படுத்தப் படாமையால் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி இந்த குழுவை நியமித்துள்ளார். ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய படைவீரர்களுக்கு காணிகளை வழங்குவது தொடர்பில் பரிசீலித்து துரிதமாக ஏற்பாடு செய்வது இந்த குழுவின் பொறுப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## G.C.E O/L முடிந்தவுடன்...

கல்வி கற்கை நடவடிக்கைகளை ஆரம்பிப்பது பொருத்தமெனக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கமைய, 2024 க.பொ.த சாதாரண தர பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு உடனடியாக,க.பொ.த உயர்தர வகுப்புக்களை ஆரம்பிப்பதற்கு கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பாராளுமன்றம் கலைக்கப்படும்:...

ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு மாத்திரமே வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை தெளிவாகக் கூறப்பட்டுள்ளதால், இவ்வாறான உண்மைக்கு புறம்பான அறிக்கைகளை நம்பி ஏமாற வேண்டாமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## கையடக்க தொலைபேசியூடாக...

உயிரிழந்துள்ளார். இந்தச் சிறுமி கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்யப்பட்டிருந்த அறையின் தரையில் படுத்திருந்தவாறு பார்த்துக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கையடக்க தொலைபேசியை பார்த்துக் கொண்டிருந்த சிறுமி எதுவும் பேசாமல் தரையில் இருப்பதைக் கண்ட, சிறுமியின் மூத்த சகோதரர் தாயிடம் இதனை தெரிவித்தார். மயங்கிய நிலையில் தரையில் கிடந்த சிறுமியை உடனடியாக பேருவளை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிறுமியை சுயநினைவுக்கு கொண்டுவர வைத்தியசாலை ஊழியர்கள் கடும் முயற்சி மேற்கொண்டபோதும் அது பலனளிக்கவில்லை. கையடக்கத் தொலைபேசி சார்ஜ் செய்யப்பட்ட இடத்தில், சிறுமி அதனை மார்பு பகுதியில் வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. கையடக்கத் தொலைபேசியில் ஏற்பட்ட அதிக மின்னோட்டத்தையடுத்து இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது, அதிக மின்னோட்டம் காரணமாக சிறுமியின் மார்புப் பகுதியில் இரண்டு சிறு காயங்களும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## கல்விக்கு வயது தடையில்லை...

ஓய்வு பெற்ற இவர், விசேடமாக கணித பாடப் பரீட்சையில் தோற்றியுள்ளார்.

## எழுத்தாளர் கே. கணேஷ் நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியிட ஏற்பாடுகள்



இலங்கையின் மூத்த படைப்பிலக்கியவாதியும், மொழிபெயர்ப்பாளரும், பாரதி இலக்கிய இதழை முன்னர் வெளியிட்டவருமான தலாத்து ஓயா கே. கணேஷ் ( 1920 – 2004 ) அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, அன்னாரின் புதல்வி திருமதி ஜெயந்தி சங்கர் சிறப்பு மலர் வெளியிடவிருக்கிறார்.

(அமரர்) கே. கணேஷ் அவர்களுடன் இலக்கிய நட்புறவிலிருந்த எழுத்தாளர்களிடமிருந்தும்,

கே. கணேஷ் அவர்களின் வாழ்வையும் பணிகளையும் பற்றி அறிந்தவர்களிடமிருந்தும் ஆக்கங்கள் கோரப்படுகின்றன. அன்னாரின் படைப்புகள் குறித்தும் இம்மலருக்கு எழுதலாம்.நூற்றாண்டு மலருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் அன்பர்கள் பின்வரும் மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

jayanthireap@yahoo.com

(தகவல்: லெ. முருகபூபதி)

## கோறளைப்பற்று சாதனைப் பெண்கள் 21 பேர் விருது வழங்கி கௌரவிப்பு

### வாழைச்சேனை பொதுசன நூலக ஏற்பாட்டில் விமரிசையான விழா

வாழைச்சேனை பொதுசன நூலகத்தின் ஏற்பாட்டில் 'கோறளைப்பற்றின் சாதனைப் பெண்கள்_2024' எனும் மகுடத்தின் கீழ் இப்பிரதேசத்தினைச் சேர்ந்த, கல்வியில் முன்னேறி பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் 21 பெண்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

இவ்விழாவினை திட்டமிட்டு, இதற்கான நிதி அனுசரணை, விழா மண்டப வடிவமைப்பு போன்ற பணிகளை அ.ஸ்ரீதருடன் இணைந்து நூலகத்தின் உத்தியோகத்தர்களான த.தாரணி, சி.சிவனேஸ்வரி, து.தனுஜா, அ.ஆயிஷா ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். விழாவுக்கான அனுசரணையினை வாழைச்சேனை ஐ.டி.ஸ்பேஸ் மற்றும் தங்கமஹால் ஜுவலரி, தமிழ்த்தாய் புத்தக இல்லம் ஆகிய நிறுவனங்கள் வழங்கியிருந்தன.

பிரதேசசபையின் செயலாளர் எஸ். நவநீதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக வாழைச்சேனையைச் சேர்ந்தவரும், கிழக்குமாகாண கல்விப் பணிப்பாளருமான திருமதி சுஜாதா குலேந்திரகுமார் கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக வாழைச்சேனையைச் சேர்ந்தவரும், அவுஸ்திரேலியா குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணிபுரிபவருமான கலாநிதி துஷ்யந்தி லவன் கலந்து சிறப்பித்தார்.

இவர்களுடன் விருது பெற்ற ஏனைய சாதனைப் பெண்களான சீ.லோகேஸ்வரி (கல்வி), அருந்ததி சுந்தரமூர்த்தி (கல்வி), விஜிதா முருகவேள் (கல்வி), ஸோபா ஜெயரஞ்சித் (கல்வி), மேகலா சிவகுமாரன் (கல்வி), பொற்செல்வி சுஜித்தலால் பீரிஸ் (இலக்கியம், நடனம்), சந்திரன் விஜிதா (சட்டம்), சுஜா எல்விஸ் (சட்டம்), வேணுகா அருட்செல்வம் (மருத்துவம்), பிரஸன்னியா சிவஞானசேகரம் (மருத்துவம்), சுஷ்மிதா மகாலிங்கம் (மருத்துவம்), ஷாலினி பன்னீர் (மருத்துவம்), சிவநேசன் சந்துஜா (மருத்துவம்), நிலு உதயகுமார் (இசை), மிலுக்சா அருளானந்தன் (சட்டம்), நிலுக்ஸா தேவராசா (பொறியியல்), அருள்ரதி சுப்பிரமணியம் (சட்டம்), தனுஷி கோபிஜன் (சட்டம்), அர்ச்சனா அகிலன் (கணினி மென்பொருள்) ஆகியோருடன் விருதுக்குரிய சாதனைப் பெண்களின் குடும்பத்தினர், நூலக உத்தியோகத்தர்கள், வாசகர் வட்டத்தினர் எனப் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.



நூலகப் பொறுப்பாளர் தாரணி தங்கத்துரை அவர்களது வரவேற்புரையுடன் தொடங்கிய நிகழ்வில் தமிழ் மொழி வாழ்த்து, வரவேற்பு நடனம் போன்றவற்றினைத் தொடர்ந்து தலைமையுரையாற்றிய செயலாளர், வாழைச்சேனைப் பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியில் சாதித்த பெண் மணிகளை ஒருசேர இவ்விழாவில் காண்பது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாகவும், விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள நூலக உத்தியோகத்தர்களுக்கு பாராட்டுக்களையும் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர், சாதனைப் பெண்களுக்கு விருதுகளை வழங்கி வைத்து உரை நிகழ்த்தினார். தனது சொந்த ஊரில் கல்வியில் சாதித்த பெண்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கின்ற புதியதொரு நிகழ்வினை வாழைச்சேனை பொதுசன நூலகம் நடத்துவது மகிழ்ச்சியளிப்பதாகவும், நூலகத்திற்கும் சமூகத்திற்குமான தொடர்பினை இது இன்னும் வலுப்படுத்தும் எனவும், பெண்களைக் கௌரவிக்கும் விழாவினை நடத்துகின்ற நூலக உத்தியோகத்தர்களை மிகவும் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கான விருதினை பிரதேச சபையின் செயலாளரும் நூலக உத்தியோகத்தர்களும் வாசகர் வட்டத்தினரும் இணைந்து வழங்கி வைத்தனர்.

அதனையடுத்து, கலாநிதி துஷ்யந்தி லவன், ஒரு தொகுதி சாதனைப் பெண்களுக்கு விருதுகளை வழங்கி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார்.

சாதனைப் பெண்களின் சார்பில் விஜிதா முருகவேள், ஸோபா ஜெயரஞ்சித் ஆகியோர் ஏற்புரை நிகழ்த்தினர். கவிஞரும் பேச்சாளருமான தமிழூராள் அனுஸ்திக்கா நிகழ்வினை தொகுத்து வழங்கினார். அம்றிதா ஜெயரஞ்சித் சாதனைப் பெண்களை வாழ்த்தி கவிதை பாடினார். 'ப்ரணவாலயா கலாமித்ரம்' நடனப்பள்ளி சார்பாக நடனங்கள் அரங்கேற்றப்பட்டன. சர்வதேச தாய்மொழி தினப்போட்டி நிகழ்வுகளில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கான பரிசுகளும் விழாவின் போது வழங்கி வைக்கப்பட்டன.



எஸ். ஏ. ஸ்ரீதர்
(வாழைச்சேனை தினகரன் நிருபர்)

## மருத்துவமனைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்; டில்லி பொலிசார் உஷார்!

இந்தியத் தலைநகர் டில்லியில் உள்ள 4 மருத்துவமனைகளுக்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது. இது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

கடந்த மே 1ஆம் திகதி டில்லியில் உள்ள 150 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்கள் வந்தன. பின்னர் அது புரளி என கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில், டில்லியில் உள்ள தீப் சந்த் மருத்துவமனை, ஜிடிபி மருத்துவமனை, தாதா தேவ் மருத்துவமனை, ஹெட்கேவார் மருத்துவமனை ஆகிய 4 மருத்துவமனைகளுக்கு மின்னஞ்சல் மூலம் நேற்று வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளது.

இது குறித்து விசாரணை நடந்து வருகிறது. சம்பவ இடத்தில் வெடிகுண்டு நிபுணர்கள் ஆய்வு செய்தனர். டில்லி பொலிசார் விசாரணையைத் தொடங்கி உள்ளனர். நான்கு மருத்துவமனைகளுக்கு பொலிஸ் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. மிரட்டல் விடுத்த நபரை பொலிசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

## புலிகள் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்தது இந்திய அரசு!

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை நேற்று முதல் (14.05.2024) மேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. 'ஊபா' சட்டத்தின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடித்துள்ளது மத்திய அரசு.

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு 1980களில் இந்திய அரசு ஆதரவளித்தது. அதே நேரத்தில் 1987 ஆம் ஆண்டு இந்தியா _ இலங்கை இடையேயான தமிழர் அரசியல் பிரச்சினை தொடர்பான ஒப்பந்தம் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தியது. இதனால் இலங்கையில் அமைதிப் பணிக்கு சென்ற இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் வெடித்தது.

இதனைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் ஸ்ரீபெரும்புதூரில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். ராஜீவ் காந்தி படுகொலைக்கு காரணம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது குற்றச்சாட்டு ஆகும்.

இதனால் விடுதலைப் புலிகள் இயக்கம் 1991 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நீடிக்கப்படுகிறது. இது தொடர்பாக விசாரணை ஆணையம் விசாரணை ஒன்றை நடத்தி விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடித்தும் வருகிறது இந்திய மத்திய அரசு.

2009 ஆம் ஆண்டு இலங்கை இறுதி யுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டது. ஆனாலும் இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடை நீடிக்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் கடந்த 2019 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீடிக்கப்பட்டது.

அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தியாவின் இறையாண்மைக்கு தீங்கு விளைவிக்கும் வகையில், வன்முறை சார்ந்த நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும், இந்திய குடிமக்களுக்கு பெரும் தீங்கு விளைவிக்கும் வகையில் தொடர்ந்து இந்தியாவுக்கு எதிரான நிலையை கடைப்பிடிப்பதாகவும் முன்னைய தடையின் போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது மேலும் 5 ஆண்டுகளுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நேற்று முதல் நீட்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மத்திய அரசின் அறிக்கையில், வெளிநாடுகளில் வாழும் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிராக தொடர் பிரசாரம் செய்வதாகவும் மத்திய அரசு இந்திய அரசியல் சாசனத்துக்கு எதிரான வெறுப்புணர்வை அதிகரிக்க செய்வதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

सत्यमेव जयते
Goverment Of India

## குழு மோதல்; ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்று மோதலாக மாறியதில் கூரிய ஆயுதம் ஒன்றினால் தாக்கி ஒருவரை கொலை செய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக மஹஓய பொலிஸார் தெரிவித்தனர்.

மஹ ஓய பொலிஸ் பிரிவின் சமகிபுர பகுதியில் கடந்த 13 ஆம் திகதி பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் 26 வயதுடைய சமகிபுர , மஹ ஓய பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது.சம்பவத்தில் உயிரிழந்தவருடைய சடலம் மஹ ஓய வைத்திய சாலையின் பிரேத அறையில் தற்சமயம் வைக்கப்பட்டுள்ளதுடன் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 18,23 வயதுடைய சமகிபுர, மஹ ஓய பகுதியைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹ ஓய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


**2025ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்**

**வென்னப்புவ பிரதேச சபை**

1987 இல 15 பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்படவேண்டிய, வடமேல் மாகாண கௌரவ ஆளுநரால் 2020.10.29ம் திகதி மற்றும் இல. 2199/15 இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் வர்த்தமானியில் (அதிவிசேட) பிரசுரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட பிரதேச சபை வரவு-செலவு திட்ட பெறுகை மற்றும் செயற்படுத்தப்படும் சட்ட இல 6இன் பிரகாரம் வென்னப்புவ பிரதேச சபையின் செயலாளரான என்னால் 2025ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்திற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் பொதுமக்களிடம் கோரப்படுவதாக அறிவித்துக்கொள்கிறேன். உங்களது 2025ம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனை அல்லது ஆலோசனைகளை 2024 ஜுன் 30ம் திகதிக்கு முன்பு எனக்கு கிடைக்குமாறு தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்குமாறு தயவுடன் அறிவித்துக்கொள்கிறேன்.

**செயலாளர்**
**வென்னப்புவ பிரதேச சபை**

**2024.05.09ம் திகதி**
**வென்னப்புவ பிரதேச சபை**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

திங்கள் 2024.05.13

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5474
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,505,316.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 9 3 7 1 5 4

**அத சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 049
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 7 1 5 4

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம் 3716 — சீட்டிழுப்பு திகதி 2024.05.13
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 77,133,106.96
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 31 35 42 61 — விசேட எழுத்து H
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 85274

**Mega POWER**
சீட்டிழுப்பு இலக்கம் 1822 — 2024.05.13
97068
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 432,604,584.00
ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 14 38 59 79
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**VIP**
திகதி 2024.05.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0300
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 5 6 9 1 5 0
L7 எழுத்து J
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 29,862,772.48

**ராசி சுப பலன்**
திகதி 2024.05.13 — சீட்டிழுப்பு இலக்கம் 783
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,516,458.24
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 02 15 54 59
தனயோக இலக்கம் 54941 — நாளுக்கான விதி எண் 11

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் 1504 — 2024.05.13
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 91,991,606.64
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 07 23 30 80 — விசேட எழுத்து U
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 70603



**NOTICE**

**UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA**

**VACANCIES FOR THE POSTS OF TEMPORARY POSITIONS**

**WALK-IN INTERVIEW**

Walk-in interview for the following posts will be held on **21st May 2024** at the Boardroom of the University of Vavuniya, Pambaimadu, Vavuniya as follows:

A. **Faculty of Business Studies – 21.05.2024 9.30 a.m.**
 a. Department of Business Economics
 - Temporary Assistant Lecturer in Business Economics.
 b. Department of Finance & Accountancy
 - Temporary Assistant Lecturer in Banking & Insurance.

 **Note:**
 1. Preference will be given to those who have special degree in Banking & Insurance.
 2. If no suitable candidates are eligible for the posts, candidates who have relevant Professional qualifications will be considered for appointment under contract / Assignment basis.

B. **Office of the Vice Chancellor 10.30 a.m.**
 - Temporary Assistant Lecturer in Tamil for Sinhala Students.
 - Temporary Assistant Lecturer in Sinhala for Tamil Students.

Applicants who are interested in the above posts are requested to visit University of Vavuniya Website http://www.vau.ac.lk to obtain further details.

**Registrar/ University of Vavuniya**
**14.05.2024**



**அரச ஈட்டு முதலீட்டு வங்கி**

**SMIB இல் வேலை வாய்ப்புகள்**

தேசத்திற்கு முன்னணி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, உயர் தரமான வாடிக்கையாளர் திருப்தி மற்றும் பரந்த வகையில் டிஜிட்டல் சேவைகளை வழங்கும் நோக்குடன் வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் உள்ளது. அதற்காக பின்வரும் பதவிக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் தொழில்நுட்ப மாற்றம் ஒன்றுக்காக முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து நாம் விண்ணப்பங்களை கோருகிறோம்.

**தகவல் தொழில்நுட்ப (IT) இடர் அதிகாரி**

**முக்கிய பொறுப்புகள்**

- CBSL அடிப்படை பாதுகாப்பு தரநிலை வழிகாட்டலை விதிவிலக்கின்றி வங்கியினால் கடைப்பிடிப்பதை உறுதி செய்தல்.
- தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல் விழிப்புணர்வை மீளாய்வு செய்தல் மற்றும் சரிபார்த்தல்.
- தகவல் தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் உட்கட்டமைப்பு/ முறைமை கட்டுப்பாடுகள்/ மூலோபாயங்கள்/ கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்/ உடன்பாடுகளின் போதுமான தன்மை மற்றும் செயல்திறனை மதிப்பிடல்.
- தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் முன் மற்றும் பின் செயற்படுத்தல் மீளாய்வுகளை நடத்தல் மற்றும் அவை வங்கியின் அபாய திறன் அளவுடன் சீரமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல்.
- தகவல் தொழில்நுட்ப பாதுகாப்புக்கு தொடர்புடைய மீளாய்வு முயற்சிகளுக்கு தகவல் தொழில்நுட்ப மற்றும் தணிக்கையுடன் நெருங்கி பணியாற்றல்.
- பரிந்துரைகளுடன் தகவல் தொழில்நுட்ப அமைப்பு இடர்கள் மற்றும் வரைவு IS தணிக்கை அறிக்கைகளை மதிப்பிடல்.
- பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சிகள் வழியாக தகவல் பாதுகாப்பில் உள்ள அறிவு இடைவெளிகளை அடையாளம் காணல் மற்றும் தீர்ப்பதில் மனித வள துறையுடன் ஒருங்கிணைந்து நெருக்கமாக செயற்படல்.
- அவ்வப்போது ஊடுருவல் சோதனை/ பாதிப்புகள் மதிப்பீடுகள்/ EIRMC இற்கு முக்கியத்துவம் வாய்ந்த வெளிப்புற நிகழ்வுகளின் அறிக்கைகளில் செயற்பாட்டு விடயங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பின்தொடர்தல்.
- இடர் முகாமைத்துவ பிரிவினால் நடத்தப்படும் வருடாந்த IT BCP பயிற்சியில் செயலூக்கத்துடன் பங்கேற்றல்.
- முக்கியத்துவம் வாய்ந்த முக்கியமான பகுதிகளின் அடிப்படையில் தகவல் தொழில்நுட்ப இடர்கள் தொடர்பான நடைமுறைகள் மற்றும் செயலிகளின் மாதிரி கட்டுப்பாட்டு சோதனையை மேற்கொள்ளல்.
- தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு நிகழ்ச்சி முகாமைத்துவ முறைமையின் செயல்திறன் மிக்க செயல்பாட்டை உறுதி செய்தல்.
- KPIs உடன் தொடர்புபட்ட தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு மேம்பாடு, கண்காணிப்பு மற்றும் அறிக்கை.
- தகவல் தொழில்நுட்ப கொள்கைகளை மீளாய்வு செய்தல்.
- முறைமை செயற்படுத்தலுக்கு தொடர்புபட்ட அபாய அதிகரிப்பு.

**தகைமைகள்**

- ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் முறைமைகள் முகாமைத்துவத்தில் இளமாணிப் பட்டம் ஒன்றுடன் பின்வரும் தகைமையில் ஒன்று.

 தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு சான்றிதழ் (CISA, CISM, CISSP, OSCP, OSCE, GIAC, ISO 27001 முன்னணி தணிக்கையாளர் / செயல்படுத்துபவர்)

**அனுபவம்**

வங்கி/ நிதி நிறுவனம்/ தகவல் தொழில்நுட்ப இடர் ஆலோசனை அல்லது காப்புறுதித் துறையில் ஒட்டுமொத்தமாக நான்கு (04) ஆண்டுகள் அனுபவம். வலைப்பின்னல் அல்லது பயன்பாட்டு பாதுகாப்பு ஆகியவற்றில் ஒன்றில் அனுபவத்துடன் தகவல் பாதுகாப்பில் பணியாற்றிய அனுபவம். அபேட்சகர் சிறந்த தொடர்பாடல், ஆளிடை திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.

**ஊதியம்**

சம்பள அளவு – வங்கி அங்கீகரித்த கொடுப்பனவுகளுடன் சேர்த்து மாதாந்தம் ரூபா 79,740 - 1,500 x 20 – 109 , 740 (வாழ்க்கைச் செலவு, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு. மாதாந்த மொத்த சம்பளம் தோராயமாக ரூபா 177,000/-).

வயது – 40 வயதுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும் (எவ்வாறாயினும் ஏற்கனவே அரச துறை அமைப்பு ஒன்றில் பணியாற்றுபவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

**பொதுவான நிபந்தனைகள்**

தேர்வு முறை – வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறையின்படி நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் தேர்வு இடம்பெறும்.

விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி - 2024.05.29

**எவ்வாறு விண்ணப்பிப்பது**

ஆர்வம் கொண்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் உறவினர் அல்லாத இரு தொழில்முறை நடுவர்களின் பெயர்கள், முகவரி மற்றும் தொடர்பு இலக்கங்கள் மற்றும் தமது கல்வி/ தொழில்முறை பதிவுகளின் பிரதிகள் மற்றும் தமது சுயவிபரக் கோவையை கீழுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். அனைத்து விண்ணப்பங்களினதும் இரகசியம் கண்டிப்பாக பேணப்படுவதோடு எந்த வகையான ஆதரவு திரட்டல்களும் தகைமை இழப்பாக கருதப்படும். இந்த ஆட்சேர்ப்புக்காக தேர்வு மேற்கொள்ளல், ஒத்திவைத்தல் அல்லது ஆட்சேர்ப்பை .ரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த செயற்பாடுகள் மற்றும்/ அல்லது தேர்வு அளவுகோல்களில் மாற்றங்களை செய்யும் உரிமை வங்கி வசமானது. பணிப்பாளர் சபையின் முடிவு இறுதி மற்றும் முடிவானதாகும்.

**விண்ணப்பங்கள் careers@smib.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மாத்திரம் அனுப்பப்படல் வேண்டும்.**

# காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 1964 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட இல : 28 இன் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது குறிப்பு இல : BKP/LAN/AQUI/D2/3-2**
**காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/05/ 2014/ எச்டபிள்யூ/ 407**

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி/ காணிகளை அரசு சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2024/03/25 ஆம் திகதிய 2377/09 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் பகுதி 111 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயளாளர் பிரிவு | : புளத்கொகுபிட்டிய |
| கிராம சேவகர் பிரிவு | : இல. 129 பி - புளத்கொகுபிட்டிய |
| கிராமம் | : புளத்கொகுபிட்டிய |
| காணியின் பெயர் | : ஜினிவலபிட்டிய வத்தை |
| ஆரம்ப வரைபட இலக்கம் | : கே. 3701 |
| துண்டு இலக்கம் | : 01 |

**எச்.டீ.எஸ்.என் ஹெட்டிகே**
**பிரதேச செயளாளர் மற்றும் காணி சுவீகரித்தல் அதிகாரி.**
**புளத்கொகுபிட்டிய**

**பிரதேச செயலகம்,**
**புளத்கொகுபிட்டிய.**
**06.05.2024**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

# விலைமனு கோரல்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

## இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்தல்

இந்தத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்களுக்கு இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக திணைக்கள கொள்முதல் குழுவின் தலைவரினால் 2024.06.05 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்கப்படுகின்றன.

கொள்வனவு செய்யப்படும் இயந்திர உபகரணங்கள் மற்றும் அவற்றுக்கான விலைமனு பாதுகாப்பு முறிகளின் பெறுமதி பின்வருமாறு:

| வகை | அளவு | விலைமனு பாதுகாப்பு முறி (ரூ) |
|---|---|---|
| Desktop Computer | 134 | 446,000.00 |
| Laptop Computer | 37 | 118,000.00 |
| Laser Jet Printer | 96 | 57,500.00 |
| Photocopier Machine | 34 | 292,000.00 |
| Dot Matrix Printer | 42 | 34,000.00 |
| Scanner | 41 | 61,500.00 |
| Finger Print Machine | 13 | 7,500.00 |
| UPS | 40 | 4,500.00 |

விலைமனு ஆவணங்களை 2024.06.05 ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரை மீளளிக்கப்படாத ரூ.12,500/- கட்டணத்தை இந்தத் திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கணக்காளரிடம் (வழங்கல்) சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு கணக்காளரிடம் (வழங்கல்) பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 011 3070870 ஆகும். தேவையெனின் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் பரீட்சிக்க முடியும்.

02. விலைமனுதாரர்களுடன் முன்சந்திப்பொன்று 2024.05.22 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. பூரணப்படுத்திய விலைமனு ஆவணங்களை விலைமனு நிபந்தனைகளின் பிரகாரம் மேற்படி விலைமனு பாதுகாப்பு முறியுடன் இணைப் பிரதிகளில் (02) முத்திரையிட்டு இந்த அலுவலகத்தில் வைக்கப்படுள்ள டெண்டர் பெட்டியில் இடவோ அல்லது பதிவுத் தபால் மூலம் பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பவோ முடியும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "supply, install and maintain of computers, printers,photocopier machines, scanners, Finger Print Machine and UPS for the registrar general's department 2024/03" எனக் குறிப்பிடல் வேண்டும்.

04. 2024.06.05 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர் நாயகம்**
**கொள்முதல் குழுவின் தலைவர்**
**பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

## மாவட்ட செயலகம் - மாத்தறை

# கேள்விக்கான அழைப்பு

## முலட்டியன பியதாஸ ரத்னாயக்க ஞாபகார்த்த பிக்குனிகள் பயிற்சி நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தின் IIம் கட்டம் நிர்மாணித்தல்

**(அடிப்படை மதிப்பீட்டுத் தொகை வெட் இன்றி ரூ. 8,333,596.77)**

**ஒப்பந்த இலக்கம் - DSM/ENG/PRO/2024/01**

முலட்டியன பியதாஸ ரத்னாயக்க ஞாபகார்த்த பிக்குனிகள் பயிற்சி நிறுவனத்தின் விரிவுரை மண்டபம் IIம் கட்டம் நிர்மாணிப்பு செயற்றிட்டத்துடன் சம்பந்தப்பட்டதாக பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
நிர்மாண காலம் 210 நாட்களாகும்.

02. ஒப்பந்தங்கள் வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன், கேள்விகளை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி வரை செல்லுபடியாகுமாறு நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) C7 அல்லது C6 தரத்திற்காக கட்டிட நிர்மாணத் துறையில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை மாத்தறை மாவட்டச் செயலகத்தின் பிரதம பொறியியலாளரிடம் பெற்றுக் கொள்ள முடிவதுடன், கேள்வி ஆவணங்களை அம் முகவரியிலேயே அலுவலக நாட்களில் 09.00 மணிமுதல் 16.00 மணிவரை பரீட்சித்துப் பார்க்கலாம்.

தொடர்பு கொள்ளக்கூடிய தொ.பே. இலக்கம் : 041 - 2231504
பெக்ஸ் : 041 - 2222234

04. இச் செயற்றிட்டத்துடன் சம்பந்தப்பட்ட கேள்வி ஆவணங்களை 2024.05.15 முதல் 2024.06.05 பி.ப. 3.00 வரை அலுவலக வேலை நாட்களில் அலுவலகத்தின் கணக்கு இலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணமான ரூ.2000.00 தொகை செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை பொறியியல் பிரிவிற்கு சமர்ப்பித்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்விகள் 2024.06.06ம் திகதி 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு மாத்தறை மாவட்ட செயலகத்தின் 1ம் மாடியில் மாவட்ட செயலாளரின் உத்தியோகப் பூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது மாவட்ட செயலாளர், மாத்தறை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அனுப்பும் போது உறையின் இடதுபக்க மேல் மூலையில் முலட்டியன பியதாஸ ரத்னாநாயக்க ஞாபகார்த்த பிக்குனிகள் பயிற்சி நிறுவனத்தில் விரிவுரை மண்டபம் IIம் கட்டத்தை, நிர்மாணிக்கும் செயற்றிட்டத்திற்காக கேள்விகளைச் சமர்ப்பித்தல் என்று குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மாத்தறை மாவட்ட செயலகத்தின் 1ம் மாடியில் மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் அறையில் இவ் வேளையில் வருகைதந்துள்ள ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மற்றும் கேள்விதாரர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

06. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.05.22 மு.ப. 10.00 இற்கு மாத்தறை மாவட்ட செயலகத்தின் 1ம் மாடியில் மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ கலந்துரையாடல் அறையில் நடைபெறும்.

07. சகல கேள்வியுடன் கீழ்க்காணும் விதத்தில் கேள்வி பிணையொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- கேள்வி ஆவணங்களின் 09ம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
- மாத்தறை மாவட்ட செயலாளரின் பெயரில் விநியோகிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ரூ. 85000/- பெறுமதியான கேள்விப் பிணையொன்றாக இருத்தல் வேண்டும்.
- கேள்விகள் ஏற்றுக் கொள்வதற்காக குறித்த இறுதித் தினம் அல்லது நீடிக்கப்படும் தினம் முதல் 105 நாட்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
- கேள்வி ஆவணங்களில் ITB 16ம் பிரிவில் குறிப்பிடப்படும் முகவரகத்திலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றாக இருத்தல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணை இரத்துச் செய்ய முடியாத மற்றும் பெறுகை நிலையற்ற தக்மைக்கு முன்பு வேண்டுதலின் அடிப்படையில் நிபந்தனையற்ற நிதியாக மாற்றக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

**கனேஷ அமரசிங்ஹ**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்**
**மாத்தறை**

# பெறுகை அறிவித்தல் - தேசிய போட்டிரீதியில் கேள்வி கோரல் (NCB)

## மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

1. மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் சார்பாக மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக இயைபுடைய தகைமைகள் மற்றும் தகுதிகள் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன என்பதுடன் குறித்த வேலைகளும் அதற்குரிய பொறியியல் அளவுப்பத்திரத் தொகையும் ஒப்பந்தக் காலமும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
2. இயைபுடைய வேலைகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வேலைக்கும் இயைபான வகையில் நாளதுவரையில் தரவேற்றம் செய்யப்பட்ட CIDA பதிவு இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
3. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதான பொறியியலாளர் (பாடசாலைக் கட்டிடங்கள்), மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி அலுவலகத்திலிருந்து (தொலைபேசி இலக்கம் 081-2225494) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-05-15ஆம் திகதி முதல் 2024-06-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.00 வரையில் அந்த அலுவலகத்தில் இயைபுடைய ஆவணங்களையும் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2024-05-15ஆம் திகதி முதல் 2024-06-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையான காலப் பகுதியில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   அ. 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் குறித்த கேள்வி ஆவணக் கட்டணத்தை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் (பாடசாலைக் கட்டிடங்கள்) அவர்களுக்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ. 02ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றுடன் குறித்த கேள்வி ஆவணக் கட்டணத்தை மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கண்டி, யட்டிநுவர வீதி, மாகாண சபைக் கட்டிடத்தொகுதி, பணிப்பாளர் -பொறியியல் சேவைகள் (கல்விக் கட்டிடங்கள்) அவர்களுக்குச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
5. இது தொடர்பிலான கேள்வி முன்னோடிக் கூட்டம் 2024-05-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி, மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6. மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியாக தயாரிக்கப்பட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-06-05ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் கண்டியில் அமைந்துள்ள மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
7. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மாகாண கல்விப் பணிப்பாளரின் பெயரில் அட்டவணையில் தரப்பட்டுள்ள காலம் வரை செல்லுபடியாகும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பிணை முறியொன்று அல்லது மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) அவர்களுக்குப் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை எல்லாக் கேள்விகளுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்வி ஆவணங்களில் வேண்டப்பட்டுள்ள தொழில்நுட்பம், நிதி மற்றும் ஏனைய தகைமைகளுடனான அனைத்து ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. சகல கேள்விகளினதும் பெறுமதி 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் வேளையில் ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்கு வெற்றிகரமான கேள்விதாரரினால் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க ஒப்பந்தச் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. இந்த கேள்வி கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான கேள்வி கோரல் (NCB) நடைமுறைப்படுத்தப்படும் வேலைகளின் வரிகள் தவிர்ந்த மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவிற்கும் குறைவாகும். 2021-02-18ஆம் திகதிய 04/2016(III)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் CIDA தரத்தைக் குறிப்பிடுதல் மற்றும் பிராந்திய தேசிய கேள்விதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| தொ. இல | கேள்வி இலக்கம் | வேலை | மானிய மூலாதாரம் | பொறியியல் அளவுப் பத்திரப் பெறுமதி ரூபா மில்லியன் (வெட் இன்றி) | தேவையான ஆகக் குறைந்த பதிவு (CIDA) | மீளளிக்கப்படும் பிணை முறி அல்லது ரொக்கப் பணம் | | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை முறி செல்லுபடி யாகும் காலம் (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) (மீளளிக்கப் படாதது) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை முறியின் பெறுமதி (ரூபா) | பண வைப்பு (ரூபா) | | | |
| **1ஆம் அட்டவணை** | | | | | | | | | | |
| 01 | CP/EDU/NCB/ 2024/03/01 | கிராகம அரச அழகியற்கலை ஆசிரியர் பாடசாலையின் தொல்லியலின் உரிமையொன்றான மாம்பிட்டிய வளவை தொல்லியல் விதிமுறைகளின் பிரகாரம் பாதுகாத்தல். | பொதுக் கல்வியை நவீனமயப் படுத்தும் செயற்றிட்டம் - GEMP | 38,531,483.96 | C4,C5 | 760,000.00 | 380,000.00 | 165 | 119 | 11,000.00 |
| 02 | CP/EDU/NCB/ 2024/03/02 | க/மகமாயா மகளிர் வித்தியாலயத்தின் நீச்சல் தடாகம், வர்த்தகப் பிரிவுக் கட்டிடம் மற்றும் உ/தர விஞ்ஞானப் பிரிவிற்கு அருகிலுள்ள பக்கச் சுவரின் திருத்தவேலைகளைச் செய்தல் | அமைச்சின் நேரடி மானியம் | 7,964,380.85 | C6, C7 | 158,000.00 | 79,000.00 | 150 | 105 | 3500.00 |
| 03 | CP/EDU/NCB/ 2024/03/03 | க/பதியுதீன் மகளிர் வித்தியாலயத்தில் 33.60 x 7.65m மூன்று மாடிக் கட்டிடத்தின் (அயேஷா கட்டிடம்) திருத்தவேலைகளைச் செய்தல் | - அதே - | 7,320,319.00 | C6, C7 | 146,000.00 | 73,000.00 | 150 | 105 | 3500.00 |
| 04 | CP/EDU/NCB/ 2024/03/04 | க/மாரஸ்ஸன தேசிய பாடசாலையில் ஒற்றை மாடி பிரதான மண்டபத்தின் (31.80 x 7.30m) திருத்தவேலைகளைச் செய்தல் | - அதே - | 4,392,858.77 | C7, C8 | 86,000.00 | 43,000.00 | 120 | 91 | 3000.00 |
| 05 | CP/EDU/NCB/ 2024/03/05 | மா/ரங்கிரி தம்புல்ல தேசிய பாடசாலையின் 110x30 இரண்டு மாடிக் கட்டிடத்தின் கூரைத் திருத்தவேலைகள் மற்றும் கைப்பிடியின் திருத்தவேலைகளைச் செய்தல் | - அதே - | 3,964,827.32 | C7, C8 | 78,000.00 | 39,000.00 | 120 | 91 | 2500.00 |
| 06 | CP/EDU/NCB/ 2024/03/06 | நு/காமினி தேசிய பாடசாலையில் 03 மாணவர் மலசலகூடங்களின் திருத்தவேலைகளைச் செய்தல் | - அதே - | 3,710,023.07 | C7, C8 | 74,000.00 | 37,000.00 | 120 | 91 | 2500.00 |
| 07 | CP/EDU/NCB/ 2024/03/07 | சேனாதீர தேசிய பாடசாலையில் மலசலகூடம் மற்றும் வகுப்பறைக் கட்டிடத்தின் ஒரு பகுதியின் (21.5 x 6.1m) திருத்தவேலைகளைச் செய்தல் | - அதே - | 2,996,970.98 | C7, C8 | 58,000.00 | 29,000.00 | 120 | 91 | 2500.00 |
| 08 | CP/EDU/NCB/ 2024/03/08 | க/கடுகண்ணாவ தேசிய பாடசாலையில் 90x25 இரண்டு மாடிக் கட்டிடத்தின் (8, 9 வருடம்) கோபுரத்தின் புனரமைப்பு வேலைகளைச் செய்தல் | - அதே - | 2,935,157.00 | C7, C8 | 58,000.00 | 29,000.00 | 150 | 91 | 2000.00 |
| 09 | CP/EDU/NCB/ 2024/03/09 | க/பதியுதீன் மகளிர் வித்தியாலயத்தில் 21ஆம் இலக்க 110x25 மூன்று மாடிக் கட்டிடத்தின் பெல்கனி கைப்பிடியின் திருத்தவேலைகளைச் செய்தல் | - அதே - | 2,470,091.32 | C7, C8 | 48,000.00 | 24,000.00 | 90 | 91 | 2000.00 |
| **2ஆம் அட்டவணை** | | | | | | | | | | |
| 01 | CP/EDU/NCB/ 2024/03/10 | மமா/க/பேராதனை மத்திய மகா வித்தியாலயத்தின் அபாயகரமான கட்டிடத்தின் திருத்தவேலைகளைச் செய்தல் | கல்வி பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம் | 4,900,000.00 | C7, C8 | 98,000.00 | 49,000.00 | 90 | 91 | 3000.00 |
| 02 | CP/EDU/NCB/ 2024/03/11 | மமா/தெனு/தந்துரே மகா வித்தியாலயத்தின் கட்டிட திருத்தவேலைகளைச் செய்தல் | - அதே - | 5,100,000.00 | C6, C7 | 102,000.00 | 51,000.00 | 75 | 105 | 3000.00 |
| 03 | CP/EDU/NCB/ 2024/03/12 | மமா/தெனு/யஹலதென்ன முஸ்லிம் வித்தியாலயத்தில் 100 x 20 கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகளைச் செய்தல் | - அதே - | 4,100,000.00 | C7, C8 | 82,000.00 | 41,000.00 | 75 | 91 | 3000.00 |
| 04 | CP/EDU/NCB/ 2024/03/13 | மமா/நு/வ/ செனரத் நவோதயா மகா வித்தியாலயத்தில் 18.0 m x 6.0 m ஒற்றை மாடிக் கட்டிடத்தின் திருத்தவேலைகளைச் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் | - அதே - | 5,200,000.00 | C6, C7 | 104,000.00 | 52,000.00 | 90 | 105 | 3000.00 |
| 05 | CP/EDU/NCB/ 2024/03/14 | மமா/நு/வ/ ஹைபொரஸ்ட் 03ஆம் இலக்க தமிழ் வித்தியாலயத்தில் மாணவர்களின் பாதுகாப்பிற்கு வேலி மற்றும் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் | - அதே - | 5,000,000.00 | C6, C7 | 100,000.00 | 50,000.00 | 75 | 105 | 3000.00 |

**மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர்,**
**மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி.**
**தொலைபேசி/தொலைநகல் இலக்கம்: 081 222 4041/42**

**2024-05-15.**

# தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில், சஹீட் எம். ரிஸ்மியின் பார்வையும் பதிவும்

## அடையாளம் 5

தேசபந்து ஜெஸீமா இஸ்மாயிலின் சேவை அளப்பரியது. அன்னார் மீது பாசம் கொண்டவர்களும் நண்பர்களும் அவரை யாரும் நினைத்துப் பார்க்கக் காணோம் என்ற ஏக்கக் குரல் எழும்பித் தணிந்த கால கட்டத்தில் என்னுடன் மடவளை ஜும்ஆப் பள்ளிவாசலின் பரிபாலன சபைத் தலைவர், அகில இலங்கை மொத்த சில்லறை வியாபார சங்கத்தின் தலைவர், தொழிலதிபர் நாஜிம் மற்றும் ஊடகவியலாளர் இக்பால் அலி ஆகியோர் கூட்டாக அவர் இல்லம் சென்று சந்தித்தோம். அவரைப் பார்க்க வேண்டியது, சுக நலம் விசாரிக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கின்றது.

தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் மீது அன்பும் அபிமானமும் கொண்ட நாங்கள் தினகரன் பத்திரிகையில் தொடர்ந்து எழுதும் அடையாளம் கட்டுரைக்கு தங்களைச் சந்திக்க வந்துள்ளதாக அவரிடம் விளங்கப்படுத்தி ஒப்புதலைப் பெற்றுக் கொண்டோம். அதற்கு ஏற்ற வகையில் அவருடன் கலதுரையாடலை மேற்கொண்டோம். அவர் ஆண்டுகள் எல்லாம் மறந்து போயிற்று. அதை தன்னிடம் கேட்க வேண்டாம். சம்பவங்களை மட்டும் பகிர்ந்து கொள்கின்றேன் என்று கூறிவிட்டு எம்மோடு பல தரப்பட்ட விடயங்களை பகிர்ந்து கொண்டார்.

முஸ்லிம் சமூக பெண்களுடைய கல்வி எழுச்சியில் தனக்கென தனித்துவமானதும் நவீனத்துவமிக்கதுமான பாணியில் தன் பணிகளை மேற்கொண்டு அவர் முஸ்லிம் பெண்களது கல்வி, சமூகப் பணி, ஒலிபரப்புத் துறை என்று பல்வேறு துறைகளில் அர்ப்பணித்துச் சேவையாற்றியுள்ளார்.

தேசபந்து ஜெஸீமா இஸ்மாயில் (பிறப்பு 1935) இலங்கையை சேர்ந்த கல்வியியலாளர், ஒலிபரப்பாளர் மற்றும் சமூக ஆர்வலரும் ஆவார். இவர் மனித உரிமை வழக்கறிஞராக சேவையாற்றியுள்ளார். கல்வி, மனித உரிமை, ஒலிபரப்பு ஆகிய துறைகளில் பல உயர் பதவிகளை வகித்துள்ளார். முஸ்லிம் மகளிர் ஆராய்ச்சி மற்றும் நடவடிக்கை மன்றம் எனும் அமைப்பின் நிறுவனரும், இலங்கை முஸ்லிம் பெண்கள் மாநாட்டின் தலைவருமாவார். இவர் நாட்டின் முக்கிய பிரச்சினைகள், இளைஞர் எழுச்சி, பெண் உரிமைகள், சமாதானம் மற்றும் ஜனநாயகம் ஆகியவைகளை பற்றி உரையாற்றியுள்ளமை குறிப்பிடதக்கது.

1989 ஆம் ஆண்டு இலங்கையின் மூன்றாவது உயரிய கௌரவமான தேசபந்து விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். தேசபந்து அவர்கள் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் சிறந்த முன்மாதிரி பெண்ணாகத் திகழ்கின்றார்.

1980ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டார். 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் குண்டு வெடிப்புகள் தொடர்பாக அறிக்கைகளை சமர்ப்பிக்கும் குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை முஸ்லிம் பெண்கள் மாநாட்டின் நிறுவனரானார். மேலும் இவர் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தராக சேவையாற்றியுள்ளார். இப்படி இவருடைய ஆளுமைகள் பல.

இவர் தந்தை நீர்ப்பாசன பொறியியலாளர் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பொறியியலாளர் எம். டி. எஸ். அஹமட் ஆவார். அக்கரைப்பற்று ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாக சபையின் தலைவரின் புதல்வர். கொழும்பு சாஹிராக் கல்லூரியில் கல்வி கற்றவர். தாய் பெயர் பாழீனா, அவர் கல்முனை எம். எஸ். காரியப்பர் குடும்பத்தைச் சேர்ந்தவர். எம். எஸ். காரியப்பரின் தங்கை ஆவார். ஜெஸீமாவின் தாய்வழி குடும்பத்தினர் உள்ளூர் அரசியலில் ஈடுபட்டிருந்தனர். அவரின் தாய் தேர்தல் காலங்களில் வாக்குப்பதிவு முகவராக பணியாற்றியுள்ளார்.

ஜெஸீமா இஸ்மாயில் 1935 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் கல்முனை பிரதேசத்தில் இருந்து சுமார் இரண்டரை மைல் தொலைவில் அமைந்துள்ள சாய்ந்தமருது என்ற கிராமத்தில் பிறந்தார். இவரின் தந்தை நீர்ப்பாசான பொறியியலாளரும், தாய் இல்லத்தரசியுமாவார். இவரது பாட்டனார் பள்ளிவாசல் அறங்காவலராகப் பணியாற்றியுள்ளார். ஜெஸீமா பழைமைவாத குடும்பப் பின்னணியை கொண்டவர். ஆனால் அவரது தந்தை அவருக்கு கல்வியை தொடர ஊக்கமளித்தார். கொழும்பில் புனித பிரிட்ஜெட் கன்னியர்மடத்தில் கல்வி கற்றார். அக்கல்லூரியின் மாணவிகளின் தலைவியாகவும் இருந்துள்ளார்.

இவர், பேராதனை பல்கலைக்கழகத்திலும், சிலோன் பல்கலைக்கழகத்திலும் 1955 ஆம் ஆண்டு தனது 20,வது வயதில் பட்டம் பெற்றார்.

சிலோன் பல்கலைக்கழகத்தில் 1955 ஆம் ஆண்டு பட்டம் பெற்றபின் கல்வி, மனித உரிமை, ஒலிபரப்பு ஆகிய துறைகளில் பணிபுரிந்தார். தேவி மகளிர் வித்தியாலயத்தில் அதிபர் கலாநிதி விமலா டி சில்வாவின் வழிகாட்டலில் கடமையாற்றினார். பின்பு கனடா சென்று மெக்கில் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

முதுகலை டிப்ளோமாவை அவுஸ்திரேலியா சிட்னி பல்கலைகழகத்தில் பூர்த்தி செய்தார்.

ஜெஸீமா இஸ்மாயில், பேராசிரியர் மஹ்ரூப் இஸ்மாயிலை திருமணம் முடித்தார். பேராசிரியர் மஹ்ரூப் இஸ்மாயில் 13 ஜுன் 2016 இல் தனது 85ஆம் வயதில் காலமானார்.

கண்டியைச் சேர்ந்த வைத்தியர் மஹ்ரூப் இஸ்மாயீல் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர். தனது கணவர் கனடா பல்கலைக்கழகத்தில் மேல் பட்டப்படிப்புக்காக செல்ல வேண்டியிருந்தது.

அங்கு தன் கணவருடன் சென்று பட்டப் பின் பட்டப்படிப்பை மேற்கொண்டு நிறைவு செய்தார். இவர் கொழும்பு மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாகவும் கடமையாற்றியுள்ளார். புனித தேவி பாலிகா பாடசாலையின் அதிபர் கலாநிதி விமலா டி சில்வாவிடம் ஜெஸீமாவை தந்தை அழைத்துச் சென்று இவரை ஆசிரியராக பயிற்றுவிக்க வேண்டும் என்று கூறி அவரிடம் ஒப்படைத்தார்.





ஆனாலும் ஜெஸீமாவுக்கு ஆசிரியர் பணி வெறுப்பாக இருந்தது. பாடசாலை அதிபர் முதல் வகுப்பொன்றை வழங்கி படிப்பிக்கச்சொன்னார். முதல்நாள், இரண்டாம் நாளும் செல்லவில்லை. மூன்றாம் நாள் சென்று படிப்பித்தார். 'டெபடிஸ்' என்ற ஆங்கில கவிதை ஒன்றை எடுத்துப் படிப்பித்துக் காட்டி அதே போன்று நடித்தும் காட்டினார். பிள்ளைகள் மிகுந்த ஆர்வத்துடன் கற்க முனைந்தனர். அதன் பின்னர் ஆசிரியர் தொழிலை கைவிடாமல் விரும்பி கற்பிக்க ஆரம்பித்தார். அக்கல்லூரியின் அதிபர் விமலா டி. சில்வா மிகவும் திறமைமிக்கவர். சிறந்த ஆளுமையுடையவர். பெண் ஒருவர் எவ்வாறு பாடசாலையினை வழிநடத்துகிறார் என்ற அனுபவங்களையும் இயல்பாகவே ஜெஸீமா அங்கு அவரிடம் கற்றுக் கொண்டார்.

அப்பொழுது புனித தேவி பாலிகாவின் அதிபர் கலாநிதி விமலா டி. சில்வா, ஜெஸீமாவிடம் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் அதிபர் வெற்றிடம் நிலவுவதாக கல்வி அமைச்சு விண்ணப்பம் கோரியுள்ளதாக தெரிவித்தார். அதற்கு அவர் தனக்கு அதிபர் பதவி விருப்பமில்லை. பிள்ளைகளுக்கு ஓர் ஆசிரியராக இருந்து படிப்பிக்கவே விரும்புகிறேன் என்று அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

ஆசிரியராக இருந்து கற்பிப்பது தான் சிறந்த பணி என்று தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டார். அவருடைய கற்பித்தல் திறன் அங்கு கல்வி கற்ற மாணவிகளுக்கும் நன்கு ஈர்த்து விட்டது. சகல மாணவிகளின் நன்மதிப்பைப் பெற்ற முதன்மை ஆசிரியர் என்ற தகுதிக்கு உரிமையாளராக ஜெஸீமா அங்கு மதிக்கப்பட்டார்.

அதிபர் விமலா டி சில்வா அவர்களின் ஆசிர்வாதத்துடன் கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் பொறுப்பை ஏற்றார். அவர் பாடசாலையின் மேம்பாட்டுக்காக முழு மூச்சாக இயங்கினார். அவர் கணவர் கூட வந்து அவருடைய கல்விப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார். ரோயல் கல்லூரியுடன் நடைபெற்ற விவாதப் போட்டி, உட்பட ஏனைய எத்தனையோ போட்டிகள் அனைத்திலும் முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகள் முதல் இடத்தைப் பெற்றார்கள். மாணவிகளும் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டார்கள். அல் இஸ்லாம் என்ற ஒரு பத்திரிகை வந்தது.

அதில் முதல் பக்கம், இரண்டாம் பக்கத்தில் அவருடைய முயற்சிகளுக்கும் செயற்பாடுகளுக்கும் எதிரான பிரசாரங்களை மேற்கொள்ளாத நாட்கள் கிடையாது. அந்த விமர்சனம்தான் என்னை இந்தளவுக்கு உயர்த்தியது என்று கூறலாம்.

சிலவேளை, ஜும்ஆ குத்பா மிம்பர் மேடைகளிலும் நான் விமர்சிக்கப்பட்டுள்ளேன். தமிழ் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டிகள் நடைபெறும். அவர் இருந்த கால கட்டத்தில் முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவர்கள் வருகிறார்கள். எல்லாப் பரிசுகளையும் தட்டிச் செல்வார்கள் என்ற பயமும் பரபரப்பும் அன்று இருந்தது. அங்கு கற்ற மாணவிகள் நான் அவருடைய பிள்ளைகள் என்றுதான் பார்த்துப் பழகினார். உறவு கொண்டாடினார். அவர் அதிபராக இருந்தது மட்டும்தான் மாணவிகள் கடுமையான இரவு பகல் பாராமல் உழைத்தார்கள். அவருடைய திறமை இலங்கை முழுவதும் அறிந்த விடயம். அவருடைய ஞானத்தை பிள்ளைகள் வரமாகப் பெற்றுக் கொண்டனர்.

ஜெஸீமா இஸ்மாயில் அவர்கள் இன்றைய முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பெயரை ஓங்கச் செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர். தனது தந்தையின் வழிகாட்டலுடன் ஆசிரியர் தொழிலைக் கற்று கொழும்பு முஸ்லிம் மகளிர் கல்லூரியின் மீது அக்கறை கொண்டு பெயர் நாமத்தை முஸ்லிம் பெண்கள் கல்லூரியில் அதிபராக 1975 1988 வரை சுமார் 13 வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

அப்பாடசாலையின் அதிபர் கதிரையில் அமர்ந்து உழைத்தார். குறிப்பாக இந்நாட்டினுடைய முஸ்லிம் பெண்களுடைய கல்வி மறுமலர்ச்சிக்காகவும் சமுதாய மாற்றத்திற்காகவும் நாட்டின் கல்வி எழுச்சிக்காகவும் தொலை நோக்குச் சிந்தனையோடு செயலாற்றியவர். ஜெசிமா 32 வருட காலமாக கல்வி கற்பித்தலில் ஈடுபட்டிருந்தார்.

அன்னார் முஸ்லிம் பெண்கள் குறித்து பதிப்பித்த ஆய்வு நூல் இலங்கை முஸ்லிம் பெண்களுடைய வாழ்வியலின் பல்வேறு பரிமாணங்களையும் வாழ்க்கை வரலாற்றையும் பல்வேறு இலங்கை முஸ்லிம் பெண்கள் சார்ந்த பின்புலங்களை படம்பிடித்துக் காட்டுகிறது. குறிப்பாக சுனாமி காலத்தில் கிழக்கு முஸ்லிம் பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தவேளை அவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும் ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம் பெண்களுடைய மீள் எழுச்சிக்காகவும் அவர் களமிறங்கி ஆற்றிய பங்களிப்புக்கு இந்நூல் போதுமானதாகும்.

இலங்கை முஸ்லிம் பெண்கள் மத்தியில் நிலை கொண்டிருந்த பல்வேறு பிரச்சினைகளுக்கு விடியலை நோக்கிய பயணத்திற்கும் இலங்கையிலுள்ள தலை சிறந்த ஆய்வறிஞர்களின் கட்டுரைகளைத் தொகுத்து தமது அறிவாண்மையால் ஆங்கிலத்தில் மிகப் பெறுமதியான நூலை வெளிக்கொணர்ந்துள்ளார். இது பாராட்டுக்குரியது.

அவர் பற்றிய குறிப்புக்களை ஒரு சிறிய புத்தகம் ஒன்றில் பதிவு செய்து வருகிறார். தான் மரணம் எய்தினாலும் அந்த குறிப்பு புத்தகத்தில் அவர் பற்றிய சகல தகவல்களும் உள்ளன. யார் கேட்டு வந்தாலும் அதை எடுத்துக் கொடுங்கள் என்று தன் சகோதரியிடம் கூறியுள்ளேன்.

17 சமூக நலன்புரி அமைப்புகளுடன் சேர்ந்து பங்காற்றியுள்ளார். பெப்ரல் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு, பெண்கள் அமைப்பு என்று பல அமைப்புக்களோடு சேர்ந்து சேவையாற்றியுள்ளார். பெண்கள் அமைப்பின் ஊடாக நிறையப் புத்தகங்களை வெளிக்கொணர்ந்துள்ளார் என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது. பத்திரிகைகளில் சுமார் 600 கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அவர் இல்லத்தில் பெரு எண்ணிக்கையிலான புத்தகங்களுடன் நூலகம் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இக்பால் அலி

# இக்கிரிகொல்லாவ ஹமீதிய்யாவில் 05ஆவது பட்டமளிப்பு விழா





**திறப்பனை தினகரன் நிருபர்**

அ/ இக்கிரிகொல்லாவ ஹமீதிய்யா அரபுக் கல்லூரியின் 05 ஆவது பட்டமளிப்பு விழா அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் அநுராதபுரம் கிளையின் தலைவரும், கல்லூரி முதல்வருமான அஷ் ஷெய்க் ஆதம் யாசின் (ரஹ்மானி) தலைமையில் கடந்த 10 வெள்ளி இக்கிரிகொல்லாவ ஜும்ஆப் பள்ளிவாசலில், ஜும்ஆத் தொழுகையைத் தொடர்ந்து இடம் பெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவின் பிரதம அதிதிகளாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பிரதித் தலைவர் அஷ் ஷெய்க் எச். உமர்தீன் மௌலவி, மௌலவி இஸ்மாயில் ஆகியோர்கள் கலந்து சிறப்பித்தனர். இங்கு உலமாக்களின் சிறப்பும் அவர்களின் மாண்பும் என்ற தலைப்பின் கீழ் ஜும்ஆ உரை ஏற்பாடு செய்யப்பட்டு இப்பட்டமளிப்பு விழாவை கல்லூரி நிர்வாகிகளும் பள்ளி நிர்வாகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

ஹமீதிய்யா அரபுக் கல்லூரியின் 2024 ஆம் வருடத்தின் ஐந்தாவது அல் ஆலிம் பட்டத்தை 11 மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

இவ்விழாவில் ஹமீதியா அரபுக் கல்லூரியின் நிர்வாகிகள், போசகர்கள் இக்கிரிகொல்லாவ ஜும்ஆ பள்ளி நிர்வாகிகள், போசகர்கள் மற்றும் ஊர் ஜமாஅத்தினர், முக்கியஸ்தர்கள் நலன் விரும்பிகள் என பலர் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

# பங்களாதேஷ் தூதுக்குழுவினர் களுத்துறை செயலகத்துக்கு விஜயம்

## முக்கிய கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்



**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

இலங்கை மற்றும் பங்களாதேஷ் இரண்டு நாடுகளின் அனர்த்த நிலைமைகள், முகாமைத்துவம் தொடர்பில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ள இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பங்களாதேஷ் தூதுக்குழுவினர், அனர்த்த நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாட களுத்துறை மாவட்ட செயலகத்துக்கு வருகைதந்து மாவட்ட செயலாளர் ஜீ. ஜனக பிரசன்ன குமார தலைமையில் செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

களுத்துறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் லெப்டினன்ட் கர்னல் எம்.ஏ.பீ.எஸ். பெரேரா மாவட்டத்தின் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் தூதுக் குழுவினருக்கு கூட்டத்தில் விளக்கமளித்தார். களுத்துறை செயலகத்தில் நடத்தப்பட்டுவரும் living Lab பிரிவையும் பங்களாதேஷ் தூதுக் குழுவினர் பார்வையிட்டனர்.

பங்களாதேஷ் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் எம்.கமருல் ஹஸன், உதவி செயலாளர்களான லுத்பன் நஹார், எம். நஸ்முல் ஆப்தீன் மற்றும் பேராசிரியர்களுக்கு, களுத்துறை மாவட்ட செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் தமித் சேரவில உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# வடக்கின் உதயம்

# இலங்கைக்கான WFP பிரதி பணிப்பாளர் யாழ். மாவட்ட பதில் செயலருடன் சந்திப்பு

## 'Food for Assets' செயற்றிட்டம் தொடர்பாக ஆராய்வு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனை உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதி பணிப்பாளர் ஜெரால்ட் ரெபெல்லி (Gerald Rebelli) யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது 'Food for Assets' எனும் செயற்றிட்டத்துக்கான முன்னேற்றம் தொடர்பாகவும் இந்தச் செயற்றிட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் அவர்கள் இருவரும் விரிவாகக் கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதி பணிப்பாளர் ஜெரால்ட் ரெபெல்லி மேற்கொண்டுள்ள நிலையிலேயே அவர்கள் இருவருக்கும் இடையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.



உலக உணவுத் திட்ட அரசாங்க பங்குடமை அதிகாரி முஸ்தபா நிஹ்மத், உலக உணவுத் திட்ட பொறியியலாளர் டபிள்யூ. ஏ.சந்திரதிலக, யாழ். மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் வ.தர்சினி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# யாழ். சிறைச்சாலை பஸ் – ஹைஏஸ் வாகனம் விபத்து; ஒருவர் காயம்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு சொந்தமான பேருந்து மற்றும் ஹைஏஸ் ரக வாகனம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை முடிவடைந்ததை தொடர்ந்து யாழ். சிறைச்சாலைக்கு கைதிகளை இப்பேருந்து ஏற்றிச் சென்றுகொண்டிருந்தது. இதன்போது நாரந்தனை பிரதேசத்தில் இப்பேருந்துக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த ஹைஏஸ் வாகனம் திடீரென்று நிறுத்தப்பட்டமையால், பின்னால் சென்றுகொண்டிருந்த சிறைச்சாலைக்கு சொந்தமான பேருந்து மோதி விபத்துக்குள்ளானதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஹைஏஸ் வாகனத்தில் பயணித்தவரே காயமடைந்து, ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தை அடுத்து சிறைச்சாலை பேருந்தில் பயணித்த கைதிகள், வேறொரு வாகனத்தில் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும், பொலிஸார் கூறினர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணை முன்னெடுத்துள்ளனர்.

# நெடுங்கண்டல் விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றம்

**தலைமன்னார் விசேட நிருபர்**



மன்னார் அரச அதிபர்

மன்னார், நெடுங்கண்டல் விவசாயிகள் முன்வைத்த கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நெடுங்கண்டல் வாய்க்கால் மூடப்பட்டதை கண்டித்து மாந்தை மேற்கு பிரதேச விவசாயிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முன்னெடுத்த கண்டன ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

விவசாய பிரதிநிதிகள், விவசாய அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி மாக்கஸ் அடிகளார் ஆகியோருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் விவசாயிகள் சமர்ப்பித்த மகஜர் பரிசீலிக்கப்பட்டது.

இதுவரை சிறுபோக நெற்செய்கைக்கு விண்ணப்பிக்காதவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் பொங்கல் உற்சவம் மே 20 இல்

**ஓமந்தை விசேட, மாங்குளம் குறூப் நிருபர்கள்**



வரலாற்றுச் சிறப்புமிக்க முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை (20) மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்நிலையில் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு கடல் தீர்த்தம் எடுக்கும் விழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலில் பொங்கல் உற்சவம் நடைபெறுவதற்கு முன்னர் கடல் தீர்த்தம் எடுத்து, அதில் விளக்கு ஏற்றும் விழா ஒவ்வொரு முறையும் நடைபெறுவது வழமையாகும். இதற்கமைய இம்முறையும் முள்ளியவளை காட்டா விநாயகர் கோயிலுக்கு கடல் தீர்த்தம் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தீர்த்தம் பானையில் இடப்பட்டு, உவர் நீரில் விளக்கு ஏற்றப்பட்டுள்ளது. இவ்விளக்கு தொடர்ந்து எரியவிடப்பட்டு, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19) காட்டா விநாயகர் கோயிலில் பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 20ஆம் திகதி அதிகாலை இந்த உவர் நீர் விளக்கானது மடைப் பண்டங்களுடன் காட்டா விநாயகர் கோயிலிலிருந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலுக்கு கொண்டு செல்லப்படவுள்ளதுடன், இதன் பின்னர் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயிலில் பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது.

# புதுக்குடியிருப்பில் புதிய நெசவு நிலையம் திறப்பு



முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் முல்லை கைத்தறி நெசவு நிலையம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கனேடிய தமிழர் பேரவையின் முன்னெடுப்பில் வடக்கு, கிழக்கு பொருளாதார மேம்பாட்டு நடுவத்தினால் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் குறிப்பாக பெண்களை இலக்காகக் கொண்டு இந்நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் எழுகை மாற்றுத்திறனாளிகள் சங்கத்துடன் இணைந்து இந்த தொழில் முயற்சி நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலார் சிவராசசிங்கம் ஜெயகாந்த், பிரதேச சபை செயலாளர் சச்சிதானந்தம் கிரிசாந்தன், கனேடிய தமிழர் பேரவையின் மனிதநேய பணிகளுக்கான இணைப்பாளர் துரைரத்தினம் இராசலட்சுமி துசியந்தன், வடக்கு மற்றும் கிழக்கு பொருளாதார மேம்பட்டு நடுவத்தின் இயக்குநர் சோதிலிங்கம் பிரதீபன் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். இவர்களுடன் வேறு பல பிரதேச செயலக அதிகாரிகளும் உள்ளூர் தொழில் முனைவோரும் பயனாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# நல்லூர் சிவன் கோயில் கொடியேற்றம்



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் சிவன் கோயில் மகோற்சவ கொடியேற்றம் நேற்று செவ்வாய்க்கிழமை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது. இதன்போது கருவறையில் வீற்றுள்ள சிவனானுதர், தேவியாருக்கு விசேட அபிஷேகம் நடைபெற்றதுடன், எம்பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

(படம்: கோப்பாய் குறூப், யாழ் விசேட நிருபர்கள்)

### பளையில்

# சந்நிதி– கதிர்காமம் பாதயாத்திரை குழுவினருக்கு அமோக வரவேற்பு

**காரைதீவு குறூப் நிருபர்**



யாழ்ப்பாணம், தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலிலிருந்து கதிர்காமத்துக்கு பாத யாத்திரை மேற்கொண்டுள்ள சந்நிதி கதிர்காமம் பாத யாத்திரை குழுவினர் மூன்று நாட்களில் பளையை சென்றடைந்தனர். இந்நிலையில் பளையில் அவர்களுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை நான்காவது நாளாக இந்தக் குழுவினர், இயக்கச்சி சென்று, ஆனையிறவு பாலத்தினூடாக உமையாள்புரத்தை சென்றடைந்துள்ளனர்.

இப்பாத யாத்திரை குழுவினர் தமது பாத யாத்திரையின் மூன்றாவது நாளன்று துர்காபுரம் துர்க்கை அம்மன் கோயிலிலிருந்து பளை அம்மன் கோயிலைச் சென்றடைந்து, அங்கிருந்து மீண்டும் பளை நரசிம்ம வைரவர் கோயிலைச் சென்றடைந்தனர்.

பளை நரசிம்ம வைரவர் கோயிலில் அவர்களுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டதுடன், அங்கு ஓம் ரீவி நிறுவனத்தினர் பாத யாத்திரிகர்களுக்கு அன்பளிப்பு பொருட்களை வழங்கினர்.

# முழங்காவிலில் மனித நுகர்வுக்கு பொருத்தமில்லாத உணவுகள் அழிப்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**



முழங்காவில், நாச்சிக்குடா பிரதேசத்தில் மனித நுகர்வுக்கு பொருத்தமில்லாத பெருமளவான உணவுப் பொருட்களை பூநகரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றி அழித்துள்ளனர்.

பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தலைமையிலான குழுவினர் அண்மையில் முழங்காவில், நாச்சிக்குடாவிலுள்ள உணவு விற்பனை நிலையங்களில் சோதனை நடத்தினர்.

இதன்போது பழுதடைந்த உணவுப் பொருட்களை களஞ்சிய அறையில் பேணியமை, சமைத்த மற்றும் சமைக்காத உணவுகளை குளிரூட்டியில் ஒன்றாக வைத்தமை, தயாரித்த உணவை திறந்த நிலையிலும் மாசடையக்கூடிய பொருட்களுடன் தொடுகையிலும் வைத்தமை, எலி எச்சங்களுடன் கூடிய அலுமாரியில் உணவுப் பொருட்களை வைத்தமை போன்ற காரணங்களால் பல உணவுப் பொருட்களை தாம் கண்டு பிடித்ததாகவும், பூநகரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். இதன்போது பாண், பணிஸ், கொத்துறொட்டி, சோறு, இறைச்சி போன்ற உணவு வகைளையே கைப்பற்றி அழித்ததாகவும், அவர்கள் கூறினர்.

இந்நிலையில் மேற்படி குற்றங்களுக்காகவும் மருத்துவச் சான்றிதழின்றி உணவுகளை கையாண்டவர்களுக்கு எதிராகவும் பாதுகாப்பற்ற நிறுவனக் கட்டமைப்புகளுக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், பூநகரி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# வடமராட்சியில் கிணற்றிலிருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கிணற்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கரைவலை வாடியில் தங்கியிருந்து கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த இவர் திடீரென்று அங்கிருந்து காணாமல் போனதை அறிந்துகொண்ட ஏனைய கடற்றொழிலாளர்கள் இவரைத் தேடியுள்ளனர். இதன்போது அவ்வாடிக்கு அருகிலுள்ள கிணற்றில் இவர் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸாருக்கு கடற்றொழிலாளர்கள் தகவல் வழங்கியதை தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் புத்தளத்தைச் சேர்ந்த மனோராசன் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.



பேருவளை அத்பால் பாலர் பாடசாலையின் வருடாந்த சிறுவர் சந்தை (Kids' fair) செவ்வாய்க்கிழமை (14.05.2024) நூன் கல்வி நிலைய பிரதான மண்டபத்தில் விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் சமூக சேவையாளர் பாஸி சுபைர் நிலைய பொறுப்பாளர்கள் உட்பட ஊரின் முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# கிழக்கின் குரல்



20 இலட்சம் காணி உறுதி வழங்கும் வேலைத்திட்டம்

## பொதுமக்கள் தமது ஆவணங்களை சமர்ப்பித்து உறுதிகளை பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகோள்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



உறுமய 20 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் பணிகளுக்கு பொதுமக்கள் தமது ஆவணங்களை வழங்கி உறுதிகளை பெற்றுக்கொள்ளுமாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் 20 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் உறுமய திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவது குறித்து ஆராயும் விசேட கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் இராஜாங்க அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத் தலைவருமான சதாசிவம் வியாழேந்திரன் ஆகியோரின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலக காணிக்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ந.முகுந்தன், மாவட்ட செயலக காணி உத்தியோகத்தர் திருமதி கு.ஈஸ்பரன் மற்றும் பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், நில அளவை திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் 20 இலட்சம் காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் உறுமய திட்டத்தின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டன.

இத்திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 27595 உறுதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

குறிப்பாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அதிகாரிகள் மட்டத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டதுடன் அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் தீர்ப்பதற்கான வழிகள் குறித்தும் ஆராயப்பட்டன.

இத்திட்டத்தை விரைவில் நிறைவுசெய்து மக்களுக்கான உறுதிகளை வழங்க நடடிவக்கைகள் எடுக்குமாறு இதன்போது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

## ரயிலில் மோதுண்டு ஒருவர் படுகாயம்

கல்குடா தினகரன் நிருபர்

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற ரயிலில் மோதுண்டு ஒருவர் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று காலை 06.10 மணியளவில் புறப்பட்ட ரயில் மோதியே விபத்து இடம்பெற்றுள்ளது. இவ்விபத்தில் காயமடைந்தவர் ஓட்டமாவடி காவத்தமுனை ஹிஸ்புள்ளாஹ் வீதியை வசிப்பிடமாக கொண்ட முஸ்தபா லெப்பை றம்ஸான் என்ற நபர் என தெரியவருகின்றது. காயமடைந்தவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன் இவ்விபத்து தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மூதூர் கோட்டக்கல்வி பணிப்பாளராக கடமையேற்பு



தோப்பூர் குறூப் நிருபர்

மூதூர் வலயத்துக்குட்பட்ட புதிய கோட்டக் கல்விப்பணிப்பாளராக நேற்று நியமனம்பெற்ற எம்.எஸ். எம்.றமீம் (அதிபர்) தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக மேற்கொண்டார். இதற்கு முன்னர் கோட்டக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய திரு.அம்பிகபாலன் ஓய்வு பெற்றுச்சென்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அவர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்ட அறபுக் கல்லூரி நிர்வாகிகள், அதிபர்களுக்கான கல்வி உளவியல் செயலமர்வு

அம்பாறை மாவட்டத்திலுள்ள அறபுக் கல்லூரிகளின் நிர்வாகிகள், அதிபர்களுக்கான கல்வி உளவியல் செயலமர்வு அண்மையில் அட்டாளைச்சேனை ஷர்கிய்யா அறபுக் கல்லூரியில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் ஏற்பாட்டில், அஷ்ஷெய்க் ஐ.எல்.எம்.ஹாஷிம் ஸூரி மதனி தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், 35 அறபுக் கல்லூரிகளைச் சேர்ந்த சுமார் 90 பங்குபற்றுனர்கள் கலந்துகொண்டதுடன் நிகழ்வின் இறுதியில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பகிர்ந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் அஷ்ஷெய்க் எம்.எம்.கலாமுல்லாஹ் றஷாதி (அதிபர், அபூபக்கர் சித்தீக் அறபுக் கல்லூரி), 'கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவர்களை எவ்வாறு அணுக வேண்டும்? ஓர் உளவியல் நோக்கு' எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க் எம்.ஐ.அமீர் நழீமி (அமீர், சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷூறா, எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினர்), 'சமூக நலனில் அறபுக் கல்லூரிகள் மீதான பொறுப்புக்களும் கடமைகளும்' எனும் தலைப்பிலும், அஷ்ஷெய்க், கலாநிதி எம்.எல்.முபாறக் மதனி (முதல்வர், தாருல் ஹுதா மகளிர் அறபுக்கல்லூரி, மருதமுனை), 'அறபுக் கல்லூரிகள் ஆளுமையுள்ள ஆலிம்களை எவ்வாறு உருவாக்க முடியும்' எனும் தலைப்பிலும் ஆழமானதும் அறிவுபூர்வமானதுமான அனுபவ ரீதியான உளவியல் கருத்துக்களை பங்குபற்றுனர்களின் கவனத்தை கவரும் வகையில் முன்வைத்தனர்.

## நியமனக்கடிதங்கள் வழங்கிவைப்பு

மட்டக்களப்பு விசேட நிருபர்

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்குரிய நிர்வாகத்தினருக்கான நியமனக்கடிதங்கள் நேற்றுமுன்தினம் (13) கிரான்குளத்தில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின்; பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவினால் கையொப்பமிடப்பட்ட கடிதங்கள் மட்டக்களப்பு தொகுதிக்கான இளைஞர் அணித் தலைவர், முகாமையாளர், பிரதான அமைப்பாளரின் செயலாளர், ஊடக இணைப்பாளர், நிர்வாகச் செயலாளர் பதவிகளுக்கான நியமனக் கடிதங்கள் மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்கான பிரதான அமைப்பாளரினால் வழங்கி வைக்கப்பட்டன.

## கிழக்கு மாகாண இராணுவ புதிய கட்டளை தளபதி காத்தான்குடிக்கு விஜயம்



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண இராணுவ புதிய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ். கே குலதுங்க நேற்றுமுன்தினம் காத்தான்குடி அல் அக்ஸா ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார்.

பள்ளிவாசலின் தலைவர் கே.எல். எம்.பரீட் தலைமையிலான பள்ளிவாசல் நிர்வாகிகள் கிழக்கு மாகாண கட்டளை தளபதியை வரவேற்றனர். பள்ளி வாசலை பார்வையிட்ட கிழக்கு மாகாண கட்டளை தளபதி பள்ளிவாசல் நிர்வாகிகளோடு கலந்துரையாடினார். பள்ளிவாசல் செயலாளர் இர்பான் உட்பட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். இதில் மட்டக்களப்பு கல்லடி 243 வது படைப்பிரிவின் பிரிகேடியர் சந்திம குமாரசிங்க உட்பட இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்புக்கு அநுராதபுரம் மாணவர்கள் நல்லிணக்க களவிஜயம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



மட்டக்களப்பிற்கு அநுராதபுர மாணவர்கள் நல்லிணக்க கள விஜயமொன்றை மேற்கொண்டனர்.

தேசிய நல்லிணக்க மன்றத்தின் தலைவர் கலாநிதி பிரசாத் ஆர் ஹெரத்தினின் வழிகாட்டுதலின் கீழ் இவ்விஜயம் அமைந்திருந்தது.

அகில இலங்கை ரீதியாக இன, மத வேறுபாடு இன்றி சகோதரத்துவத்தை முன்னிறுத்தி மாணவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக களவிஜயம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிங்கள பாரம்பரிய முறைப்படி வெற்றிலை கொடுத்து வரவேற்று மங்கள விளக்கு ஏற்றப்பட்டு இறை வணக்கத்துடன் இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

அநுராதபுரத்தை சேர்ந்த மாணவ மாணவிகள் தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்தும் முகமாக களுவாஞ்சிக்குடி பிரதேசத்திற்கு வருகை மேற்கொண்டு பிரதேச மாணவர்களுடன் கலந்துரையாடி நட்புறவை ஏற்படுத்திக் கொண்டமை சிறப்பம்சமாகும். இதன்போது மாணவ மாணவிகளின் கண்கவர் நடனங்கள் அரங்கேற்றப்பட்டன.

இந்நிகழ்வு தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. பிரேமிலா கோபிநாத், ஆசிரியர் நேஷாந் பெர்ணான்டோ ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

சாய்ந்தமருதில்

## ஹஜ் யாத்திரிகர்களுக்கான தோழன் நூல் வெளியீடு



திராய்க்கேணி தினகரன் நிருபர்

முல்தஸம் ஹஜ் குறூப் ஊடாக புனித ஹஜ் யாத்திரை செல்பவர்களுக்கான கருத்தரங்கும் ஹாஜிகளை வழிகாட்டக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ள ஹாஜிகளின் தோழன் என்ற புத்தகத்தின் மீள் வெளியீட்டு நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் மௌலவி எம்.எஸ்.எம். சுஹூர்தீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

முல்தஸம் ஹஜ் நிறைவேற்று பணிப்பாளர் எம்.எஸ்.எப். ஆர். முகத்தஸியின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் மௌலவி எஸ்.எல். பரீட், மௌலவி சஹ்றான், மௌலவி ரயீஸ் முப்தி மற்றும் மௌலவி சபா மொகமட் அல் நஜாஹி முகத்தமுல் காதிரியி ஆகியோரும் மார்க்க சொற்பொழிவாற்றினர்.

ஹாஜிகளின் தோழன் புத்தகம் தொடர்பில் முன்னாள் கணக்காளர் ஐ.எல்.எம்.பாறூக் உரையாற்றினார். அதேவேளை நூல்களின் பிரதிகளை அதிதிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வும் இடம்பெற்றது. சாய்ந்தமருது மற்றும் கல்முனை பிரதேச செயலாளர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கசிப்பு கடத்திய இருவர்; பொதுமக்களால் மடக்கிப் பிடிப்பு

மட்டக்களப்பு குறூப் நிருபர்

சட்டவிரோதமான முறையில் 45 லீற்றர் கசிப்பை மோட்டார் சைக்கிள் மூலம் கடத்தி வந்த இரு இளைஞர்களை பிரதேசவாசிகள் நேற்று மடக்கிப் பிடித்ததுடன் அவர்கள் கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொதுமக்கள் அடித்து நொறுக்கியுள்ளனர். இதனால் சந்தேகநபர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள புதுக்குடியிருப்பு பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை பிரதேசத்திலிருந்து புதுக்குடியிருப்பு பகுதிக்கு கசிப்பை கடத்தி வந்து கொண்டிருந்த போதே பொதுமக்களால் சந்தேகநபர்கள் மடக்கி பிடிக்கப்பட்டனர்.

இவர்களிடமிருந்து சுமார் 45 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.



"உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளில் நற்பிட்டிமுனை யுனிட்டி சமூக சேவைகள் அமைப்பின் இரத்ததான முகாம் நற்பிட்டிமுனை அல்அக்ஸா மத்திய கல்லூரியில் நடைபெற்றது. (மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## அம்பாறை மாவட்ட சிறுபோக விவசாயிகளுக்கு உர மானிய பணம் வழங்க நடவடிக்கை

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அம்பாறை மாவட்ட சிறுபோக விவசாயிகளுக்கு உர மானிய பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கமநல சேவை அபிவிருத்தி நிலையங்கள் ஊடாக, பிரதேச கமக்கார அமைப்புக்கள் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

சிறுபோக விவசாயிகளுக்கு இம்முறை இரசாயன உரக்கொள்வனவுக்காக ஏக்கருக்கு ரூ. 06 ஆயிரம் வழங்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக பிரதேச கமக்காரர் அமைப்புக்கள் விவசாயிகள் தொடர்பான தகவல்களைப் பெற்று, சம்மந்தப்பட்ட கமநல அபிவிருத்தி அலுவலகங்களுக்கு வழங்கி வருகின்றன. உரமானியப் பணம் விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக வைப்புச் செய்யப்படவுள்ளது. இதற்கேற்ற வகையில். விவசாயிகளின் பெயர் விபரம், விலாசம், நெற்காணி அமைந்துள்ள பிரதேசம், செய்கை பண்ணப்படும் நெற்காணியின் அளவு, காணி உரிமம், வங்கி கணக்கிலக்கம் போன்ற முக்கிய விபரங்கள் பெறப்பட்டு வருகின்றன.



இதேவேளை, எதிர்வரும் காலங்களில் விவசாயிகளுக்கு அரசாங்கம் உர மானியமாக பணம் வழங்காது, சலுகை விலையில் உரம் விநியோகிக்க வேண்டும் என்ற கோரிக்கையொன்று விவசாயிகளால் முன்வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சந்தையில் விற்பனை செய்யப்படும் உரத்தில் நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த பெரும் போகத்தின் போது. அம்பாறை மாவட்டத்திலுள்ள சில தனியார் விற்பனை நிலையங்களில் கொள்வனவு செய்த உரம் விவசாயிகளுக்கு நிறைவாகப் பயனளிக்கவில்லை. இதனால் விளைச்சலில் பாரிய வீழ்ச்சியேற்பட்டது.

தற்காலத்தில் உரவிலை அதிகரித்துக் காணப்படுவதனால், கலப்படங்களும் சந்தையில் விற்பனைக்கு வந்துள்ளன. விவசாயிகள் மத்தியில் உர வகைகள் தொடர்பில் நம்பிக்கையீனம் அதிகரித்துள்ளது. ஆகையால், விவசாயிகளுக்கு எதிர்காலத்தில் கலப்படமற்ற, தரமான உர வகைகளை விநியோகிக்க அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## இலங்கையில் உணவு தர மேம்பாடு

# சியெட் களனி நிறுவனத்திற்கு சுங்கத் திணைக்களத்தினால் அபராதம் விதிக்கப்படவில்லை

சியெட் களனி இன்டர்நேஷனல் டயர்ஸ் நிறுவனமானது (CEAT Kelani International Tyres (Pvt) Ltd) சுங்கத் திணைக்களத்துடன் சுங்க வரிகள் தொடர்பாக எவ்வித முரண்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை என வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவித்துள்ளது. எனவே சுங்க வரிகள் தொடர்பாக திணைக்களத்தின் எந்தவொரு விசாரணைக்கும் அல்லது அபராதத்திற்கும் உட்பட முடியாதெனவும் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கான சுங்க வரியை செலுத்தத் தவறியமைக்காக முன்னணி டயர் உற்பத்தியாளர் ஒருவர் சட்ட நடவடிக்கை மற்றும் அபராதத்தை எதிர்நோக்கவுள்ளதாக வெளியான செய்திக்கு பதிலளிக்கும் முகமாகவே சியெட் களனி இன்டர்நேஷனல் டயர்ஸ் ஊடகங்களுக்கு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

'மூலப் பொருட்களை இறக்குமதி செய்தமைக்காக சுங்க வரியை செலுத்தாமைக்கான அபராதமாக சுங்கத் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையை செலுத்த தவறியதாகக் கூறப்படும் நிறுவனம் தமது நிறுவனம் அல்ல என சியெட் களனி இன்டர்நேஷனல் டயர்ஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

'எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கும், அனைத்து பங்குதாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் சியெட் களனி அதன் வர்த்தக செயற்பாடுகளை நிலுவைத் தொகையை உரிய நேரத்தில் செலுத்துதல் உட்பட அனைத்து சட்ட மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகளுக்கும் இணைந்ததாக நடத்துவதாக தாம் உறுதியளிக்க விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையின் நியூமேடிக் டயர் தேவைகளில் கிட்டத்தட்ட ஐம்பது சத வீதத்தை உற்பத்தி செய்யும் சியெட் கூட்டு முயற்சியில் இலங்கையில் கடந்த தசாப்தத்தில் மட்டும் 8.5 பில்லியனுக்கு மேற்பட்ட முதலீடுகளை மேற்கொண்டுள்ளது.

சியெட் களனி தனது உற்பத்தியில் 20 சதவீதத்தை 16 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.




## "IT Gallery Hikvision Partner Summit 2024" வெற்றியை கொண்டாடும் IT Gallery



இலங்கையின் IT சேவைச் சந்தையில் முன்னணியில் திகழும் IT Gallery Computers Private Limited நிறுவனம், 2017 ஆம் ஆண்டு முதல் முன்னெடுத்து வரும் அதன் வருடாந்த பங்குதாரர் ஒன்றுகூடலின் முக்கிய நிகழ்ச்சியான, "IT Gallery Hikvision Partner Summit 2024" நிகழ்வை சமீபத்தில் முன்னெடுத்திருந்தது. இந்த நிகழ்வு "New Security, New Success" (புதிய பாதுகாப்பு, புதிய வெற்றி) எனும் கருப்பொருளின் கீழ் நடைபெற்றதோடு, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் நாடளாவிய ரீதியில் Hikvision இன் பங்காளிகளின் சிறந்த செயற்றிறனை ஊக்குவிக்கும் வகையில், அவர்களை அங்கீகரித்து கௌரவிக்க இதில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வானது, பாதுகாப்பு கண்காணிப்பு தொடர்பான சந்தையில் நவீன போக்குகள் மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்தியிருந்தது. IT Gallery Computers Private Limited பணிப்பாளரும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான டிலந்த பெரேரா, Hikvision உடனான IT Gallery இன் நீண்டகால கூட்டாண்மை குறித்து பெருமிதமடைவதாக தெரிவித்தார்.

"புத்தாக்க கண்டுபிடிப்புகள் தொடர்பான எமது அர்ப்பணிப்பு மற்றும் எமது பங்காளிகளுக்கான ஆதரவு ஆகியன, IT Gallery நிறுவனத்தை இலங்கையின் கண்காணிப்பு சந்தையில் தொழில்நுட்ப முன்னேற்றத்தின் நம்பகமான மையமாக நிறுவியுள்ளது." என அவர் இதன்போது தெரிவித்தார்.

## மக்களுக்கு நட்பான தொடர்மனை நிதிவசதியளிப்புக்காக ஹவ்லொக் சிற்றியுடன் அமானா வங்கி கைகோர்ப்பு



அமானா வங்கி, வாடிக்கையாளர்களுக்கு சொகுசான மற்றும் சகாயமான வாழிடத்தைப் பெற்றுக் கொள்வதற்கு மக்களுக்கு நட்பான நிதித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில், மிரேகா ஹோம்ஸ் பிரைவட் லிமிடெட் உடன் மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இலங்கையின் மாபெரும் பொதுப் பட்டியலிடப்பட்ட சொத்துகள் வடிவமைப்பாளரான ஓவர்சீஸ் ரியால்டி நிறுவனத்தின் துணை நிறுவனமாக மிரேகா ஹோம்ஸ் திகழ்வதுடன், ஹவ்லொக் சிற்றியின் வடிவமைப்பாளர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த கைகோர்ப்பினூடாக, வாடிக்கையாளர்களுக்கு ஹவ்லொக் சிற்றியில் காணப்படும் நிலை 3 மற்றும் 4 ஐச் சேர்ந்த சொகுசு தொடர்மனைகளில் குடியேறுவதற்கு அவசியமான கொள்வனவை மேற்கொள்வதற்கான நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். 18 ஏக்கர் காணியில் காணப்படும் பசுமையான சூழல், உலகத் தரம் வாய்ந்த ஷொப்பிங் மோல் மற்றும் நவீன அலுவலகத் தொகுதி ஆகியவற்றை அனுபவிக்கவும் முடியும்.

இந்த உரிமையாண்மையை சாத்தியப்படுத்தும் வகையில், அமானா வங்கியினால் 3 நாட்களினுள் வாடிக்கையாளர்களின் வருமானத் திறனுக்கேற்ப மீளச் செலுத்தக்கூடிய திட்டங்களுடன் விசேட நிதிவசதிக்கு அனுமதியளிக்கப்படுகின்றது. மேலும், வங்கியின் மக்களின் நட்புறவுத்தன்மையை உறுதி செய்யும் வகையில், வாடிக்கையாளர்களுக்கு தாம் பெற்றுக் கொண்ட வீட்டு நிதி வசதியை, மேலதிக கட்டணங்கள் எதுவுமின்றி, முன்கூட்டியே செலுத்தித் தீர்க்கும் வசதியும் வழங்கப்படுகின்றது.

அமானா வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர், பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர், நுகர்வோர் வங்கியியல் மற்றும் சந்தைப்படுத்தல் உப தலைவர் சித்தீக் அக்பர், நுகர்வோர் நிதியளிப்பு தலைமை அதிகாரி ரியாஸ் நூர், மிரேகா ஹோம்ஸ் பணிப்பாளர் ரால்ப் டி லனெரோல், விற்பனைகள் பொது முகாமையாளர் நிருபா பீரிஸ் மற்றும் சட்டப்பிரிவின் தலைமை அதிகாரி லக்நதி பெரேரா ஆகியோர் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடலில் கலந்து கொண்டனர்.

## LMSV, Rotary Honda Purudu Champions Season 3



*The Little Minds Strong Values (LMSV), Rotary Honda Purudu Championship Season 03* நிகழ்வின் இறுதிப்போட்டி அண்மையில் கலதாரி ஹோட்டலில் இடம்பெற்றது. இப்போட்டியில் நாடெங்கிலுமிருந்து 4,000 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் பங்குபற்றியதுடன், இறுதிப் போட்டியில் 125 சிறுவர்கள் பங்குபற்றினர்.

கொழும்பு மெட்ரோபொலிட்டன் றோட்டரி கழகத்தால் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், கடந்த ஆறு ஆண்டுகளில் இது விரிவாக்கப்பட்டு, றோட்டரி 3220 மாவட்டத்தின் மத்தியில் அனைத்து கழகங்களாலும் உள்வாங்கப்பட்டுள்ளது. சிறு வயதிலேயே சிறுவர்கள் மத்தியில் சிறந்த நெறிமுறைகளை வளர்ப்பது, அடுத்த தலைமுறையில் நாட்டில் நேர்மறையான மாற்றத்திற்கு வழிவகுக்கும் என றோட்டரி கழகம் நம்புகின்றது. எதிர்காலப் பிரஜைகளை வளர்த்து, மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் சிறு வயதிலேயே சிறுவர்கள் மத்தியில் நேர்மறை சிந்தனைகள் மற்றும் மனப்பாங்குகளை ஊக்குவித்து, எளிமையான இசை, பாடல் வரிகளுடனும் மற்றும் கண்ணைக் கவரும் வீடியோ அனிமேஷன் தொழில்நுட்பத்துடனும் 32 சிங்கள மற்றும் தமிழ் பாடல்களை LMSV உபயோகிக்கின்றது. "களவெடுக்க வேண்டாம்", "பொய் சொல்ல வேண்டாம்" ஆகிய நற்பழக்கவழக்கங்களை சிறுவர்களுக்கு வலுவாக எடுத்துச் சொல்லும் செய்தியை சிங்களத்தில் மிகவும் பிரபலமான "பூசணிக்காய் கள்வன்" என்ற பழமொழியானது பாடலாக மாற்றம் செய்யப்பட்டது. இதைப் போல் அனைத்து பாடல்களும் அவற்றுள் உட்பொதிந்துள்ள நற்பண்புகளுடன் வலுவான செய்திகளைக் கொண்டுள்ளன.

LMSV ஆரம்பிக்கப்பட்ட காலம் முதற்கொண்டு, கல்வி அமைச்சுடனான ஒத்துழைப்பு காரணமாக கணிசமான அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டம் நாடளாவியரீதியில் 10,000 அரசாங்க பாடசாலைகளை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளது.

யூனியன் வங்கி தனது புதிய *digital zone* ஐ கொழும்பு புறக்கோட்டை பகுதியில் திறந்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு 24/7 ஸ்மார்ட் வங்கியியல் சேவைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வங்கியின் தொடர்ச்சியான டிஜிட்டல் மேம்படுத்தல் செயற்திட்டங்களின் அங்கமாக இந்த புதிய அறிமுகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புறக்கோட்டை கிளையின் வாடிக்கையாளர்களுடன், *Zone 1A* வலய தலைமை அதிகாரி கசுன் டி சில்வா மற்றும் *Trade Hub* பிரிவு தலைமை அதிகாரி பிராங்க் நேசராஜா ஆகியோர் இந்த அறிமுக நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

## ஜோன் கீல்ஸ் அறக்கட்டளையின் ஆங்கில மொழி புலமைப்பரிசில் திட்டம்



2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஜோன் கீல்ஸ் ஆங்கில மொழிப் புலமைப்பரிசில் திட்டம் (ஜேகோஎல்எஸ்பி) இலங்கை முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்தும் அதன் 20வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.

ஜேகேஎஃப் இன் கல்வி மையத்தின் கீழ் இந்த முதன்மையான முன்முயற்சியானது சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பின்னணியில் உள்ள பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கு ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் திறன்களுடன் அவர்களின் உயர் கல்வி மற்றும் இன்றைய போட்டிமிகு உலகில் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தேசிய முன்னுரிமைகளுடன் இணங்கி, நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் திட்டத்தின் கீழ் முன்முயற்சிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

கேட்வே லாங்குவேஜ் சென்டருடன் இணைந்து செயல்படுத்தப்பட்ட ஜேகோஎல்எஸ்பி, அதன் பயனாளிகளின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு கல்விப் பாதைகளை அறிமுகப்படுத்தி, குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. 2004 ஆம் ஆண்டு 2 வருட எட்எக்ஸ்எல் டிப்ளோமாவுடன் ஆரம்பித்து, பாடசாலை மாணவர்களுக்கான அடிப்படை மட்டநிலை, முன் மற்றும் பின் மேம்பட்ட நிலை திட்டங்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கான அமிழ்வு பாசறைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் வேலை செய்யும் பெரியவர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட திட்டங்கள் போன்ற பல கற்றல்களை உள்ளடக்கியதாக திட்டம் நகர்த்தப்பட்டது.

ஜேகோஎல்எஸ்பி, இன் மையத்தில், "இளம் வயதினருக்கான ஆங்கிலம்", அதன் முதன்மையான முன்முயற்சியில் உள்ளது, இது 12-14 வயதுடைய இடைநிலை அரசாங்கப் பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களுக்கு ஆண்டுதோறும் 800 க்கும் மேற்பட்ட உதவித்தொகைகளை வழங்குகிறது.

## கூட்டுறவு சிக்கனம் கடன் வழங்கும் சங்கத்துடன் கைகோர்க்கும் HNB FINANCE




இலங்கையின் நிதிச் சேவைத் துறையில் முன்னணியில் உள்ள HNB FINANCE, நாட்டின் கிராமப்புற மக்களுக்கு தனது புத்தாக்கமான நிதிச் சேவைகளை வழங்குவதற்காக, பல சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களுடன் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்துள்ளது.

இந்தன் மூலம், இதுவரை HNB FINANCE நிதிச் சேவைகள் அல்லது பிற புத்தாக்கமான நிதிச் சேவைகளை அனுபவிக்காத தொலைதூர கிராமங்களில் வசிக்கும் மக்கள் HNB FINANCE மூலம் தங்களுக்குத் தேவையான நிதிச் சேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள்.

இரு தரப்பினருக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு, HNB FINANCE இன் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. சமிந்த பிரபாத், பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. மதுரங்க ஹீன்கெந்த மற்றும் ஏனைய அதிகாரிகளும் சிக்கன மற்றும் கடன் கூட்டுறவு சங்கங்களின் கௌரவத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் செயலாளர்களும் கலந்து கொண்டதுடன், மேலும், கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி பிரதி ஆணையாளர் தலைமையில் கூட்டுறவு திணைக்களத்தின் தலைமையக பரிசோதகர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பல தசாப்தங்களாக இலங்கை மக்களுக்காக புத்தாக்கமான வங்கிச் சேவைகளை வழங்கி வரும் HNB இன் துணை நிறுவனமாக HNB FINANCE இன் சிறந்து விளங்குவதுடன் சர்வதேச மட்ட வங்கிச் சேவைகளையும் இலங்கை கூட்டுறவுச் சங்க வர்த்தகத்தில் 118 வருட நுண்நிதி அனுபவத்தையும் 8 மில்லியனுக்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு வழங்கி வருகின்றது.


### போதனா வைத்தியசாலை இரத்தினபுரி

## பெறுகை அறிவித்தல்

இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான கீழ்க்காணும் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் பழுதுபார்த்தலின் பிரகாரம் CIDA நிறுவனத்தில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2024.06.19 10.30 மணிவரை பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் சமர்ப்பிப்பதுடன் சம்பந்தப்பட்ட பெறுகை ஆவணங்களை 2024.05.15 முதல் 2024.06.18 வரை அரச விடுமுறை தினம் தவிர்த்து வாரத்தின் வேலை நாட்களில் 9.00 மணி முதல் 15.00 மணிவரை மீளளிக்கப்படாத ரூ. 3500.00 கட்டணத்தை காசாளர் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட பெறுகை ஆவணங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2024.06.19 10.30 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படுமாறு அப் பெறுமதியின் அடிப்படையில் விலைமனு திறக்கப்படும் தினம் முதல் எதிர்வரும் 119 நாட்கள் செல்லுபடியாகும். இலங்கை மத்திய வங்கியில் செல்லுபடியாகும் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது அப் பெறுமதிக்கு சமமான தொகை (மீளளிக்கப்படும்) பிணையாக வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலை விடயத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களது விலைமனுக்களை குறித்த தினம் குறித்த நேரத்திற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். மேலதிக விபரங்களுக்கு இல. 045 - 2222261 மூலம் கணக்காளரிடம் விசாரிக்கலாம்.

| உருப்படி இலக்கம் | இலக்கம் | வேலை விடயம் | குறைந்தபட்ச CIDA தகைமை |
|---|---|---|---|
| 01 | THR/E17/PA07/2024 | Renovation of Patient and Staff Toilet and Sewerage System | |
| 02 | THR/E17/PA08/2024 | Renovation of 5B/4 Quaters | |
| 03 | THR/E17/PA09/2024 | Modification of Security Room at Main Entrance | |
| 04 | THR/E17/PA10/2024 | Extention of Interlink Corridor to Dialysis Unit | |
| 05 | THR/E17/PA11/2024 | Continuation of External Staircase for the Auditorium and Modification of the Accountant Section | |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி,**
**2024.05.13**


## உணவு தர மேம்பாட்டு செயல்முறையை வலுப்படுத்துவது குறித்து தெளிவுபடுத்தல்

ஐக்கிய நாடுகளின் தொழில்துறை மேம்பாட்டு அமைப்பு (UNIDO) மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆகியவற்றால் செயல்படுத்தப்படும் விவசாய உணவுத் துறைக்கான (BESPAFOOD) திட்டங்களுக்கான சிறந்த தரநிலைப்படுத்தல் திட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் நிதியளித்துள்ளது. அந்த நோக்கத்திற்காக, அவர்கள் இலங்கையில் தரநிலை மேம்பாட்டு செயல்முறையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் அண்மையில் ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்தனர்.

தரத்தை உயர்த்துவதற்கு அரசுதனியார் ஒத்துழைப்பு என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இந்த மாநாட்டில், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை உணவு மற்றும் பானங்கள் ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு உலகளாவிய தரத்தை உயர்த்துவதற்கான செயல்முறைகள் குறித்து நன்கு புரிந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

நாட்டில் தேசிய தரம் மற்றும் நியமங்களை மேம்படுத்தும் செயற்திட்ட நோக்கத்துடன், நியமங்களை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள இலங்கை உத்தியோகத்தர்களை அறிவுப்பூர்வமாக ஆயத்தப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.




யூனியன் வங்கி தனது புதிய digital zone ஐ கொழும்பு புறக்கோட்டை பகுதியில் திறந்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு 24/7 ஸ்மார்ட் வங்கியியல் சேவைகளை அனுபவிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வங்கியின் தொடர்ச்சியான டிஜிட்டல் மேம்படுத்தல் செயற்திட்டங்களின் அங்கமாக இந்த புதிய அறிமுகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புறக்கோட்டை கிளையின் வாடிக்கையாளர்களுடன், Zone 1A வலய தலைமை அதிகாரி கசுன் டி சில்வா மற்றும் Trade Hub பிரிவு தலைமை அதிகாரி பிராங்க் நேசராஜா ஆகியோர் இந்த அறிமுக நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.




## தற்காலிக கொட்டகை அமைத்து

# நக்கிள்ஸ் மலைத்தொடரில் தங்கியிருந்த 23 பேர் கைது

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டி மாத்தளை மாவட்ட எல்லையில் அமைந்துள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரில் தற்காலிகமாக கொட்டகை அமைத்து அதில் தங்கியிருந்த இளைஞர், யுவதிகள் 23 பேர் உண்ணஸ்கிரிய பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 143,475.00 ரூபாவாகும். அடிப்படைச் சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, மாதாந்த கொடுப்பனவு, இடைக்கால கொடுப்பனவு மற்றும் முகாமையாளர்களுக்கான கொடுப்பனவு என்பன பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் உள்ளடங்கும்.
- இதற்குத் தேவையான தகுதிகளைக் கொண்ட வெற்றிகரமான வேட்பாளருக்கு விசேட தொழில்நுட்ப கொடுப்பனவு ஏறத்தாழ 85,000.00 ரூபா.
- பிற நன்மைகள் - மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், விபத்துக் காப்பீட்டுத் திட்டம், இறப்பு மானியத் திட்டம், போனஸ், விடுமுறைக் கொடுப்பனவு, கையடக்கத் தொலைபேசிக் கட்டணப் பற்றுச்சீட்டுகளை மீள் செலுத்துதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

| வெளிவாரி விண்ணப்பதாரிகள் | உள்வாரி விண்ணப்பதாரிகள் |
|---|---|
| **விருப்பத் தேர்வு 1**<br>இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழத்தின் பௌதிகவியல், போக்குவரத்து, வான்பரப்பு, தகவல் மற்றும் தொலைத்தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது பொறியியல் துறையில் மூன்று (03) வருட காலத்திற்குக் குறையாத இளமாணிப் பட்டம் அத்துடன் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இயைபுடைய துறையில் நிறைவேற்றுத் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம்<br>**விருப்பத் தேர்வு 2**<br>பதவி தொடர்பான விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இயைபுடைய துறையில் நிறைவேற்றுத் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம்<br>**விருப்பத் தேர்வு 3**<br>மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் / வாழ்தொழில் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் 7ஆம் நிலைக்குக் குறையாத தேசிய தொழிற்றிறன் தகைமை தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் அத்துடன் அரசாங்கத் திணைக்களம் / பொது தொழில்முயற்சி அல்லது விமான சேவையில் ஈடுபட்டுள்ள கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனத்தில் இயைபுடைய துறையில் நிறைவேற்றுத் தரத்தில் எட்டு (08) வருடங்களுக்குக் குறையாத தகைமைக்குப் பின்னரான அனுபவம் | **விருப்பத் தேர்வு 1**<br>வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>**விருப்பத் தேர்வு 2**<br>சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - பரீட்சைகள்), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - தரநிலைகள்), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - விமான பணியாளர்), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - விமானப் பணியாளர் அல்லாத), சிவில் விமான சேவைகள் பரீட்சகர் (ஆளணி உரிமம் - பறக்கும் பயிற்சி) என்பவற்றில் ஏற்புடையதில் குறைந்தபட்சம் ஆறு (06) வருட கால சேவை அனுபவம்.<br>**மற்றும்**<br>கடந்த ஆறு (06) வருடங்களில் கறைபடாத சாதனைப் பதிவு மற்றும் தற்போதைய பதவியில் அனைத்து சம்பள உயர்வுகளையும் பெற்றிருத்தல்<br>**மற்றும்**<br>விமான போக்குவரத்து முகாமைத்துவ துறையில் நான்கு (04) வாரங்களுக்குக் குறையாத ICAO ஒப்புதல் அளிக்கப்பட்ட பயிற்சிக் கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>**மற்றும்**<br>வருடாந்த செயற்றிறனில் சிறந்த அல்லது அதற்கு மேலான தரப்படுத்தல். |

**வயதெல்லை**

| பதவிகள் | வயதெல்லை | குறிப்புகள் |
|---|---|---|
| பணிப்பாளர் | 35 - 55 வயதுக்கிடையில் | ஏற்கனவே இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையில் பணியாற்றுபவர்கள், இலங்கை விமானப்படை, விமான நிலையம், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) நிறுவனம், உள்ளூர் விமான சேவைகள் அல்லது பறக்கும் பாடசாலைகள் மற்றும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |
| சிவில் விமானசேவை பரீட்சகர் | 22 - 45 வயதுக்கிடையில் | |

- மேலதிக தகவல்கள், பதவி விபரங்கள், விசேட தொழில்நுட்பக் கொடுப்பனவிற்கான தேவைப்பாடுகள் மற்றும் நிலையான விண்ணப்பப் படிவத்தை இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் www.caa.lk எனும் உத்தியோகபூர்வ இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்த பதவி/பதவிகளுக்காக தகுதியை நிரூபிக்க தகுதிகள் மற்றும் அனுபவத்திற்கான ஆவண ஆதாரங்களின் பிரதிகளுடன் விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்
- நிலையான விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எந்தவொரு அரசாங்க நிறுவனத்திலும் சேவை செய்யும் விண்ணப்பதாரர்கள் நிறுவனத்தின் தலைவர் மூலமாக விண்ணப்பிக்க வேண்டும்.
- உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு 2024-05-27ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபால் மூலம் employment@caa.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அவை அங்கீகரிக்கப்படும்.
- விண்ணப்பங்களை சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி, இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை, இல. 152/1, மினுவாங்கொட வீதி, கட்டுநாயக்க எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
- தகுதித் தகைகைளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வு / பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

**சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகாரசபை,**
**இல. 152/1, மினுவாங்கொட வீதி,**
**கட்டுநாயக்க.**
**2024-05-14.**

# அறிவித்தல்

## நிக்கவெரட்டிய பிரதேச சபை

### 2025 ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்

2020.10.20ம் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்த இல. 2199/15 அதி விசேட வர்த்தமாணியுப் பிரசுரிக்கப்பட்ட பிரதேச சபை வரவு - செலவுத்திட்ட பெறுகை மற்றும் அமுல்படுத்தும் விதி மற்றும் இல. 06 பிரிவின் பிரகாரம் மற்றும் 1987 இல 15 பிரதேச சபை சட்டத்தின் இல. 09(3) பிரிவின் பிரகாரம் நிக்கவெரட்டிய பிரதேச சபையின் செயலாளரான எச்.எம்.பீ. ஹேரத் ஆகிய என்னால் 2025ம் ஆண்டிற்கான அபிவிருத்தி ஆலோசனைகள் அதிகார பிரதேசத்தின் பொது மக்களிடம் கோரப்படுவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் உங்களது அபிவிருத்தி ஆலோசனைகள் ஜுன் மாதம் 25ம் திகதிக்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைக்குமாறு இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எச்.எம்.பீ. ஹேரத்,**
**செயலாளர்**
**2024 மே 08ம் திகதி**
**நிக்கவெரட்டிய பிரதேச சபை**

# பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண சுகாதார அமைச்சு நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம்

ஊவா மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவர் மற்றும் மாகாண நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் பெறுகை குழுவின் தலைவரால் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு சமைத்த உணவு மற்றும் உலர் உணவு வழங்குவதற்காக வழங்குநர்களை போட்டி கேள்விகோரல் மூலம் தேர்ந்தெடுப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் :
**2024.05.15 முதல் 2024.06.04 வரை**

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி மற்றும் நேரம் :
**2024.06.04 பி.ப. 2.00 வரை அல்லது அத்தினத்திற்கு முன்பு**

கேள்வி திறத்தல் :
**2024.06.05 மு.ப. 10.30 மற்றும் 2024.06.05 மு.ப. 11.30 இற்கு**

ஊவா மாகாண நன்னத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் http://probationdept.up.gov.lk/ மற்றும் ஊவா மாகாண சுகாதார அமைச்சு உத்தியோகபூர்வ இணையதளத்தின் http://healthmin.up.gov.lk/ குறித்த வழங்கல் உள்ளடங்கிய பெறுகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். அதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு குறித்த நிபந்தனை மற்றும் அறிவுறுத்தல்களுக்கு கீழ்க்காணும் தொ.பே இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே. இலக்கம் ஊவா மாகாண சுகாதார அமைச்சு - 055-2222803 / ஊவா மாகாண நன்னடத்தை திணைக்களம் - 055-2231209.
இணையதளம் - https://healthmin.up.gov.lk/
https://probationdept.up.gov.lk

**தலைவர்,**
**அமைச்சு / திணைக்கள பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண சுகாதார அமைச்சு,**
**ஆர்.எச். குணவர்தன மாவத்த,**
**பதுளை.**

**2024.05.15**

# காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2013, செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதிய 1826/5 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ)வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 274 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிட்ட காணித்துண்டுகளினை முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ள தோடு, அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவில் (அ) பந்தியின் கீழ் இக்காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹறின் பெர்னான்டோ ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டுகளை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

**ஹறின் பெர்னான்டோ,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.**

எனது இல: LD/05/2009/11W/231.
பிரதேச செயலாளரின் குறிப்பிலக்கம்: 4/2/01/04/40

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,**
**இல:1200/6, இரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்லை**
**2023-08-02**

**1 ஆவது அட்டவணை**

சபரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில், எகொடபத தனிப்பேறுபத்துவ சிறு பிரிவில், நுன்கமுவ மற்றும் ரன்கொத்திவெல பிரிவு இலக்கம் 3 ரன்கொத்திவெல மாவனல்லை பிரதேச சபை எல்லையில் அமைந்துள்ள கிராமங்களில் உள்ள நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் KE/MWN/2011/133 மற்றும் 2012-04-30 ஆம் திகதிய முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களிலும் பிரமானத்திலும் உள்ள காணித்துண்டிற்கான எல்லைகள்:

01. துண்டிலக்கம் -29 - போகஹகொடவத்த - பிரமானம்: ஹெக் - 0.0010

வடக்கு : பாதை (வீ.அ.அ.)
கிழக்கு : துண்டிலக்கம் 30
தெற்கு : போகஹகொடவத்த
மேற்கு : பாதை (வீ.அ.அ.)

# வாகன விற்பனை

| மூன்று சக்கர வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| ABL-5971 | பஜாஜ் | 2016 | அம்பாரா |
| QF-8346 | பஜாஜ் | 2006 | ராகம |
| AAZ-4496 | பஜாஜ் | 2015 | ராகம |

| ஒற்றை வண்டி | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| DAD-5306 | மஹிந்திரா | 2016 | குருநாகல் |

| டுயல் பர்போஸ் வாகனம் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| HK-5755 | தைஹட்சு | 1999 | ராகம |
| PA-7453 | மஸ்தா | 1996 | பாணடுரா |

| டுயல் பர்போஸ் கேப் | மேக்/மாடல் | ஆண்டு | முற்றம் |
|---|---|---|---|
| PR-8248 | டாடா | 2011 | குருநாகல் |
| PQ-4198 | டாடா | 2011 | கண்டி |
| PQ-7724 | டாடா | 2011 | அம்பாரா |

மேற்கண்ட வாகனங்களை யார்டுகளிலும் சோதனை செய்யலாம் அது ஏல அடிப்படையில் இருக்கும்

| | |
|---|---|
| ராகம 0778 523 285 | திருகோணமலை 0773 382 612 |
| ரத்தினபுரி 0774 857 351 | கண்டி 0773 972 860 |
| நுவரெலியா 0777 717 562 | அனுராதபுரம் 0767 139 916 |
| அம்பாரா 0773 547 556 | குருநாகல் 0764 425 205 |
| எம்பிலிபிட்டிய 0773 610 188 | பாணடுரா 0775 215 263 |
| மாத்தறை 0743 601 121 | சிலாவ் 0770 288 804 |

HDTS

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

**சுகாதாரத் திணைக்களத்தின் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம் (HDTS)**
**HDTS/ERP Software System/2024**

**Supplying, Installing, Customizing, Commissioning, Training and maintaining of the Cloud Based ERP System for Health Department Co-operative Thrift & Credit Society Limited (HDTS)**

**Contract No.: HDTS/ERP/Software system/2024**

1. Cloud based ERP System ஐ வழங்கல், நிறுவுதல், தனிப்பயனாக்குதல், செயற்பட வைத்தல், பயிற்சி வழங்கல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை, கொழும்பு-10, பன்சல வீதி, சுகாதாரத் திணைக்களத்தின் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்கம் (HDTS) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள பெறுகைக்கான பிரதி பணிப்பாளர் (OTS) இடமிருந்து பெற்று (தொலைபேசி: +94 11 2678163, +94 11 2662292, +94 11 2676088. தொலைநகல்: +94 11 2678163) இலங்கை 37/36, பன்சல வீதி, கொழும்பு-10 என்ற அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்து திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் அலுவலக நேரங்களில் (மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும்) விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்கலாம்.
4. 2024.05.15 ஆம் திகதியிலிருந்து 2024.06.10 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 ரூபாவை செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-10, பன்சல வீதி, சுகாதாரத் திணைக்களத்தின் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்க தலைவரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். (தொலைபேசி: +94 11 2678163, +94 11 2662292, +94 11 2676088, +94 11 2685016. தொலைநகல்: +94 11 2678163) பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
   4.1. 2024.05.30 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மாநாட்டு அறையில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். இலங்கை, கொழும்பு-10, பன்சல வீதி, சுகாதாரத் திணைக்களத்தின் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சிக்கனக் கடனுதவிச் சங்க தலைவரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம். (தொலைபேசி: +94 11 2678163, +94 11 2662292, +94 11 2676088, +94 11 2685016. தொலைநகல்: +94 11 2678163)
5. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2024.06.10 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியான தலைவர், சுகாதாரத் திணைக்கள வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம், 37/36, பன்சல வீதி, கொழும்பு-10, இலங்கை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2024.06.10 ஆம் திகதியிலிருந்து 104 நாட்களுக்கு (90-14) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வர்த்தக வங்கியொன்றிலிருந்தும் வழங்கப்பட்ட 400,000 இலங்கை ரூபாவிற்கான விலைமனுப் பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. பூர்த்தி செய்யப்படாத மற்றும் தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்களை ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை விலைமனுக்களை திறக்கும் குழுவானது கொண்டுள்ளது.

**தலைவர்,**
**சுகாதாரத் திணைக்கள வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கம்,**
**37/36, பன்சல வீதி,**
**கொழும்பு-10,**
**இலங்கை.**
**+94 11 2678163,**
15.05.2024

### சுகாதார சேவைகள் திணைக்களம்
### மாவட்ட பொது வைத்தியசாலை, மாத்தறை

# மருத்துவ சாதனங்களின் பெறுகைக்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்

பின்வரும் உபகரணங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து மாத்தறை மாவட்ட பொது வைத்தியசாலை பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| Item No. | Name of the Item | Quantity |
|---|---|---|
| 01. | Ultra Sound Scanner | 01 No. |
| 02. | Syringe Pump | 40 Nos. |
| 03. | Infusion Pump | 30 Nos. |
| 04. | Suction Apparatus Double Jar | 10 Nos. |
| 05. | Defibrillator | 04 Nos. |
| 06. | Pulse Oximeter | 20 Nos. |
| 07. | Multiparameter Monitor (Basic) | 40 Nos. |
| 08. | Multiparameter Monitor (ICU-Basic) | 02 Nos. |
| 09. | Multiparameter Monitor (OT-Basic) | 02 Nos. |
| 10. | Complete Dental Unit | 02 Nos. |
| 11. | Light Care Machine | 02 Nos. |

1. விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் அளவுக் குறிப்புக்களுடனான அம்சங்களின் விபரமான பட்டியலை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணத்துடன் விபரமான விளக்கக் குறிப்புக்கள், சேவை கைநூல், விற்பனைக்கு பிந்திய சேவைக்கான ஆற்றல் மற்றும் கையிருப்பிலுள்ள உபகரணங்கள் ஆகியன வழங்கப்படல் வேண்டும்.
2. விலைமனுதாரர்கள் பின்வருவனவற்றைக் கொண்டிருப்பதுடன் விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் ஆவணச் சான்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
   (1) மேலே குறிப்பிட்டுள்ள உபகரணங்களை விற்பனை செய்வதற்கான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவு.
   (2) விலைமனுதாரர் உற்பத்தியாளராக இல்லாவிடின், அவர் உபகரணங்களை விற்பனை செய்வதற்கான எழுத்து மூலமான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. 2024.05.15 ஆம் திகதியிலிருந்து 2024.06.03 ஆம் திகதியன்று வரையும் வேலை நேரங்களில் (மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும்) ஒவ்வொரு அம்சத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 3500 ரூபாவை செலுத்திய பின்னர், மாத்தறை, மாவட்ட பொது வைத்தியசாலையிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
4. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் 2024.06.04 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது அதே முகவரியில் 2024.06.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பெறுகைப் பெட்டியில் உட்சேர்க்கப்படலாமென்பதுடன் விலைமனுக்கள் மாத்தறை, மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் உடனடியாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**

**தொலைபேசி : 0412222261/0412227820**
**தொலைநகல் : 0412222444**
**மின்னஞ்சல் : hmatara@yahoo.com**

# இலங்கை வங்கி

### மீட்கப்படாத அடகு நகைகளின் ஏலவிற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதியில் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.)

**அடகு நகைகளின் விபரங்கள்**

| கிளையின் பெயர் | நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்பதற்கான இறுதித் திகதி | ஏலவிற்பனைத் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| கேகாலைப் பகுதி அரநாயக்க, மாவனல்லை, கேகாலை நகரம், ரம்புக்கனை, வரக்காப்பொல, கேகாலை மே.த.கிளை, ஹெம்மாத்தகம, கலிகமுவ, கேகாலை மருத்துவமனைக் கிளை, மொரன்தோட்ட, நெலுந்தெனிய, பின்னவல | 2023.02.28 வரை 12 மாதங்களுக்கும் 2023.08.28 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2024.05.31 | 2024.06.01 கலிகமுவ கிளை |
| அவிசாவளைப் பகுதி அவிசாவளை, தெஹியோவிட்ட, தெரணியகல, ருவான்வெல்ல, யட்டியாந்தோட்டை, கித்துள்கல, கொட்டியாகும்புர, கோணாகல் தெனிய, புளத்கொகுப்பிட்டிய, கரவனெல்ல, தல்துவ, சீதாவாக்கப்புர | 2023.02.28 வரை 12 மாதங்களுக்கும் 2023.08.28 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2024.05.31 | 2024.06.02 அவிசாவளைக் கிளை |
| இரத்தினபுரிப் பகுதி கலவான, நிவித்திகல, எண்டான, இரத்தினபுரி மே.த.கிளை, கிரியெல்ல, அயகம, எஹெலியகொட, குருவிட்ட, சபரகமுவ மாகாண சபைக் கிளை, கரவிட்ட, இரத்தினபுரி மருத்துவமனைக் கிளை | 2023.02.28 வரை 12 மாதங்களுக்கும் 2023.08.28 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2024.05.31 | 2024.06.02 இரத்தினபுரிக் கிளை |
| எம்பிலிப்பிட்டியப் பகுதி பலாங்கொட, கொடக்கவெல, கஹவத்த, பெல்மடுல்ல, இறக்குவானை, எம்பிலிப்பிட்டிய, உடவளவ, வெலி-ஓய, கொலன்ன, வெலிகேபொல, எம்பிலிப்பிட்டிய நகரக் கிளை, பள்ளேபட்ட, சபரகமுவப் பல்கலைக்கழகக் கிளை | 2023.02.28 வரை 12 மாதங்களுக்கும் 2023.08.28 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2024.05.31 | 2024.06.01 பெல்மடுல்லக் கிளை |

மேற்குறித்த ஏலங்களை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

**இலங்கை வங்கி**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**அபிவிருத்தி வங்கியியல் மற்றும்**
**கிளைக் கடன் செயற்பாடுகள் - பிரிவு II**
**தலைமை அலுவலகம்,**
**கொழும்பு – 01**
**தொலைபேசி – 011 239 9568 / 011 220 4545**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் கொழும்பு தெற்கு

மக்கள் வங்கி கொழும்பு தெற்கு பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் /சேவை மையங்களில் 28.02.2023 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 14.06.2024 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏலவிற்பனை நிகழும் தினங்கள் : 15-06-2024 & 16-06-2024**

| ஏலவிற்பனை நிகழும் இடங்கள் | கோல்டின் ஜுபிலி, பொரளை |
|---|---|
| கிளைகள் | கோல்டின் ஜுபிலி, நாரஹேன்பிட்டி, சுதுவெல்ல, லிபர்ட்டி பிளாசா, லக்கி பிளாசா, பொரளை, தலைமையகக் கிளை, மருதானை, பம்பலப்பிட்டி, மெஜஸ்டிக்சிட்டி, கிருலப்பனை, வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி கூட்டுறவு இல்லம், திம்பிரிகஸ்யாய, பார்க் வீதி, நகர மண்டபம், யூனியன் பிளேஸ் |
| சேவை மையங்கள் | சுதுவெல்ல, தேசிய லொத்தர் சபை, ஹெவ்லொக் டவுன், கொழும்பு பல்கலைக்கழகம், கொம்பனி வீதி (Slave Island}), மருத்துவக் கல்லூரி, திறைசேரி பிரிவு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏலவிற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் (கொழும்பு தெற்கு)**
**இல.11, டியூக் வீதி, கொழும்பு 01**
**தொலைபேசி இல. 011-2327847**

PEOPLE'S BANK
Pride of the Nation

---

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

| தொ.இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | அதிவேக நெடுஞ்சாலைப் பிரிவு |
|---|---|---|---|
| 1 | RDA/EOM&M/Beli./Pro/Bid/2024/31 | கட்டணம் செலுத்தப்படும் கேட்டுக்களுக்கான 40 எண்ணிக்கையான ‘கைகளை’(Arms) கொள்வனவு செய்தல் | தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் நீடிப்பு (கொடகமவிலிருந்து மத்தள வரையுமானது) |
| 2 | RDA/EOM&M/Beli/Prov/Bid/2024/33 | புல் வெட்டும் இயந்திரத்தின் உதிரிப் பாகங்களை கொள்வனவு செய்தல் | |

மேலேயுள்ள ஒப்பந்தங்களுக்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் www.rda.gov.lk என்ற வீஅஅ இன் இணையதளத்தை 2024.05.15 ஆம் திகதியிலிருந்து 2024.05.30 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (தொலைபேசி: 0472251892, 0766265264, 0763179185)

**தலைவர்,**
**அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடுகள்,**
**பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின்**
**பெறுகைக் குழு,**
**பிரதி பணிப்பாளர் நாயகம் (அநெசெபமுபி) மே/பா.,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹவத்த,**
**பெலியத்த.**

---

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

## பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

### கொழும்பு மாவட்டத்திற்குள் உள்ள வீதிகளை மேம்படுத்துவதற்காக பொருட்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல்

1. கொழும்பு மாவட்டத்திற்குள் உள்ள வீதிகளை மேம்படுத்துவதற்காக பொருட்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் எனும் விடயத்திற்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பாக பிராந்திய பெறுகைக் குழு விசேடத் திட்டப் பிரிவு தலைவர் அழைக்கின்றார்.
2. சித்திகரமான விலைமனுதாரர் அல்லது அவரது முகவர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

| # | ஒப்பந்த இல. | விபரங்கள் | பொறியியலாளர் மதிப்பீடு (தற்செயலான செலவுகள் இன்றி) (ரூபா மில்.) | மொத்த அளவு (Units) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | காலம் (மாதங்கள்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-14 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக ABC பொருட்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் | 24.5 | 4,500 (Cu.m) | 281,750.00 | 03 | 4,200.00 |
| 02 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-15 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக உப அடித்தள மண் வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் | 11.7 | 3,000 (Cu.m) | 134,550.00 | 03 | 4,200.00 |
| 03 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-16 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக இமல்சன் CSS-1 வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் | 5.5 | 30,000 (Ltrs) | 63,250.00 | 03 | 1,200.00 |
| 04 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-17 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக உடன் கலவை கொங்கிறீட் (19mm) வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் | 8.6 | 350 Cu.m | 98,900.00 | 03 | 1,200.00 |
| 05 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-18 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக Asphalt Concrete Wearing Course வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் | 24 | 1,150 (M.Ton) | 276,000.00 | 03 | 4,200.00 |
| 06 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-19 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக Asphalt Concrete Binder Course வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல் | 24.5 | 1,100 (M.Ton) | 281,750.00 | 03 | 4,200.00 |

3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள வழங்குநர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, ‘செத்சிறிபாய’ 1ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட செயற்றிட்டப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: : 011-2876600, தொலைநகல்: 011-2877226) மற்றும் 2024-05-14ஆம் திகதி முதல் www.rda.lk எனும் இணையதளத்தில் விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம்.

   ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தின் செல்லுபடியாகும் பண வைப்புச்சீட்டை (பண வைப்புச் சீட்டின் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்) 2024-05-15ஆம் திகதி முதல் 2024-06-03ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை விசேட செயற்றிட்டப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு மின்னஞ்சலின் ஊடாக அனுப்பி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை மின்னஞ்சலின் ஊடாக சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   மின்னஞ்சல் முகவரி: rda.ddqsp@gmail.com

   மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பின்வரும் வங்கிக் கணக்கிற்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.

   கணக்கின் பெயர் : Project Director (WP) - RDA
   கணக்கிலக்கம் : 70532635
   வங்கியின் பெயர் : இலங்கை வங்கி - பத்தரமுல்ல

   விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அது பரீட்சித்துப் பார்க்கப்படும். செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்ல, ‘செத்சிறிபாய’, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 1ஆம் மாடி, விசேட செயற்றிட்ட அலுவலகத்தில் இடம்பெறும். (தொலைபேசி: 011-2877226)
6. பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியுடனான விலைமனுக்களை நகல்பிரதியுடன் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிரதி பணிப்பாளர் நாயகம், விசேட செயற்றிட்டப் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 1ஆம் மாடி, ‘செத்சிறிபாய’, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2024-06-03ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பத்தரமுல்ல, ‘செத்சிறிபாய’, 1ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட செயற்றிட்டப் பிரிவில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கொழும்பு மாவட்டத்திற்குள் உள்ள வீதிகளை மேம்படுத்துவதற்காக பொருட்களை வழங்குதல் மற்றும் போக்குவரத்து செய்தல்’’ எனத் தயவு செய்து குறிப்பிடவும்.
9. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 77 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். ஒவ்வொரு விலைமனுவுடனும் 2024-09-16ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விசேட செயற்றிட்டப் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை.**

---

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

## பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியில் விலைக்கோரல்

### கொழும்பு மாவட்டத்திற்குள் உள்ள வீதிகளை மேம்படுத்துவதற்காக இயந்திராதிகளை வாடகைக்கமர்த்துதல்

1. கொழும்பு மாவட்டத்திற்குள் உள்ள வீதிகளை மேம்படுத்துவதற்கு இயந்திராதிகளை வாடகைக்கமர்த்துவதற்கு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) சார்பாக பிராந்திய பெறுகைக் குழு விசேடத் திட்டப் பிரிவு தலைவர் அழைக்கின்றார்.
2. சித்திகரமான விலைமனுதாரர் அல்லது அவரது முகவர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

| # | ஒப்பந்த இல. | விபரங்கள் | பொறியியலாளர் மதிப்பீடு (தற்செயலான செலவுகள் இன்றி) (ரூபா மில்.) | மொத்த அளவு (Units) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | காலம் (மாத ங்கள்) | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | RDA/PRJ T/ WP/TB/ 2024/C-20 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக 4wd பெக்கோ லோடரை வாடகைக்கமர்த்துதல் | 21 | 3,000 Hrs | 241,500.00 | 03 | 4,200.00 |
| 02 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-21 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக டிப்பர் டிரக்குகளை (2 கியூப்) வாடகைக்கமர்த்துதல் | 22 | 4,500 Hrs | 253,000.00 | 03 | 4,200.00 |
| 03 | RDA/PRJ T/ WP/TB/ 2024/C-22 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக டிப்பர் டிரக்குகளை (3 கியூப்) வாடகைக்கமர்த்துதல் | 8.5 | 1,200 Hrs | 97,750.00 | 03 | 1,200.00 |
| 04 | RDA/PRJ T/ WP/TB/ 2024/C-23 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக (120HP) Excavator Mobile வாடகைக்கமர்த்துதல் | 24.7 | 1,800 Hrs | 284,000.00 | 03 | 4,200.00 |
| 05 | RDA/PRJ T/ WP/TB/ 2024/C-24 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக Vibrating Roller (6-7 தொன்) வாடகைக்கமர்த்துதல் | 11.5 | 2,500 Hrs | 132,250.00 | 03 | 4,200.00 |
| 06 | RDA/PRJ T/ WP/TB/ 2024/C-25 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக Vibrating Roller (8-10 தொன்) வாடகைக்கமர்த்துதல் | 8.6 | 1,200 Hrs | 98,900.00 | 03 | 1,200.00 |
| 07 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-26 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக 4000 லீற்றர் டிராக்டர் பவுசர்களை வாடகைக்கமர்த்துதல் | 5.5 | 2,500 Hrs | 63,250.00 | 03 | 1,200.00 |
| 08 | RDA/PRJ T/WP/TB/ 2024/C-27 | கொழும்பு மாவட்டத்திற்கு உட்பட்ட வீதிகளை மேம்படுத்துவதற்காக Motor Grader (120 - 140HP) வாடகைக்கமர்த்துதல் | 14.00 | 1,500 Hrs | 161,000.00 | 03 | 4,200.00 |

3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள வழங்குநர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, ‘செத்சிறிபாய’, 1ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட செயற்றிட்டப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: : 011-2876600, தொலைநகல்: 011-2877226) மற்றும் 2024-05-14ஆம் திகதி முதல் www.rda.lk எனும் இணையதளத்தில் விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம்.

   ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தின் செல்லுபடியாகும் பண வைப்புச்சீட்டை (பண வைப்புச் சீட்டின் ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்) 2024-05-15ஆம் திகதி முதல் 2024-06-03ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் வீதி அபிவிருத்தி அதிகார சபை விசேட செயற்றிட்டப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு மின்னஞ்சலின் ஊடாக அனுப்பி மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை மின்னஞ்சலின் ஊடாக சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

   மின்னஞ்சல் முகவரி: rda.ddqsp@gmail.com

   மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பின்வரும் வங்கிக் கணக்கிற்கு ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.

   **கணக்கின் பெயர் : Project Director (WP) - RDA**
   **கணக்கிலக்கம் : 70532635**
   **வங்கியின் பெயர் : இலங்கை வங்கி - பத்தரமுல்ல**

   விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அது பரீட்சித்துப் பார்க்கப்படும். செல்லுபடியாகும் பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பத்தரமுல்ல, “செத்சிறிபாய”, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 1ஆம் மாடி, விசேட செயற்றிட்ட அலுவலகத்தில் இடம்பெறும். (தொலைபேசி: 011-2877226)
6. பண வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப்பிரதியுடனான விலைமனுக்களை நகல் பிரதியுடன் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிரதி பணிப்பாளர் நாயகம், விசேட செயற்றிட்டப் பிரிவு, வீதி அபிவிருத்தி அதிகார சபை, 1ஆம் மாடி, ‘செத்சிறிபாய’, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு 2024-06-03ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பத்தரமுல்ல, ‘செத்சிறிபாய’, 1ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் விசேட செயற்றிட்டப் பிரிவில் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
8. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கொழும்பு மாவட்டத்திற்குள் உள்ள வீதிகளை மேம்படுத்துவதற்காக இயந்திராதிகளை வாடகைக்கமர்த்துதல்’’ எனத் தயவு செய்து குறிப்பிடவும்.
9. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 77 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். ஒவ்வொரு விலைமனுவுடனும் 2024-09-17ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விசேட செயற்றிட்டப் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**



டி20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்க அமெரிக்கா பயணித்த இலங்கை கிரிக்கெட் அணியினர் மற்றும் ஆசிய ரக்பி சம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற இலங்கை ரக்பி அணியினரை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (13) பிற்பகல் சந்தித்து வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

# பாடசாலை வலைப்பந்தில் சம்பியனானது கேட்வே

**பிரின்ஸ் குணசேக**

இலங்கையின் பிரதான சர்வதேச பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுக்கு உட்பட்ட பெண்கள் வலைப்பந்து போட்டியில் கொழும்பு கேட்வே சர்வதேச பாடசாலை சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் அண்மையில் இடம்பெற்ற இந்தப் போட்டி முழுவதும் திறமையை வெளிப்படுத்திய கொழும்பு கேட்வே சர்வதேச பாடசாலையின் 12 வயது தினி ஜயவீர சிறந்த வீராங்கனை விருதை வென்றார்.

15 சர்வதேச பாடசாலைகள் பங்கேற்ற இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் வத்தளை லைசியம் சர்வதேச பாடசாலையை எதிர்கொண்ட கொழும்பு கேட்வே, 10–8 என வெற்றியீட்டியது.



# டி20 உலகக் கிண்ணத்திற்காக இலங்கை அணியினர் பயணம்



டி20 உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை அணி நேற்று (14) காலை கட்டுநாயக்க விமானநிலையத்தில் இருந்து அமெரிக்காவை நோக்கி புறப்பட்டுச் சென்றது.

எமிரேட்ஸ் விமானசேவையின் ஈ.கே. 651 விமானத்தில் டுபாய் நோக்கி பயணித்த இலங்கை அணி அங்கிருந்து அமெரிக்காவின் நியூயோர்க் நகரை நோக்கி பயணிக்கவுள்ளது.

உலகக் கிண்ணத்தில் பங்கேற்கும் இலங்கை அணியில் 15 வீரர்கள், 4 மேலதிக வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்கள், முகாமையாளர்கள், மருத்துவர், உடல் தகுதி நிபுணர் என 25 பேர் அடங்குகின்றனர். எனினும் ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்றிருக்கும் மஹீஷ் தீக்ஷன நேற்று அமெரிக்கா நோக்கி புறப்பட்ட அணியில் இடம்பெற்றிருக்கவில்லை.

அதேபோன்று குசல் மெண்டிஸ் மற்றும் அசித்த பெர்னாண்டோ இருவருக்கும் இன்னும் அமெரிக்க விசா கிடைக்காததால் நேற்றைய தினம் அவர்கள் இலங்கை அணியுடன் இணையவில்லை. டி20 உலகக் கிண்ணப் போட்டி எதிர்வரும் ஜூன் 01 தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் ஆரம்ப சுற்றில் டி குழுவில் இடம்பெற்றிருக்கும் இலங்கை எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி முதல் போட்டியில் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்தப்போட்டி நியூயோர்க்கில் நடைபெறவிருப்பதோடு குழு நிலையில் இலங்கை ஆடும் முதல் மூன்று போட்டிகளும் அமெரிக்காவிலேயே நடைபெறவுள்ளன.

இந்நிலையில் அமெரிக்க ஆடுகளங்கள் மற்றும் அங்குள்ள சூழலுக்கு தயாராகும் வகையிலேயே இலங்கை அணியினர் முன்கூட்டியே அங்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை ஏ இன்னிங்ஸ் வெற்றி

ஆப்கானிஸ்தான் ஏ அணிக்கு எதிரான ஒரே ஒரு உத்தியோக பூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை ஏ அணி இன்னிங்ஸ் மற்றும் 26 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

கொழும்பு, பீ. சரா ஓவல் மைதானத்தில் நேற்று நிறைவடைந்த இந்தப் போட்டியில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்கு 237 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த ஆப்கானிஸ்தான் ஏ அணி 62.3 ஓவர்களில் 211 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதன்போது இலங்கை ஏ அணி சார்பில் அபாரமாக பந்து வீசிய வலது கை வேகப்பந்து வீச்சாளரான நிசல தாரக்க 11.3 ஓவர்களில் 42 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.



வலது கை சுழற்பந்து வீச்சாளர் நிஷான் பீரிஸ் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

குறிப்பாக ஆப்கான் ஏ அணி 108 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை இழந்த நிலையிலேயே நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்ததோடு அந்த அணி மேலும் 103 ஓட்டங்களை பெறுவதற்குள் எஞ்சிய 8 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

முன்னதாக போட்டியின் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணி சொனால் தினுஷவின் சதத்தின் (145) உதவியோடு 435 ஓட்டங்களை பெற்றது. இந்நிலையில் ஆப்கான் ஏ அணி தனது முதல் இன்னிங்ஸில் 198 ஓட்டங்களுக்கே சுருண்டு இரண்டாவது இன்னிங்ஸில் பலோ ஒன் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆப்கான் ஏ அணி, இலங்கை ஏ அணிக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் 2–3 என தோல்வியை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

## விளம்பரப் பலகை விழுந்து 14 பேர் பலி



இந்தியாவின் மும்பை நகரில் திடீர் புயல்காற்றினால் இராட்சத விளம்பரப் பலகை ஒன்று விழுந்து குறைந்தது 14 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 70க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இரண்டு கூடைப்பந்து மைதானங்கள் அளவு பெரிதான அந்த விளம்பரப் பலகை நேற்று முன்தினம் (13) வீடுகள் மற்றும் பெற்றோல் நிரப்பு நிலையம் ஒன்றின் மீது விழுந்துள்ளது. தொடர்ந்தும் சிலர் சிக்கி இருக்கும் நிலையில் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவசர சேவை பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விளம்பரப் பலகை சட்டவிரோதமாக வைக்கப்பட்டிருந்ததாக அதிகாரிகள் கூறினர். இது தொடர்பில் விசாரணை நடத்த மஹாராஷ்டிரா அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த விளம்பரப் பலகை விழுந்தபோது, மழை காரணமாக அங்குள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் ஒதுங்கி நின்ற பலர் அனர்த்தத்தை எதிர்கொண்டனர். அங்கு நின்றிருந்த வாகனங்களும் சேதமடைந்தன.

## ஆப்கான்–பாகிஸ்தான் எல்லையில் ஆர்ப்பாட்டம்



ஆப்கானிஸ்தானில் இருந்து செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மற்றும் விசாவுடன் மட்டுமே பாகிஸ்தானுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கும் புதிய நடைமுறைக்கு எதிராக ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையிலுள்ள சாமன் பிரதேசத்தில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

உள்ளூர் மக்களும், வர்த்தகர்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கடந்த ஒக்டோபர் முதல் இம்முறைக்கு எதிராகப் போராட்டங்களை மேற்கொண்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பாதுகாப்பு காவலரணைத் தாக்கி கட்டிடத்தை முற்றுகையிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், பாதுகாப்பு பணியாளர்கள் மீது கற்களையும் வீசியுள்ளனர். இதனால் ஆர்ப்பாட்டம் வன்முறையாக மாறியதோடு ஒருவர் கொல்லப்பட்டும் சிலர் காயமடைந்தும் உள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

# காசாவின் ரபா, ஜபலியாவில் இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேற்றம்: கடும் மோதல்

## உதவி வாகனங்கள் மீது இஸ்ரேலியர் தீ வைப்பு

வடக்கு காசாவின் ஜபலியா நகரில் தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் இஸ்ரேலியப் படை அங்குள்ள வெளியேற்ற பகுதிகள் மற்றும் தற்காலிக முகாம்களை சுற்றிவளைத்திருப்பதோடு தெற்கில் ரபா நகரில் தொடர்ந்து முன்னேறி வருகிறது.

காசாவின் தெற்கு மற்றும் வடக்கில் மோதல்கள் உக்கிரமடைந்திருக்கும் நிலையில் இஸ்ரேலிய போர் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் காசாவெங்கும் நேற்றும் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தியது.

கடந்த திங்கட்கிழமை (13) நள்ளிரவில் இஸ்ரேலிய போர் விமானங்கள் மத்திய காசாவின் நுஜைரத் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்திய தாக்குதலில் சிறுவர் உட்பட 14 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மூன்று மாடிகள் கொண்ட கட்டடத்தின் மீதே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தக் கட்டத்தில் சுமார் 100 பேர் வரை தங்கி இருந்திருப்பதோடு அண்மையில் ரபாவில் இருந்து வெளியேற்றப்பட்டவர்களும் இங்கே அடைக்கலம் பெற்றிருந்துள்ளனர். இடிபாடுகளில் பலர் சிக்கி இருப்பதாக அஞ்சப்படும் நிலையில் அவர்களை காப்பற்ற போதுமான உபகரணங்கள் இல்லை என்று மீட்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஜபலியா அகதி முகாம் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் கடும் பலத்துடன் தொடர்ந்து படை நடவடிக்கையை முன்னெடுப்பதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய டாங்கிகள், புல்டோசர்கள் மற்றும் கவச வாகனங்கள் அங்குள்ள வெளியேற்ற பகுதிகள் மற்றும் தற்காலிக முகாம்களை சுற்றிவளைத்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதில் இஸ்ரேலின் பயங்கர தாக்குதல்களால் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலைகளே தற்காலிக முகாம்களாக பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறைந்தது மூன்று வெளியேற்ற மையங்களை இஸ்ரேலிய டாங்கிகள் சுற்றிவளைத்துள்ளன. அங்கு சிக்கி உள்ள மக்கள் சிவில் பாதுகாப்பு திணைக்களத்திடம் உதவி கோரி அழைப்பு விடுத்துள்ளனர். ஜபலியா



நகரில் ஹமாஸ் தோற்கடிக்கப்பட்டதாக இஸ்ரேல் பல மாதங்களுக்கு முன்னரே குறிப்பிட்ட நிலையிலேயே அங்கு மீண்டும் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது. வடக்கில் உள்ள காசா நகரின் செய்தூன் பகுதியில், புறநகர் பகுதி ஊடாக டாங்கிகள் செல்வதற்கு புதிய பாதையை அமைக்கும் வகையில் அங்குள்ள வீடுகளை புல்டோசர்கள் தகர்த்து வருகின்றன.

75 ஆண்டுகளுக்கு முன் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் இந்த பரந்து விரிந்துள்ள ஜபலியாவுக்குள் ஆழ ஊடுருவ முயற்சி மேற்கொள்ளும் இஸ்ரேலியப் படை கடும் செல் தாக்குதல்களை நடத்தி வருவதாக அங்கிருப்பவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மறுபுறம் கிழக்கு ரபாவுக்குள் இஸ்ரேலிய டாங்கிகள் ஆழ ஊடுருவி வருவதோடு அந்த டாங்கிகள் அல் ஜினைனா, அல் சலாம் மற்றும் அல் பிராசில் பகுதிகளுக்குள் நுழைந்திருப்பதாக அங்குள்ள குடியிருப்பாளர்களை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

'இந்த டாங்கிகள் இன்று (14) காலை சலாஹுதீன் வீதியின் மேற்காக பிராசில் மற்றும் ஜினைனா பகுதிகளுக்குள் நுழைந்தன' என்று குடியிருப்பாளர் ஒருவர் தெரிவித்தார். 'அவை வீதிகளில் நிலைகொண்டிருப்பதோடு மோதல்களும் இடம்பெற்று வருகின்றன' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் இராணுவம் கடந்த வாரம் எகிப்துடனான ரபா எல்லை கடவையை கைப்பற்றி மக்களை வெளியேறும் உத்தரவை பிறப்பித்த நிலையில் இதுவரை சுமார் 450,000 பேர் வெளியேற்றப்பட்டிருப்பதாக பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

'மக்கள் தொடர்ந்து சோர்வு, பசி மற்றும் பயத்தை எதிர்கொள்கின்றனர்' என்று அந்த ஐ.நா நிறுவனம் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளது. 'எந்த இடமும் பாதுகாப்பாக இல்லை. உடன் போர் நிறுத்தம் ஒன்றே ஒரே நம்பிக்கையாக உள்ளது' என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

ரபாவில் இஸ்ரேலின் படை நடவடிக்கை போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான பேச்சுவார்த்தையில் பின்னடைவை ஏற்படுத்தி இருப்பதாகவும் கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவும் கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது அப்துல்ரஹ்மான் அல் தானி தெரிவித்துள்ளார்.

கிழக்கு அல் சலாம் பகுதியில் அல் யாஸின் 105 ஏவுகணையை பயன்படுத்தி இஸ்ரேலிய வாகனம் ஒன்றை தாக்கி அழித்ததாகவும் சிலர் கொல்லப்பட்டு மற்றும் காயமடைந்திருப்பதாகவும் ஹமாஸ் ஆயுதப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானோர் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபா மீது படை நடவடிக்கை ஒன்றை முன்னெடுப்பதற்கு இஸ்ரேல் தயாராக வருகிறது.

இந்நிலையில் எதிர்வரும் நாட்களில் முழு அளவில் படையெடுப்பு ஒன்றை ஆரம்பிப்பதற்கு ரபா நகர எல்லையில் இஸ்ரேலிய இராணுவம் போதுமான துருப்புகளை குவித்து வைத்திருப்பதாக அமெரிக்க நிர்வாகத்தின் மூத்த அதிகாரிகள் இருவர் குறிப்பிட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் ரபா மீது படையெடுத்தால் இஸ்ரேலுக்கான ஆயுதங்களை நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரித்திருக்கும் சூழலில் அவ்வாறான படையெடுப்பு ஒன்றை முன்னெடுப்பதில் உறுதியற்ற சூழல் இருப்பதாகவும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை ரபா நகருக்கு அருகில் ஐரோப்பிய மருத்துவமனைக்கு பயணித்த ஐ.நா. வாகனத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஐ.நா. பணியாளர் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காசாவில் இஸ்ரேல் போர் தொடுத்தது தொடக்கம் அங்கு சர்வதேச பணியாளர் ஒருவர் கொல்லப்பட்ட முதல் சம்பவமாக இது இருப்பதோடு இந்தத் தாக்குதலுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்ட ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், முழுமையான விசாரணை ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எனினும் போர் வலயத்திலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் 82 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 234 பேர் காயமடைந்ததாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் இஸ்ரேலின் தாக்குதல்களில் காசாவில் 35,173 பேர் கொல்லப்பட்டு மேலும் 79,061 பேர் காயமடைந்திருப்பாக அந்த அமைச்சு கூறியது.

காசாவுக்கான உதவிகளை இஸ்ரேல் முடக்கி வரும் நிலையில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை ஊடாக ஜோர்தானில் இருந்து காசாவுக்கு செல்லும் மனிதாபிமான உதவி வாகனங்கள் மீது இஸ்ரேலிய குடியேறிகள் தாக்குதல் நடத்தி தீ வைத்துள்ளனர். இந்தத் தாக்குதல் தொடர்பான படங்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

'ஜோர்தானில் இருந்து மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக காசா செல்லும் இந்த வாகனத் தொடரணிகள் தாக்கி கொள்ளையடிக்கப்பட்டிருப்பது மூர்க்கத்தனமானது' என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெக் சுலிவான் சாடியுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 15ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.